விலை ரூபா 25.00

தமிழரின் தன்மானத்துக்கு சவால் பக்கம் 08


மூன்று கிராமங்கள் புதையுண்டன பக்கம் 09


ஈரானிடம் நிறுத்தியது கொரியா பக்கம் 10


பெட்ரா முன்னேற்றம் பக்கம் 23




www.onlineuthayan.com

★ உதயன்

பக்கங்கள் : 28

சுடர் 27
கதிர் 215

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 14 வியாழக்கிழமை (28/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## ரூபாவின் பெறுமதி கடுமையான வீழ்ச்சி

கொழும்பு,ஜூன்

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நேற்றுப் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

நேற்று அந்நியச் செலாவணிப் பரிமாற்றங்களின் போது அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 04

# ஆயுதக் கலாசாரத்தினை மீண்டும் முனைப்புடன் அரங்கேற்ற முயற்சி

### கவன ஈர்ப்புப் போராட்டம் தொடர்பில் யாழ். நீதிவான் மன்றில் தீர்ப்பில் கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 28

தமிழ் மக்களின் நிலங்களை இராணுவத்தினர் அபகரிப்பதை எதிர்த்துத் தமிழ்த் தேசிய முன்னணியால் யாழ். நகரில் கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்ட கவன ஈர்ப்புப் போராட்டம், ஜனநாயக மறுப்பையும் ஆயுதக் கலாசாரத்தையும் மீண்டும் முனைப்புடன் அரங்கேற்றும் முயற்சி என்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்று தெரிவித்துள்ளது.

இந்தக் கவனஈர்ப்புப் போராட்டத்துக்கு பொலிஸார் யாழ். நீதிவான் மன்றிடமிருந்து தடையுத்தரவு பெற்றிருந்தனர். இந்தத் தடையுத்தரவை நீக்கக் கேட்டு தமிழ்த் தேசிய முன்னணி சார்பில் மனுச் செய்யப்பட்டது. அந்த மனு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

சட்டமுறைகளுக்கு அமைவாக இந்த மனு செய்யப்படவில்லை என்பதால், வழங்கப்பட்ட தடையை மீண்டும் உறுதி செய்வதாக நீதிவான் மா.கணேசராசா தீர்ப்பளித்தார்.

அவரது தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இந்த வழக்கிலுள்ள பிரச்சினையை ஆரோக்கியமான, புத்திசாலித்தனமான, சட்ட முறையான நட 04

# தேர்தல் செலவு 25 கோடி ரூபா

### திறைசேரியிடம் கேட்க முடிவு

கொழும்பு, ஜூன் 28

கலைக்கப்பட்ட கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு 25 கோடி ரூபா தேவையெனத் தேர்தல்கள் திணைக்களம் மதிப்பிட்டிருக்கிறது எனத் தெரிகிறது. இதற்கான நிதியைப் பெறத் திறைசேரியிடம் கோரிக்கை விடுக்க நேற்று தேர்தல்கள் திணைக்களம் தயாராகியது எனத் திணைக்கள வட்டாரங்கள் 'உதயனி'டம் தெரிவித்தன.

தேர்தலுக்கான பாதுகாப்பு, வாக்குச்சீட்டு அச்சிடல், போக்குவரத்து, வாக்களிப்பு ஏற்பாடுகள் உட்படப் பல்வேறு விடயங்களுக்காக இந்த நிதி தேவைப்படுவதாக தேர்தல்கள் திணைக்களம் மதிப்பிட்டிருக்கிறது. திறைசேரியிடமும் போதிய பணம் கையிருப்பில் இல்லாத நிலையில் அரசு இந்த மூன்று மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்த முன்வந்திருந்தமை குறித்து எதிர்க்கட்சிகள் பலத்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. எனினும் அந்த எதிர்ப்புகள் எதனையும் கருத்தில் கொள்ளாது அரசு மூன்று மாகாண சபைகளையும் கலைத்துள்ளது.

இதற்கிடையில் கலைக்கப்பட்டுள்ள மாகாணசபைகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பணிகளில் ஓர் அம்சமாக முக்கியமான அரச திணைக்களங்கள் மற்றும் துறைகளுடன் பேச்சுக்களை நடத்தவும் தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## சம்பந்தன் நாடு திரும்பியதும் கிழக்கு வேட்பாளர்கள் தெரிவு

கொழும்பு, ஜூன் 28

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவது உறுதியான விடயம். இந்தியாவில் தங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடு திரும்பியதும் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவு இடம்பெறும் என கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடும் என்பது உறுதியான விடயமாகும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காணும் விடயத்தில் இலங்கை அரசு இன்னும் சாதகமான சமிக்ஞைகளைவெளிப்படுத்தவில்லை எனச் சுட் 04

# கிழக்கு மாகாண சபைக்கு செப்ரெம்பர் 8 இல் தேர்தல்

### சப்ரகமுவ மற்றும் வடமத்திய சபைகளுக்கும் அதே தினத்தில் வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 28

கலைக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை செப்ரெம்பர் 8ஆம் திகதி நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தன. அன்றைய தினத்தில் சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

மேற்படி மூன்று மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு விட்டன எனத் தெரிவித்த வர்த்தமானி அறிவித்தலும் நேற்றிரவு வெளியிடப்பட்டது.

வேட்பு மனுத் தாக்கல் கால எல்லை ஜூலை 12 முதல் 19 ஆம் திகதிவரை இருக்கலாமென எதிர்பார்க்கப்படு 04

## காணி அபகரிப்புக்கு எதிராக மன்னாரிலும் போராட்டம்

மன்னார்,ஜூன்28

மன்னார் மாவட்டத்தில் மீனவர்களுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பாஸ் நடைமுறை மற்றும் மன்னார் மாவட்டத்தில் படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பு ஆகியவற்றுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர் வரும் வாரங்களில் மன்னார் நகரில் மாபெரும் உண்ணாவிரதம் ஒன்றை நடத்தவுள்ளது எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

போர் முடிவடைந்த நிலையில் மன்னார் மாவட்ட மீனவர்கள் சுதந்திரமான முறையில் கடல் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற் 04

## வேம்படியில் புதிய அதிபரை உடன் பதவியேற்க அறிவுறுத்து

### கல்வி அமைச்சர் நேற்று விடுத்தார்

யாழ்ப்பாணம், ஜூன்28

வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர் பொறுப்பை உடனடியாக ஏற்குமாறு, புதிதாக நியமிக்கப்பட்ட வேணுகா சண்முகரத்தினத்துக்கு நேற்று உத்தரவிட்டார் கல்வி அமைச்சர்.

பதவியைப் பொறுப்பேற்கையில் யாராவது குழப்பம் விளைவித்தால் அல்லது பதவியைப் பொறுப்பேற்க விடாது தடுத்தால் கல்வித் திணைக் 04



## புகலிடம் கோருவோரின் ஆவணங்களை கூர்ந்து அவதானிக்க வேண்டும்

கொழும்பு,ஜூன் 28

புகலிடக் கோரிக்கையாளர்களின் ஆவணங்களை உன்னிப்பாகப் பரிசோதிக்க வேண்டுமென இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்களிடம் அரசு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து வெளிநாடுகளில் அடைக்கலம் கோரி வருவதாகவும், இதனைத் தடுக்கும் 04

## கிறிஸ்மஸ் தீவுக்கு அருகே மற்றுமொரு படகு விபத்து

### 150 பேரின் கதி என்னவென்று தெரியவில்லை

கான்பரா,ஜூன் 28

ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளை அண்டிய கடற்பரப்பில் மற்றுமொரு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகு ஒன்றே இவ்வாறு பரிதாபமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தப் படகில் சுமார் 150 பேர் பயணம் செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அருகில் பயணம் செய்த இரண்டு வர்த்தகக் கப்பல்கள் படகுப் பயணிகளை மீட்கும் பணிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்துக்கு இரண்டு ஆஸ்திரேலியக் கடற்படைக் கப்பல்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 04

## குடாநாட்டின் சனத்தொகை 20 சதவீதத்தினால் வீழ்ச்சி

கொழும்பு,ஜூன் 28

யாழ்.குடாநாட்டின் சனத்தொகையில் 20 சத வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குடிசன மற்றும் தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

30 வருடங்களின் பின் இலங்கையில் மேற்கொள்ள [illegible] குடிசன மதிப்பீட்டின் படி இலங்கையின் தற்போதைய சனத்தொகை 20,227,597 எனவும் அது அறிவித்துள்ளது.

போரின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டில் அடிப்படையில் யாழ். குடாநாட்டில் 20 சதவீதமான சனத்தொகை குறைந்துள்ளதாக அது மேலும் கூறியுள்ளது.

யாழ். குடாநாட்டின் சனத்தொகை 1981ஆம் ஆண்டு [illegible] ஆக காணப்பட்டது. 2012ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் 04

## ஓமந்தையில் லொறிக்குள் துப்பாக்கி உதிரிப்பாகங்கள்

### இருவர் பொலிஸாரால் கைது

வவுனியா,ஜூன் 28

ஒரு தொகை துப்பாக்கி உதிரிப்பாகங்களை ஏற்றிச் சென்ற லொறியொன்று ஓமந்தைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - பரந்தனில் இருந்து சிலாபம் நோக்கிக் குறித்த லொறி பயணித்துக் கொண்டிருந்ததாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓமந்தை சோதனைச் சாவடியில் லொறி பரிசோதனை செய்யப்பட்ட போது அதிலிருந்து ஒரு தொகைத் துப்பாக்கி உதிரிப்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. லொறியில் பயணித்த நபரும் லொறியின் சாரதியும்கைது செய்யப்பட்டு ஓமந்தைப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுவருகின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகப் போராட்டங்களுக்கு வலுவூட்ட புலம்பெயர் நாடுகளிலும் கவனயீர்ப்பு

லண்டன்,ஜூன் 28

தாயகத்தில் நில அபகரிப்புக்கு எதிரான மக்கள் போராட்டத்துக்கு வலுவூட்டும் வகையில், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி ஆகிய நாடுகளில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழர் தாயகத்தின் திருமுறிகண்டியில் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்த நிலையில் அதற்குச் சமாந்தரமாக அதேநாளில் புலம்பெயர் நாடுகளிலும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றிருந்தன. நாடுகடந்த தமிழீழ அரசின் ஒருங்கிணைப்பில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றிருந்தன.







அமெரிக்கா

நியூ யோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்துக்கு முன்னால் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் பங்கெடுத்திருந்தார்.

பிரிட்டன்

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் அதிகாரபூர்வ இல்லத்துக்கு முன்பாக இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தது. பெருந்திரளான மக்கள் பங்கெடுத்திருந்ததோடு தமிழர் அமைப்பு பிரதிநிதிகள் பலரும் பங்கெடுத்திருந்தனர்.

கனடா

தமிழர் தாயகத்தில் இருந்து இராணுவமே வெளியேறு என்ற முழக்கத்துடன், நில அபகரிப்புக்கு எதிரான கவனயீர்ப்புப் போராட்டமாக, ரொறன்ரோவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் போராட்டம் இடம்பெற்றது.

ஜேர்மனி

பொன் நகரில் உள்ள ஐ.நாவின் காரியாலயத்துக்கு முன்னால் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றிருந்தது.

தாயகப் போராட்டங்களுக்குச் சமாந்தரமாக இவ்வாறான போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென நாடுகடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது. (த)

## ஹைகோப் வழக்கு மீதான விசாரணை ஜூலை 12 இல்

கொழும்பு, ஜூன் 28

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலகரத்ன மீதான ஹைகோப் வழக்கை விசாரிக்க நீதிமன்றம் திகதி குறித்துள்ளது.

சந்தேகநபரான தனுன திலகரத்ன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஆனந்த விஜேசேகர நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் ஹைகோப் வழக்கை எதிர்வரும் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகக் கொழும்பு பிரதான மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்‌ஷ திகதி குறித்தார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் இராணுவத்திற்கு ஆயுதம் கொள்வனவு செய்யப்பட்டபோது அதில் ஊழல் இடம்பெற்றதாகக்கூறி சரத் பொன்சேகா, தனுன திலகரத்ன உள்ளிட்ட சிலர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த வழக்கின் பிரதான சந்தேகநபரான சரத் பொன்சேகா ஹைகோப் வழக்கில் இருந்து அண்மையில் விடுதலைசெய்யப்பட்டார்.

இதன்படி குறித்த வழக்கு எதிர்வரும் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில் இரண்டாவது சந்தேகநபரான தனுன திலகரத்னவை நீதிமன்றில் ஆஜராக்குமாறு நீதிபதி சுனில் ராஜபக்‌ஷ குறிப்பிட்டுள்ளார். (த)

## ஆஸ்திரேலியா உறுதியாக இருந்தால் படகுகளில் செல்வோரைத் தடுக்கலாம்

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்பவர்களைத் தடுப்பது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசே கடுமையாகச் செயற்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

ஆஸ்திரேலியாவுக்கான சட்டவிரோதக் குடியேற்ற விவகாரம் தொடர்பில் அந்த நாட்டு அரசுடன் மிகவும் நெருக்கமான முறையில் செயற்பட்டு வருகின்றோம்.

இருப்பினும் சட்ட விரோதமாகக் குடியேறுபவர்களை எக்காரணம் கொண்டும் பொறுப்பேற்க முடியாது என்ற கொள்கையில் ஆஸ்திரேலிய அரசு உறுதியாக இல்லாத வரை இதனை முற்றாக ஒழிப்பது கடினம்.

சட்ட விரோதமாகப் படகுகள் மூலம் ஆஸ்திரேலியா செல்வோர் தொகை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் இரு நாட்டு அரசுகளும் பல்வேறு மட்டத்தில் இரு தரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுக்கும் மேலதிகமாகப் பாளி டயலொக், ஆசியான் பேரவை ஆகியவற்றிலும் ஆஸ்திரேலியாவுக்கான சட்டவிரோத குடியேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன.

இதனைத் தவிர இலங்கைப் பொலிஸார்,கடற்படையினர், கரையோரப் பாதுகாப்புப் படையினர் முழுநேரக் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலும் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவிலிருந்து எப்படியோ படகுகள் மூலம் சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்வது தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

ஆஸ்திரேலிய அரசு, தாம் சர்வதேசச் சட்ட கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டியுள்ளதால் தமது நாட்டில் தஞ்சமடைவோரைப் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயத்திலிருப்பதாக வலியுறுத்துகின்றனர். சர்வதேசச் சட்டக் கொள்கையை நாமும் ஏற்றுக் கொள்கிறோம். அதற்கு மறுப்புத் தெரிவிக்க வில்லை. இருப்பினும் ஆஸ்திரேலிய அரசு இந்த விடயத்தில் தமது கொள்கையைச் சற்றுத் தளர்த்தி மாற்றுக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்-என்றார். (த)

## ஐ.தே.க. எம்.பிக்கள் நால்வர் பொன்சேகாவுடன் இணைவு

கொழும்பு,ஜூன் 28

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் செயல்திட்டமொன்று தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

புத்திக்க பத்திரன, பாலித்த ரங்கே பண்டார, பாலித தெவரப்பெரும, அசோக அபேசிங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது மாவட்டங்களில் இந்தச் செயல்திட்டத்துக்கான வைபவங்களை ஒழுங்கு செய்துள்ளனர்.

இதன் முதல் நிகழ்வு அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன தலைமையில் மாத்தறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் இரண்டாம் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி நடத்த திட்டமிட்டுள்ளதுடன் இதனைப் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார பொறுப்பேற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கு மேலதிகமாக சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் மேலும் 25 வைபவங்களை ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ தேர்தல் தொகுதியின் தோப்புச் சந்தியில் ஆரம்பித்து நைனாமடம், வென்னப்பு நகர்ச் சந்தி, மாரவில, மகவெவ நகர், மாதம்பை தேவாயலம் ஆகிய இடங்களில் இந்த வைபவங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மாதம்பை தேவாயலத்தில் நடைபெறும் பூஜை வழிபாடுகளின் பின்னர் தொடர்ச்சியாக முக்கிய நகரங்களில் பொன்சேகாவுக்கான வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (த)

## இலங்கையில் கொலை அரசியல்

### அனோமா கருத்து



கொழும்பு,ஜூன் 28

இலங்கையில் தற்போது நிலவுவது கொலை அரசியலே என்று சரத் பொன்சேகாவின் மனைவியான அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

பாதுக்கைப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொலை அரசியல் இல்லாத நாட்டை உருவாக்க வார இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் சமய வகுப்புக்கள் தேவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, ஒழுக்கமான நாட்டை உருவாக்கவெனத் தொடர்ந்தும் சரத் பொன்சேகாவுடன் இணைந்து செயற்பட உள்ளதாக தெரிவித்தார். (த)

## நாட்டின் பொருளாதாரமும் இராணுவமயமாகியுள்ளது

### அரசைச் சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஜூன் 28

நாட்டின் பொருளாதாரம் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது. பொருளாதார முகாமைத்துவம் முற்றாக இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷா டி சில்வா கூறினார்.

ரூபாவைக் குறிப்பிட்ட விலைக்கு மேல் விற்பனை செய்யுமாறு அனைத்து வங்கிகளுக்கும் மத்திய வங்கி நேற்று முன்தினம் அறிவித்தலொன்றை அனுப்பியது. இதன் காரணமாக நேற்று முன் தினம் தள வணிகம் நடைபெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை தொடர்ச்சியாக அதிகரிக்கிறது. இதை குறைப்பதற்கு அரசிடம் இரு தெரிவுகளே உள்ளன. கடன் வாங்குவது அல்லது வரியை அதிகரிப்பது ஆகியனவே இந்தத் தெரிவுகள் என ஹர்ஷா டி சில்வா கூறினார்.

இதன் காரணமாக, உலக சந்தையில் சீனி, பெற்றோல், டீசல் போன்ற பொருள்களின் விலை குறைந்த போதிலும் இலங்கையில் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அரசு தயங்குகிறது எனவும் அவர் கூறினார். (த)

## இலங்கை வரும் சிவ்சங்கர் மேனன் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் தரார்

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர் கெஹெலிய

கொழும்பு,ஜூன் 28

வடக்கு மாகாணத் தேர்தலை வலியுறுத்தவோ அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு அழுத்தம் கொடுக்கவோ இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் இலங்கைக்கு வரவில்லை. மாறாக வழமையானதும் பொதுவானதுமான பயணமாகவே அவரின் வருகை காணப்படும் என்று அரசு தெரிவித்தது.

மேனனின் வருகையை மையப்படுத்தி அரசியல் இலாபம் பெற்றுக் கொள்ளப் பலர் முயற்சிக்கின்றனர். இவர்களே போலியான தகவல்களை பிரசாரம் செய்து வருகின்றனர். எவ்வாறாயினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சிறந்த இராஜ தந்திர உறவுகள் காணப்படுகின்றன என்று ஊடக அமைச்சரும் அரச பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார். இந்த பயணமானது இராஜ தந்திர ரீதியிலான பொதுவான விஜயமாகும். வடக்கு மாகாண தேர்தல், அரசியல் தீர்வு மற்றும் ஆணைக்குழுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங்களை வலியுறுத்தி சிவ் சங்கர் மேனன் இலங்கைக்கு வரவில்லை. அவ்வாறானதொரு நோக்கத்தில் இந்தியா அவரை அனுப்பவுமில்லை.

மேனனின் வருகையைப் பயன்படுத்திச் சிலர் அரசியல் இலாபம் தேடிக்கொள்ள முயற்சிக்கின்றனர். அழுத்தங்களுக்கு அடி பணிந்து உள்நாட்டின் விடயங்களை முன்னெடுக்கும் நிலைப்பாட்டில் அரசு இல்லை. தேசிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக் கூடிய பொறிமுறைகள் இலங்கை வசம் உள்ளது. எனவே இந்தியாவோ ஏனைய நாடுகளோ தலை யிடவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படாது.

சிவ் சங்கர் மேனனின் வருகையினை உள் நோக்கத்துடன் பார்ப்பதை அரசு ஏற்றுக்கொள்ளாது. ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை சந்தித்து பொதுவான விடயங்கள் குறித்தே இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் பேசுவார்-என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றில் கூறப்படும் விடயங்களை விமர்சிக்க நீதிமன்றுக்கு அதிகாரமில்லை

## சுமந்திரன் எம்.பி. நேற்று சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 28

நாடாளுமன்ற சிறப்புரிமை காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறும் விடயங்களை விமர்சிப்பதற்கு நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை. அங்கு கூறும் கருத்துக்களை விமர்சனத்துக்கு உட்படுத்த முடியாது என நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத் தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் யாழ். நீதிமன்றில் நேற்றுச் சுட்டிக்காட்டினார்.

சுமந்திரன் நாடாளுமன்றில் கூறியதாக வெளியான செய்தி தொடர்பில் நீதிவான் மா.கணேசராஜா தெரிவித்த விமர்சனம் குறித்தே அவர் இப்படிச் சுட்டிக்காட்டினார். ''அதையடுத்து அது சம்பந்தமாகத் தான் மன்னிப்புக் கோருகிறார் என நீதிவான் மா.கணேசராஜா தெரிவித்தமை அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதனைத் தான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்று சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கில் காணி சுவீகரிப்புக்கு எதிராக யாழ். நகர பஸ் நிலையம் முன்பாக நடத்தவிருந்த மக்கள் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு யாழ். நீதிமன்றம் தடை விதித்திருந்தது. அந்தத் தடையை வாபஸ் பெறுமாறு அல்லது மாற்றியமைக்குமாறு கோரி கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாட்டாளர்களது சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட நகர்தல் பத்திரம் மீதான விசாரணை நடந்த போது அங்கு சுமந்தின் இருந்தார்.

''நான் நடைமுறையில் தெரிவித்த கருத்துக்களை யாழ். நீதிமன்றில் நீதிவான் விமர்சித்ததாக அறிந்தேன். தான் இல்லாத சமயம் அவ்வாறு விமர்சிப்பது தவறானது. அதுபற்றி தெளிவுபடுத்தவும் தேவையேற்படின் மன்றுக்கு உதவவும் (இன்று) நேற்று வந்துள்ளேன். அதனைக் கூறுங்கள்'' என சுமந்திரன் மன்றில் தெரிவித்தார்.

''ஆர்ப்பாட்டங்களை நடத்தும் போது பொலிஸார் முன்கூட்டியே நீதிமன்றினூடாக அதனைத் தடுத்து விடுகின்றனர். இவ்வாறான ஆர்ப்பாட்டங்களைத் தடுத்து நிறுத்தும் உரிமை நீதிவான் நீதிமன்றுக்குக் கிடையாது. மாவட்ட நீதிமன்றுக்கே உண்டு'' என சுமந்திரன் நாடாளுமன்றில் கூறியிருந்தார் என வெளியான செய்தி தொடர்பிலேயே நீதிவான் கடந்த வெள்ளிக்கிழமை விமர்சித்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

''இது விடயத்தில் விமர்சிக்க நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை. தற்போது ஓய்வு பெற்றுள்ள உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மூன்று பேர் இத்தகைய சம்பவங்களுக்காக முன்னர் நாடாளுமன்றுக்கு அழைக்கப்பட்டு மன்னிப்புக் கோரிய சம்பவங்களும் நாடாளுமன்ற சரித்திரத்தில் உண்டு'' என சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து நீதிவான், இது சம்பந்தமாக தான் மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை ஆர்ப்பாட்டங்களைத் தடுக்கும் நீதிமன்றங்களின் உரிமை குறித்து நாடாளுமன்றில் தான் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் சுமந்திரன் மன்றில் தெரிவித்தார். (உ-4)

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு சிவாஜிலிங்கம் மீது தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினருமான எம்.ஜி.சிவாஜிலிங்கத்துக்கு எதிராக யாழ். பொலிஸார் யாழ். நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்தனர்.

சந்தேக நபருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு இந்த வழக்கை ஒத்திவைத்தார் நீதிவான் மா.கணேசராஜா.

வடக்கில் தொடரும் காணி அபகரிப்புக்கு எதிராக யாழ். நகர பஸ் நிலையம் முன்பாக கடந்த 18 ஆம் திகதி நடத்தவிருந்த கவனஈர்ப்புப் போராட்டத்துக்கு யாழ். நீதிமன்றம் தடை விதித்தது. அந்தத் தடை உத்தரவின் பிரதியை சிவாஜிலிங்கம் கிழித்து எறிந்தார் என்று செய்திகள் வெளியாகி இருந்தன.

இவ்வாறு நீதிமன்ற உத்தரவு கிழித்து எறியப்பட்டதைத் தான் கண்டார் என யாழ். பொலிஸ் நிலைய தலைமை இன்ஸ்பெக்டர் சமன் சிகேரா நீதிமன்றில் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில் சிவாஜிலிங்கத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ-4)

# நயினாதீவுப் பிரதேசத்துக்கு வலுக்குறைந்த மின்விநியோகம்

## பொதுமக்கள் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

நயினாதீவுப் பிரதேசத்துக்கு 24 மணிநேர மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளபோதும் மின்சாரம் வலுக்குறைந்து காணப்படுவதாகவும் இதனால் மின் உபகரணங்களை இயக்க முடியாத நிலை உள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

நயினாதீவுக்கெனக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய மின்பிறப்பாக்கி மூலம் மின் வழங்கப்படுகின்ற போதும் அது வலுக்குறைந்ததாக உள்ளமை குறித்துத் தாம் மின்சார சபை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் மக்கள் மேலும் கூறினர்.

நீண்டகாலமாக மின்சாரத்தை எதிர்பார்த்திருந்த மக்களுக்குத் தற்போது வலுக்குறைந்த மின்விநியோகம் இடம்பெறுகின்றமை பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாகவும் தேவைக்கேற்றவாறு மின் உபகரணங்களை அவர்களால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அங்கு 24 மணி நேர மின்விநியோகம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து மின்சாரத்தின் நுகர்வும் அதிகரித்துள்ளது. எனவே மின்சார சபை அதிகாரிகள் அதற்கேற்றவாறு மின்சாரத்தின் வலுவை அதிகரித்து சீரான மின்விநியோகம் கிடைக்கவும் வழி ஏற்படுத்தப்பட வேண்டும் எனப் பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

# மதகு உடன் திருத்தப்படும்

அனலைதீவு பிரதான வீதியில் பிள்ளையர் கோயில் அருகில் உள்ள மதகு உடன் திருத்தியமைக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார திணைக்கள யாழ். அதிகாரிகள் ஊர்காவற்றுறையில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட மதகு மிகவும் நீண்ட காலமாக சேதமுற்றுக் காணப்படுகிறது. இதனால் அனலைதீவு பயணிகள் பஸ் இந்த மதகின் சமீபமாக வந்ததும் பயணிகளை இறக்கிவிட்டு மறு பக்கம் சென்று மீண்டும் அவர்களை ஏற்றிச் செல்கின்றது.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இதனைத் திருத்தியமைத்துத் தரும்படி மக்கள் பலதடவைகள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டிருந்தும் அது நிறைவேறாத நிலையில் இப்போது தான் மதகு திருத்துவதற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

# முதலிடுவதற்கு ஆர்வம் இருந்தும் முதலீட்டாளர் பின்னடிக்கும் நிலை

## வங்கிகளின் கடும் கோட்பாடே காரணம் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்டத்தில் சிறுகைத்தொழில் முயற்சியாளர், வர்த்தக முயற்சியாளர்கள் எனப் பலரும் முதலிடுவதற்கு ஆர்வமாக உள்ளனர். ஆனால் வங்கிகளின் கடும் கோட்பாடு காரணமாக சிறிய, நடுத்தர முதலீட்டாளர்கள் பின்தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

பாரம்பரிய சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கைத்தொழில் முதலீட்டாளர், முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி கூட்டம் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தொழில் முயற்சியாளர் ஆர்வம் இல்லை, முதலீட்டாளர்கள் உற்பத்தியில் ஈடுபடவில்லை, அவர்கள் எதிலும் பின்நிற்கிறார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு காரணம் இருக்கிறது. இன்று யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பல்வேறு பெயர்களில் வங்கிகள் இயங்குகின்றன.

ஆனால் இந்த வங்கிகள் சிறிய நடுத்தர முதலீட்டாளர்களுக்கு கடன் கொடுப்பதற்கு முன்வரவில்லை. இவற்றில் கடுமையான சட்டதிட்டங்கள், பிணைகள், ஆவணங்களை சமர்ப்பித்தே கடன்பெற வேண்டியுள்ளது.

மத்திய வங்கி ஆளுநர் வடக்கு வீட்டு திட்டத்துக்கு கடன் கொடுத்து அபிவிருத்திகளை மேற்கொள்ளுமாறு கூறுகிறார் ஆனால் இங்கு எதுவும் நடப்பதாக இல்லை.

இதனால் முதலீட்டாளர் அபிவிருத்தி, தொழில் முயற்சி பற்றி சிந்திக்க மாட்டார்கள்.

மாறாக கடனுக்கு விண்ணப்பித்துவிட்டு கடும் சட்டதிட்டங்களால் வங்கிக் கடனும் இன்றி, அபிவிருத்தியுமின்றி, தொழில் முயற்சியுமின்றி பின் நிற்கின்றனர்.- என்றார். (ம-50)

## நிகழ்வுகள்
# இன்று

**விவசாயக் குழுக் கூட்டம்**

வலி.கிழக்குப் பிரதேச செயலக விவசாயக் குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

**கலந்துரையாடல்**

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்களுக்கான புனர்வாழ்வுத்திட்டப் பயனாளிகளுடனான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் புனர்வாழ்வுக்கடன் பெற விண்ணப்பித்தவர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ம-9)

**பொதுக்கூட்டம்**

யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பெதுக்கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

# என்றிப் திட்டத்தின் கீழ்ஒதுக்கிய நிதி எங்கே?

## வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் நடனேந்திரன் கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கில் ஐந்து மாவட்டங்களுக்கும் என்றிப் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி எங்கே சென்று விட்டது.

உள்ளூராட்சி சபைகளால் முன்வைக்கப்பட்ட திட்ட முன்வரைபுகள் அரச அதிபர்களுக்கு அனுப்பப்பட்டும் எவ்வித நிதி ஒதுக்கங்கள் பற்றி இதுவரை பதில் இல்லாதது வடக்கின் வசந்தம் இல்லையா என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் ஒரிரு உள்ளூராட்சி சபைகளைத் தவிர ஏனைய உள்ளூராட்சி சபைகள் முழுப் பலத்துடன் இயங்குகின்றன.

இவ்வாறான உள்ளூராட்சி சபைகள் மக்களுக்கான உட்கட்டுமான வீதி மற்றும் அபிவிருத்தி முன்மொழிவுகளை முன்வைத்து நிதியை அரச அதிபர் ஊடாக எதிர்பார்த்து நிற்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் என்றிப் என்ற வடக்கின் துரித மீட்சித் திட்டத்துக்கு வடக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 500 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாக இருந்தது. எனினும் நிதியின் நிலைமை பற்றியோ அல்லது திட்டங்களின் நிலைமை பற்றியோ இதுவரை வெளிப்படையான பதில் எதுவுமில்லை.

குறிப்பாக வடக்கில் 5 மாவட்டங்களும் போரால் முற்றாக பாதிக்கப்பட்ட பிரதேசங்கள். வடக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்ட அரச அதிபர்களுக்கும் இந்த விடயத்தில் பெரும் பொறுப்பு உண்டு. அரச அதிபர்களின் முயற்சி ஊடாகவே இந்த நிதியை வரவழைத்து அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும்.

5 மாதங்களில் 2012 இற்கான நிதியாண்டு முடிவடையவுள்ளது. அதற்குள் என்றிப் நிதியைப் பெற்றால் மட்டுமே உண்மையான அபிவிருத்தி இடம்பெறும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-41)

# டெங்கு கட்டுப்பாடு குறித்து ஆராய்வு



வலி வடக்கு, ஜூன் 28

யாழ். பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு கட்டுப்பாட்டை மேற்கொள்வது சம்பந்தமான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகாரோ தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நல்லூர், சங்கானை, யாழ்ப்பாணம் ஆகியவற்றின் பிரதேச செயலர்கள், சுற்றுச் சூழல் மாவட்ட அதிகாரி, வட்டுக்கோட்டை, மானிப்பாய், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம், ஊர்காவற்துறை, நெடுந்தீவு உட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள், சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கடந்த 24 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 24 ஆம் திகதி வரையான ஒரு மாத காலத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை விரைவாக மேற்கொள்வது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

தனியாருக்குச் சொந்தமான துப்பரவு செய்யப்படாத காணிகளை கிராம அலுவலர்கள் இனம் கண்டு பொதுச் சுகாதார பரிசோதகருடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கு கட்டுப்படாதவர்களது காணிகளைப் பிரதேச சபை மூலம் துப்பரவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் இத்துடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகனேசன், யாழ். பொலிஸ் அத்தியட்சகர் ரணவீரா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகரிடம் ரூ.21 லட்சம் கப்பம் வாங்கிய பொலிஸ் அதிகாரிகள்

## கொழும்பில் கைது

கொழும்பு,ஜூன் 28

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரிடம் 21 இலட்சம் ரூபாவைக் கப்பமாகப் பெற்ற பொலிஸ் அதிகாரிகள் இருவரைக் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு ஊழல் மோசடி விசாரணைப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பதில் பொலிஸ் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான சுஜீவ மெதவத்த தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி பொலிஸ் அதிகாரிகளால் கப்பமாகப் பெறப்பட்ட 21 லட்சம் ரூபாவும் அவர்களால் பயன்படுத்தப்பட்ட வாகனமொன்றும் கொழும்புக் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால்கைப்பற்றப்பட்டதாக அவர் கூறினார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இருவரும் நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து அவர்களை எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (த)

# அமுதவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 28

முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தின் அமுத விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் ந.விஜயரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யு.என்.டி.பி. நிறுவனத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதம நிறைவேற்று அதிகாரி வி.நவநீதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பி, முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர். (10)

# திருமலையில் பதற்றம்

திருகோணமலை மொறவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரொட்டவெவ மற்றும் எத்தபெந்திவெவ பகுதிகளில் நேற்று இரவு கிறிஸ் மனிதன் நடமாட்டம் நிலவியது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எத்தபெந்திவெவ பகுதியில் கிறிஸ்மனிதனால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாயாரான ஆர்.பி.நந்தினி பிசோமெனிக்கே (வயது - 25) மாதிவல்வெவ வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் திருகோணமலை அரசினர் பொது வைத்திய சாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார் எனவும் வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு ஹொரவப்பொத்தானை, ரத்மலை பகுதிகளில் உள்ள வீடொன்றில் இனந்தெரியாதவர்கள் புகுந்து பின்னர் தப்பி ஓடினர் எனவும் நேற்று அதிகாலை 4 மணியளவில் ரொட்டபகுதியிலுள்ளவீடொன்றில் புகுந்து உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் தங்க ஆபரணங்களைக் கழற்றி விட்டு வீட்டிற்குப் பின்புறமாகவுள்ள காட்டுப் பகுதியினூடாகத் தப்பி ஓடியுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

இருந்தபோதிலும் பறிமுதல் செய்யப்பட்ட ஆபரணம் தங்கம் பூசப்பட்ட வெள்ளி ஆபரணம் எனவும் பாதிக்கப்பட்ட பெண் குறிப்பிட்டார்.

# பாக். பிரஜையின் வயிற்றில் ஹெரோயின் வில்லைகள்

கொழும்பு, ஜூன் 28

ஹெரோயின் வில்லைகளை விழுங் கியவாறு இலங்கை வந்தடைந்த பாகிஸ்தான் பிரஜை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள ஹோட்டலொன்றில் வைத்து ஒப்பந்தக்காரர்களிடம் கையளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட 60 இலட்சம் ரூபா பெறுமதியான 61 ஹெரோயின் வில்லைகளை அவரது வயிற்றிலிருந்து வெளியேற்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ரூபாவின் பெறுமதி ...

01↘ 134 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது. கடந்த 12ஆம் திகதி டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு 133.60 ரூபாவாக இருந்தமையே ஆகக்குறைந்த நாணய மதிப்பாகக் காணப்பட்டது. இந்தநிலையில் இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வீழ்ச்சியடைந்து, டொலர் ஒன்று 134 ரூபாவாக விற்கப்பட்டது. (த)

# சம்பந்தன் நாடு....

01↘ டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்ற எல்லைக்குள்தான் அரசு இருந்து வருகிறது. தீர்வுத்திட்ட விடயம் தொடர்பில் அரசு தாமாக முன்வந்து இன்னும் எதுவித முன்னேற்றங்களையும் வெளிப்படுத்தவில்லை. அதனிடம் சாதகத் தன்மையையும் காணமுடியாமல் உள்ளது.

இதன் காரணமாகத்தான் நாம் தனிப்பட்ட ரீதியில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் அவசியத்தைத் தீர்வு விடயத்தில் வலியுறுத்தி வந்தோம். தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனிவரும் காலங்களில் என்னசெய்யவேண்டும் என்பதை ஆராய்ந்தே வருகின்றது. சம்பந்தன் நாடு திரும்பியதும் இது விடயம் தொடர்பில் கலந்துரையாடப்படும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என ரணிலும் சம்பந்தனும் அரசிடம் சுட்டிக்காட்டினர். ஆனால் அரசிடம் இருந்து அதற்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை. மாறாக, அது தெரிவுக்குழு என்ற எல்லைக்குள்தான் நிற்கின்றது. - என்றார் அவர்.

# கிறிஸ்மஸ் தீவுக்கு ...

01↘ இந்தப் படகில் இருந்தவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. இதேவேளை, கடந்த வாரம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் நோக்கில் படகில் பயணம் செய்த புகலிடக் கோரிக்கையாளர் படகு ஒன்று விபத்துக்கு உள்ளாகியதால் 75க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# புகலிடம் கோருவோரின் ..

01↘ நோக்கில் இலங்கையில் இயங்கி வரும் தூதரகங்கள் கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டுமெனவும் அரசு கேட்டுள்ளது. வட மாகாணத்தில் இராணுவத்தினர் வழங்கியதாகத் தெரிவித்து சில ஆவணங்களை இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் வெளிநாடுகளில்சமர்ப்பித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் ஆவணங்கள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு இராஜதந்திர சமூகத்திடம் கோரியுள்ளது. (த)

# குடாநாட்டின்...

01↘ படி அது 583,000 ஆக குறைந்துள்ளதென குடிசன மதிப்பீட்டுத் திணைக்கள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 வருடங்களில் இலங்கையின் சனத்தொகை 0.7 வீதத்தில் குறைவடைந்துள்ளதென அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தில் அதிகூடிய 1.33 வீத சனத்தொகை அதிகரிப்பும் நுவரெலியா மாவட்டத்தில் ஆகக்குறைந்த 0.5 வீத சனத்தொகை அதிகரிப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளதென குடிசன மற்றும் தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# காணி அபகரிப்புக்கு...

01↘ பட்டுள்ளது. அத்துடன் கடற்படையினரால் பாஸ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையினால் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

அது மட்டுமின்றி மன்னார் மாவட்டத்தில் அரச தரப்பு மற்றும் படை தரப்பு ஆகியோரினால் தமிழ் மக்களின் குடியேற்ற காணிகள் அபகரிக்கப்கப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் மீளக்குடியேற முடியாத நிலையில் காடுகளில் தஞ்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் தெரிவித்தார்.

இவைகளுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் வாரம் மன்னார் மாவட்டத்தில் மாபெரும் உண்ணாவிரதம் ஒன்றை நடத்தவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்தார். (த)

# ஆயுதக் கலாசாரத்தினை...

01↘ வடிக்கைகள் மூலம் அணுகியிருக்க முடியும்.ஆவணங்களின்மூலம் உரிய நீதிமன்றின் முன் சென்று தமது உரித்தை நிலைநாட்டியிருக்க முடியும். பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அதைவிடுத்து தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலும் ஆர்ப்பாட்டத்தை நடத்த முயன்றுள்ளனர். அத்துடன்நீதிமன்றக்கட்டளையை அவமதிக்கும் வகையில் கட்டளையைக் கிழித்தெறிந்து, ''நீதிமன்றக் கட்டளையை மதிக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும்'' என்று கோஷமிடப்பட்டதாகவும் மன்று அறிகின்றது.

இதன் மூலம் சட்டத்தினைக் கையில் எடுக்கும் வகையிலும் அதனூடாக மக்களைத் தவறாக வழிநடத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்குச் சாட்சியாக எதிர்மனுதாரர்களுக்காக வாதாடும் ஒரு சில சட்டத்தரணிகளும் இருந்துள்ளார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் நீதித்துறைக்கு சவால் விடும் வகையிலும் மிரட்டல் விடுக்கும் வகையிலும் அமையும் என்று மன்று கருதுகின்றது. சட்டத்துறையில் உள்ள இவர்கள் இதனைக் கண்டிக்க முனையாததன் மூலம் அவர்களின் கடப்பாட்டிலிருந்து விலகியிருப்பதுடன் இத்தகைய செயலுக்கு உரமூட்டிதாகவே மன்று கருதுகின்றது.

மக்களின் அவலங்களின் மீது அரசியல் நடத்தி, மீண்டும் இருண்ட யுகத்துக்குள் மக்களை இட்டுச் செல்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனநாயக மறுப்பையும் ஆயுதக் கலாசாரத்தையும் மீண்டும் முனைப்புடன் அரங்கேற்றுவதற்கான முயற்சியாகவே மன்று இதனைக் கருதுகின்றது.

மக்களை அரசியல் பகடைக் காய்களாக்கி அவலங்களின் மீது அரியணை ஏறும் முயற்சி அரங்கேற்றப்பட்டுள்ளது.

இனக்குரோதங்களைத் தூண்டி இரத்தம் தோய்ந்த வரலாற்றை மீண்டும் இந்த மண்ணில் மேடையேற்றுவதற்கான முயற்சியை மன்று எந்த வகையிலும் அனுமதிக்காது.

ஆகவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் சட்டமுறையற்ற வகையில் செய்யப்பட்ட இந்த விண்ணப்பத்தை மன்று நிராகரிப்பதுடன் ஏற்கனவே வழங்கப்பட்ட தடைக் கட்டளையை மன்று உறுதி செய்கிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் மன்றிற்குச் சமூகமளித்திருந்தார். (உ-4)

# வேம்படியில்...

01↘ கள அதிகாரிகளின் உதவியை உடன் நாடி பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.கோத்தபாய ஜெயரட்னே புதிய அதிபருக்கு ஆலோசனை வழங்கினார்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபராக வேணுகா சண்முகரத்தினம், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டார். நேர்முகப் பரீட்சைகளின் பின்னர் இந்த நியமனம்வழங்கப்பட்டது.ஆனால் இந்த விவகாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டதால் புதிய அதிபர் பொறுப்பேற்பதில் தடங்கல்கள் ஏற்பட்டன. பதவியேற்கச் சென்ற அவர், தற்போதைய பதில் அதிபர் ராஜினி முத்துக்குமாரனின் ஒத்துழைப்பின்மையால் பதவியைப் பொறுப்பேற்க முடியாது திரும்பினார்.

இதனையடுத்து இந்த விடயத்தை, வெளிநாடுகளில் வாழும் கல்லூரிப் பழைய மாணவிகள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர் என்று யாழ்ப்பாணத்திலுள்ள பழைய மாணவிகள் சங்கம் தெரிவித்தது. ''இதுவிடயமாகத் தெரியப்படுத்திய போது ஜனாதிபதி, கல்வி அமைச்சுக்கு விசேட அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்'' என்று சங்கத்தின் நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பின்னணியில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவை நேற்றுச் சந்தித்துப் பேசினர் புதிய அதிபர். கல்லூரி பழைய மாணவிகள் சங்க நிர்வாகிகளும் உடனிருந்தனர்.

இந்த விவகாரத்தில் தேவையற்ற அரசியல் தலையீடுகள் இருப்பதைப் புரிந்து கொண்ட கல்வி அமைச்சர், உடனடியாகத் இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு தனது செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.

''பாடசாலையில் பதவியில் இருக்கும் அதிபர்கள் தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு வடக்கிலும் தெற்கிலும் தற்போது அதிகரித்துவிட்டதாக'' இந்தச் சந்திப்பின்போது கல்வி அமைச்சர் கவலை தெரிவித்தார் என்று கல்லூரி பழைய மாணவிகள் சங்கப் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அதன் பின்னர் வேணுகா சண்முகரத்தினம் மற்றும் பழைய மாணவிகள் சங்க நிர்வாகிகள் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேசினர். பதவியை உடனடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

(உ-3)

# கிழக்கு மாகாண சபைக்கு...

01↘ கின்றது.கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகள் ஆயுட்காலம் முடிவடைவதற்கு முன்பாகவே கலைக்கப்பட்டுள்ளன.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான தேர்தல்கள் 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்றன. கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

இச்சபைகளின் ஆயுட்காலம் 2013 ஆம் ஆண்டிலேயே நிறைவு பெறவிருக்கும் தறுவாயிலே குறித்த சபைகள் முன்கூட்டி கலைக்கப்பட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மேற்படி மூன்று சபைகளையும் ஐ.ம.சு. கூட்டமைப்பே கைப்பற்றின.

வட மத்திய மாகாண சபைத் தேர்தலில் 3,07,457 (56.37%) வாக்குகளைப் பெற்ற ஐ.ம.சு.மு. 20 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. ஐ.தே.க. 2,05,284 (37.64%) வாக்குகளைப் பெற்று 12 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 26,738 (4.90%) வாக்குகளையும் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றிக் கொண்டன.

சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் ஐ.ம.சு.மு. 4,72,789 வாக்குகளைப் பெற்று 25 ஆசனங்களையும், ஐ.தே.க. 3,46,321 வாக்குகளைப் பெற்று 17 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 19,068 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் கைப்பற்றிக்கொண்டன.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐ.ம.சு.மு. 3,08,886 வாக்குகளைப் பெற்று 20 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. ஐ.ம.சு. முன்னணியில், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் சு.க. என்பன இணைந்து போட்டியிட்டன.

ஐ.தே.க. 2,50,732 வாக்குகளைப் பெற்று 15 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. ஐ.தே.கவின் யானைச் சின்னத்தில் மு.கா. இணைந்து போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) என்பன 9,390 மற்றும் 7,714 வாக்குகளைப்பெற்று தலா ஓர் ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. மாவட்ட பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனத்தை வழங்கவும்

## டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் வலியுறுத்து

**பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல் தயாரித்துப் பூச்சாண்டி காட்டிய சில அரசியல்வாதிகள், வேலையற்ற பட்டதாரிக ளைப் பயிலுநர்களாக இணைத்துக்கொள்வதற்குத் தாங்களே காரணம். தமது சாதனையே இது எனவும் பெயர் வைக்கவும் முனைந்துள்ளனர்.**

அம்பாறை,ஜூன்28

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளை விரைவில் பயிலுநர் நியமனத்துக்குள் உள்வாங்க வேண்டும் என்று இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரி களின் தொழிற்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளைப் பயிலுநர்களாகச் சேர்த்துக்கொள்ளல் தொடர்பாக இந்தத் தொழிற்சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை வலியுறுத் தப்பட்டுள்ளது.

இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கம் சார்பில் செயலாளர் எம்.ஹூசைன்முபாறக் இந்த ஊடக அறிக்கையை விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பட்டதாரிகளுக்கு நிரந்தர தொழில் நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள நடவடிக்கைகளை நாம் வரவேற்றுள்ளோம். தற்சமயம் வேலையற்ற பட்டதாரிகளை ஆறுமாத கால பயிலுநர் பயிற்சியினூடாக நிரந்தர நியமனத்துக்கு உள்வாங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை பாராட்டத்தக்கது.

வடக்கும், கிழக்கும் காலத்தால் மறக்கமுடியாத பல துன்பகர நிகழ்வுகளுக்குள் துவண்டு கிடந்த நிலையிலும்கூட பட்டதாரிகள் தமது குறிக்கோள்களை மையமாக வைத்து பட்டப்படிப்புக்களை கிரமமாக மேற்கொண்டனர்.

இருப்பினும் நியமனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் அஹிம்சை வழிப் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் பட்டதாரிகள் பயிலுநர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டப் பட்டதாரிகளுக்கு இதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டிருந்தும் இன்னும் அவர்கள் பயிலுநர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படாமல் நாள்களை நகர்த்துவது பட்டதாரிகளைக் கவலைகொள்ளச் செய்துள்ளதுடன், இது நியாயமான செயற்பாடா? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

அரசியல்வாதிகளோ விளம்பரங்கள் மட்டும் செய்து தங்களது அரசியல் செல்வாக்குகளை நிலைநிறுத்த முற்படுகிறார்களே தவிர தேக்க நிலையில் கிடக்கும் வேலையற்ற பட்டதாரிகளின் விடயங்களைத் துரிதப்படுத்துவதற்குப் பின்னிற்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சில அரசியல்வாதிகள் பட்டதாரிகளைத் தாங்கள் தான் பயிலுநர்களாகச் சேர்க்கச் செய்தோம் எனவும் தம் பட்டம் அடிக்கவும் முற்பட்டுள்ளனர்.

பட்டதாரிகள் மற்றும், பட்டதாரிகளின் தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் முன்னெடுத்த நகர்வுகளும், சாணக்கியமான நடவடிக்கைகளுமே விடிவைத் தந்துள்ளன.

இதேவேளை பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல் தயாரித்துப் பூச்சாண்டி காட்டிய சில அரசியல்வாதிகள், வேலையற்ற பட்டதாரிகளைப் பயிலுநர்களாக இணைத்துக்கொள்வதற்குத் தாங்களே காரணம். தமது சாதனையே இது எனவும் பெயர் வைக்கவும் முனைந்துள்ளனர்.

சில மாவட்டங்களில் இன்னும் பயிலுநர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சைகள் பூர்த்தி செய்யப்படாமலிருப்பதுடன், இதனால் அவர்களுக்கான பயிற்சிக் காலமும் கடந்து சென்று கொண்டிருக்கின்றது.

இதனால் பட்டதாரிகள் மன வேதனைக்குள்ளாகியிருப்பதுடன் அங்கும் அரசியல்வாதிகளின் கைவரிசைகள் புகுந்துள்ளனவா எனும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்றையகாலகட்ட வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு மத்தியில் பயிலுநர் நியமனத்துக்கென வழங்கப்படும் மாதாந்த சம்பளம் பத்தாயிரம் ரூபா எந்த வகையிலும் போதுமானதாக இல்லையே என்ற ஆதங்கம் மேலெழுகின்ற போதிலும் பயிலுநர் நியமனம்பெற்ற பட்டதாரிகள் பயிற்சியை முடித்தே தீரவேண்டும் என்ற ஒரே நோக்கில் அர்ப்பண சிந்தையுடன் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளை விரைவாகப் பயிலுநர் நியமனத்துக்குள் உள்வாங்குவதுடன் வடமாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளையும் துரிதமாகப் பயிலுநர் நியமனத்துக்குள் உள்வாங்கி அவர்களது எதிர்காலத்துக்கு உதவ சம்பந்தப்பட்டோர் உடன் முன்வரவேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## மட்டக்களப்பில் மின் வெட்டு

**காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை மின் வெட்டு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது**

மட்டக்களப்பு,ஜூன் 28

மின்சார சபையின் பராமரிப்பு வேலைகள் காரணமாக இன்று வியாழக்கிழமை வாழைச்சேனை, பேத்தாளை, ஓட்டமாவடி மற்றும் பாசிக்குடா ஆகிய பிரதேசங்களில் மின் வெட்டு இடம்பெற வுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை கறுவாக்கேணி, கிண்ணியடி, சின்னவேம்பு, கிரான், சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டி, மாவடிவேம்பு, வந்தாறுமூலை, உன்னிச்சை, ஆயித்தியமலை, பங்குடாவெளி, இலுப்படிச்சேனை, மரப்பாலம், கரடியனாறு, இராஜபுரம், கித்துல், கோப்பாவெளி, பெரியபுல்லுமலை, தும்பாலஞ்சோலை, ஐயங்கேணி, மிச்சிநகர், தளவாய், மீராங்கேணி, சதாம் ஹுசைன் கிராமம், ஹிஸ்புல்லா கிராமம், கொம்மாந்துறை, செங்கலடி, களுவாங்கேணி, ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை, சவுக்கடி, மயிலம்பாவெளி, திருப்பெருந்துறை மற்றும் ஊறணி ஆகிய பிரதேசங்களிலும் மின்வெட்டு இடம்பெறவுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை மின் வெட்டு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜோசப்வாஸ் நகர் மீனவருக்கு தனியானதொரு இறங்கு துறை

## நீண்ட நாள் சர்ச்சைக்குக் கிடைத்தது தீர்வு

மன்னார், ஜூன் 28

மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு தனியாக இறங்கு துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜேம்ஸ் சுதாகரன் வெளியிட்டுள்ளார்.

மன்னார் ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் கடந்த 10 வருடங்களாக உப்புக்குளம், கோந்தைப்பிட்டி இறங்கு துறைமுகத்திலேயே கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

சுமார் 250 தொழிலாளர்கள் இவ்வாறு கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தனர். குறித்த கோந்தைப்பிட்டி இறங்கு துறைமுகம் இலங்கை துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானது என்பதால் திணைக்களத்தின் அனுமதியுடனேயே அவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

ஒரே துறைமுகத்தைப் பயன்படுத்துவதால் அடிக்கடி ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கும் கோந்தைபிட்டியை அண்மித்த பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கும் இடையே அடிக்கடி முறுகல் நிலை தோன்றியிருந்தது.

இந்த நிலையில் ஜோசப்வாஸ் நகர் மீனவர்களுக்கு தனியாக இறங்கு துறைமுகம் ஒன்றை அமைப்பது தொடர்பிலான விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட செயலாளர் எ.சரத் ரவீந்திர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, மன்னார் தலை மன்னார் பிரதான வீதியில் உள்ள தொழில் நுட்ப பூங்காவிற்கு பின்புறமாக உள்ள கடற்கரை பகுதியில் ஜோசப்வாஸ் நகர் மீனவர்கள் கடற்றொழில் செய்வதற்கு இடம் ஒதுக்குதல் என அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டது. இதனால் இருதரப்பு மீனவர்களுக்கிடையான முறுகல் நிலை நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ங-12)

# மன்னார் பஸாரில் தீவிபத்து பெறுமதியான பொருள் அழிவு

மன்னார், ஜூன் 28

மன்னார் பஸார் பகுதியில் அமைந்துள்ள கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்தின் காரணமாக குறித்த வர்த்தக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பல லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்த வர்த்தக நிலையம் அடுக்கு மாடித் தொடர் ஒன்றின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ளது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் திடீரென ஏற்பட்ட தீ கடை முழுவதும் பரவ ஆரம்பித்தது.

உடனடியாகத் தீயைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் குறித்த வர்த்தக நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பல வகையான மீன்பிடி வலைகள் உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த கடற்றொழில் உபகரணங்கள் பல எரிந்து சாம்பலாகியுள்ளன.

எனினும் தீ ஏனைய கடைகளுக்குப் பரவாத வகையில் பொதுமக்களும், இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து சுமார் ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீயினைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

மின்சார ஒழுக்கின் காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-12)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா சிவலிங்கம்



இடைக்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சிவலிங்கம் நேற்று (27.06.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் கணேசமணி, காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் செல்வநாதன், நிர்மலா, பொன்னீசன், முருகானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினி, இந்துராணி, தெய்வராணி, குகன்மாஸ்டர், உமா, சிவமதி ஆகியோரின் அன்பு மாமியும், தீபகுமார், செந்தில்குமரன், லதானி, லயிதா, சாரங்கன், சரண்யா, சிந்தூரி, விஜயலதா, வினோதினி, வசந்தன், நவ ரட்ணராஜ், சுரேந்திரன் ஆகியோரின் பேர்த்தியும் அபிராமியின் பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2012) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் இடைக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவளவு,
இடைக்காடு,
அச்சுவேலி.

(சி/1042) (03)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



*ஐயாத்துரை சிவலிங்கம்*

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் குப்பிழானை வசிப்பிடமாகவும் தற்போது கனடா மார்க்கம் நகரை வாழ்விடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிவலிங்கம் (26.06.2012) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இறஞ்சிதமலர் அவர்களின் அன்புக்கணவரும், சிவபாக்கியம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற பேரம்பலம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், சிவலிங்கம் (ஆஸ்திரேலியா), சரஸ்வதி (பவா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவறஞ்சினி (புஸ்பா), பத்மசிறி (பத்மா, இலங்கை), மதியழகன் (மதி), கிரிஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராஜா (வரதன்), இரவீந்திரராஜா (ரவி, இலங்கை), வடிவாம்பிகை, சித்திரவேல் (சித்திரன்) ஆகியோரின் அன்பு மாமனும், ரஜீவன், நிரோசன், நிருபன், அனுஷாங்கன், பிரசன்னா, கஜானா, காருன்யா, மேகவி, கார்த்திகன், அனோஜா, ஜனகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''சிவமலர்''*
*இராச வீதி, கல்வியங்காடு,*
*கோப்பாய் தெற்கு.*

*தகவல்:*
*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

(19820) (15-14-6)

# மாபெரும் கணக்கியல் கருத்தரங்கு

உயர்தர மாணவர்களுக்கான கணக்கியல் தருத்தரங்கு, NIE இன் பரீட்சை வழிகாட்டி உத்தியோகத்தரும் கணக்கியல் ஆசிரியருமான திரு. M.A.M.ZAROOK அவர்களினால் இக்கருத்தரங்கு நடத்தப்படுகின்றது.

நீங்களும் உங்கள் பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமா?

**தொடர்பு கொள்ளுங்கள் : 0777630708/0777751382**

கருத்தரங்கு நடைபெறும்

**திகதி : 30.06.2012, 01.07.2012.**
**இடம் : யாழ். மத்திய கல்லூரி மண்டபம்.**
**நேரம் : காலை 9.00 - பி.ப. 4.00 மணிவரை.**
**அனுமதிக்கட்டணம் : 500/=**

**அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டன**

**அனுசரணை :-** Greenwich college *(19824) (6.3.14)*

## அவசர கலந்துரையாடல்

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதில் எச்.என்.டி.ஏ., எச்.என்.டி.சி, எச்.என்.டி.எம். ஆகிய பட்டங்களைப் பெற்ற பட்டதாரிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதி வி.செந்தூரன் கேட்டுள்ளார். (16)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடவை நிலையத்திற்கு O/L, A/L படித்த ஆண்கள் தேவை.

**தொடர்பு : 077 2850753** (19830)(14.3)

## தேவை

யாழ். மாவட்டத்திற்குள் பொருள்களை விநியோகிப்பதற்கு கனரக வாகன சாரதி தேவை (கொழும்பு சென்று வர அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)

**தொடர்பு : 0758377583**

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை. (19829)(14.3)

## தவறிவிட்டது

A.றோய்டானியல் (890323472V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கைதடிக்கும் அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 0779079300 (19823)(14.6.3)

# தார்

- 80/100, 60/70
- இமல்ஷன் CRSI, CRSII, CSS1
- கட்பெக் MC 30

பெரல், தாங்கி (பவுசர்) ஆகிய வாகனங்களில் பெற்றுக்கொள்ளலாம்

**அழையுங்கள்: 072-2235460**

**பிடுமிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**
BITUMIX (PRIVATE) LIMITED
மதவாச்சி சேமிப்பு நிலையம்
மன்னார் றோட், மதவாச்சி.

தொ.பேசி: 025-5621880, பெக்ஸ்: 025-2245278
வெப்: www.bitumix.lk

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்த எமது அன்புத்தெய்வம்

*அமரர்*

## *தங்கவேல் தங்கநேசம்*

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.06.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணியளவில் துன்னாலை மிந்திரன் அம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும் நிகழ்விலும் மறுநாள் (30.06.2012) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் சபீண்டீகரண நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*காவல் தோட்டம்,*
*செம்பாடு, துன்னாலை,*
*கரவெட்டி.*

(சி/1041) (15-14) குடும்பத்தினர்.

# சாரதி தேவை

சாரதி அனுமதிப்பத்திரம் C1 வாகனம் செலுத்தக்கூடிய சாரதி தேவை.
(பார ஊர்தி செலுத்தக்கூடிய D1 அனுமதிப்பத்திரம் இருப்பது விரும்பத்தக்கது.)

குறைந்தது 4 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படுகிறது. தகுதியானவர்கள் வரும் வெள்ளிக்கிழமை மு.பகல் 11 மணி தொடக்கம் 2 மணிவரை நேரில் வரவும்.

**Kapila constructions (PVT)LTD**
**70/6, K.K.S. Road,**
**Jaffna.**
**T.P:- 0217200703**

(c/1038)(6.14.3)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## நவீன சந்தைக்கட்டடத்தொகுதியிலுள்ள கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2012

*மாநகர சபைக்கு சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ் மாநகர சபையினால் கேள்வி கோரப்படுகின்றது.*

கேள்விப்படிவக்கட்டணம் : ரூபா 500.00 (வற்வரி.தே.க.வரி நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல் : 2012.06.29 - 2012.07.12 மு.ப. 10.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கோள்ளல் : 2012.07.12 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறத்தல் : 2012.07.13 பி.ப 2.30 மணிக்கு

*விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்கமூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.*

*தபாலில் அனுப்புவோர்* **மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** *என்று முகவரியிட்டு 2012.07.12 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. கேள்விகள் திறக்கும் நேரத்தில் கேள்வி தாரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.*

*மேலதிக விவரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.*

| கடைகள் விவரம் | கடை இலக்கம் | கடையின் விஸ்தீரணம் | கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்.தே.க.வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| நவீன சந்தை 2ஆம் கட்டம் | 167 | 9'6"X9'6" | 5000.00 | 1,200,000.00 |
| நவீன சந்தை மேல் மாடி 2ஆம் கட்டம் | 01 | 87'X45' | 20000.00 | 15,600,000.00 |
| நவீன சந்தை மேல் மாடி 2ஆம் கட்டம் | 04 | 87'X45' | 20000.00 | 15,600,000.00 |

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா**
**மாநகர முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி/1035)(6,14,10)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2012

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 04.07.2012 - 12.07.2012 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவக் கட்டணம் 500/= (வற் வரி, தே.க.வரி நீங்கலாக)
கேள்வி படிவம் விநியோகிக்கும் திகதி 04.07.2012 - 11.07.2012 பிற்பகல் 2.30 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் 12.07.2012 முற்பகல் 10.00 மணிவரை
கேள்வி திறத்தல் 12.07.2012 முற்பகல் 11.00 மணிக்கு

ஐஸ்கிறீம் கடைகள், துவி.வண்டி பாதுகாப்பு நிலையங்களுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - 10, 000/=
ஏனைய கடைகளுக்கான மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் - 2,000/=

விண்ணப்பப்படிவங்கள் யாவும் ஆணையாளர் மாநகரசபை என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப்பெட்டியினுள் 12.07.2012 முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியில் சித்தி பெற்றவர் கேள்வித்தொகையினை 16.07.2012 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

**குறிப்பு:**

1. கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகரசபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடத்தவும் விளம்பரங்கள், விளம்பரப் பதாதைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்
2. கோயில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக்கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாண மாநகரசபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. நல்லூர் உற்சவ கால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்**
(சி/1036)(8-14)

திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா
முதல்வர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனித நேயத்தை தொலைத்துவிடாதீர்

முழுப் பூசணிக்காயை இலைச்சோற்றில் மறைப்பது என்றவாறு ஒரு சுலோகக் கதை தமிழில் உண்டு. இதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் தமிழ்ப் பிரதேசங்களில் அரசதரப்பினரும் அவர்களுக்கு ஆதரவான இராணுவத்தினரும் அவ்வப்போது மேற்கொள்ளும் அடாவடித்தனங்களுக்கு வெளியிடப்படும் மறுப்புகளைப் பார்த்தால்போதும் வேறு விளக்கம் வேண்டாம்.

திருமுறிகண்டி இந்து மகாவித்தியாலயத்திலிருந்து திரும்பவும் மனிக்பாம் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட 19 அப்பாவித் தமிழ்க் குடும்ப உறுப்பினர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தவே இல்லை. அப்படித் தாக்கியதாக வெளிவந்த செய்தி அவ்வளவும் பொய் என்று அரசத்தரப்பினர் அறிக்கை விட்டுள்ளார்கள். எது அப்பட்டமான பொய் என்பது பற்றி யாரும் விசாரணை நடத்தும்படி கேட்கப் போவதில்லை. அதற்கு காரணம் இருக்கிறது.

இதைப் பற்றி அந்த மக்களிடம் விசாரிக்கப்படுமானால் அவர்கள் தமக்கு தொடர்ந்தும் நெருக்குதல் ஏற்படும் என்ற பயத்தில் மௌனம் காத்து விடுவதும் சாத்தியமே.

திருமுறிகண்டியில் உண்மையில் என்ன நடந்தது என்பதைப் பற்றி நேற்றுமுன்தினம் வெளிவந்த பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாமே விவரமாகச் செய்திகளை வெளியிட்டிருந்தன.

அந்த மக்கள் அன்றையதினம் முழுவதும் காலையில் இருந்து மாலைவரை அங்கிருந்து விலகும்படி அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள். இதை யார் செய்வித்தார்கள் என்பதை அறிந்தால் இதன் பின்னணி என்ன என்பது தெரியவரக்கூடும். அந்த மக்களை அச்சுறுத்துவதில் இராணுவத்துடன் அந்தப் பகுதி பிரதேச செயலரும் ஈடுபட்டிருந்தார் என்பதையும் செய்திகள் வெளிப்படுத்தியிருந்தன. இவ்வளவும் நடந்த பின்னர் இரவு 7 மணிக்குப் பிறகு அந்த மக்களை வாகனங்களில் பலவந்தமாக ஏற்றிக் கொண்டுபோய் மனிக்பாம் முகாமில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளார்கள் என்பது செய்தி. பாடசாலையில் இருந்து வெளியேற மறுத்த மக்கள் கொட்டன், பொல்லுகளால் தாக்கப்பட்டார்கள் என்பதை மட்டுமல்ல இந்த மக்களின் மீளக்குடியேற்ற விவகாரத்தில் இராணுவம் சம்பந்தப்படவேயில்லை பொலிஸாரும் அரச அதிபருமே சம்பந்தப்பட்டிருந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் மறுப்புத் தெரிவித்துள்ளார். இதற்கு பொலிஸாரும் பிரதேச செயலரும் சாட்சியம் கூறவும் செய்வார்கள். சம்பவம் பற்றி விசாரணை நடத்தப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் அறிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட மக்கள் விசாரிக்கப்பட்டார்களா? என்பது தெரியவில்லை. உண்மையில் அவர்களே பாதிக்கப்பட்டவர்கள். தாக்கப்பட்ட ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் செய்தி உள்ளது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட இடங்களில் போய் குடியமராவிட்டால் எதுவித உதவியும் வழங்கப்படமாட்டாது என்று கூட பிரதேசசெயலர் அச்சுறுத்தியதாக அவர்கள் கூறியிருந்தார்கள்.

வலுக்கட்டாயமாக அந்த மக்கள் அழைத்துச் செல்லப்படவில்லை. இழுத்து போட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டார்கள் என்பதே செய்தி. விடப்பட்ட இடத்தில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், வயோதிபர்கள் யாவரும் உண்ண உணவு கூட வழங்கப்படாமல் ஒரே மண்டபத்தில் இரவைக் கழிக்க நேர்ந்தது என்பதை எண்ணியும் பார்க்கமுடியாமல் இருக்கிறது. அடுத்த நாள் அருகாமையில் உள்ள வீடுகளுக்குச் சென்று முகாம் தொண்டர்கள் உணவு சேகரித்து வந்து பகிர்ந்தளித்துள்ளார்கள். இது என்ன நாகரிக நாடா காட்டுமிராண்டி தர்பாரா? என்று கேட்கத் தோன்றுகின்றது அல்லவா?

எதுவானாலும் அங்கு அன்று நடந்தது என்ன, யார் யார் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதையெல்லாம் இப்போது மீண்டும் அலச வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் இவ்வளவும் நடந்த பிறகு அந்த மக்கள் தாம் குடியிருந்த பழைய இடங்களிலேயே கொண்டு செல்லப்பட்டு பவ்வியமாக மனித நேயத்துடன் குடியமர்த்தப்படுவதே நியாயம் என்று குறிப்பிட விரும்புகின்றோம். அதுவரைக்கும் அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதும் அதிகாரிகளின் கடமையே.

இடம்பெயர்ந்து மீளக்குடியமரும் மக்களும் மனிதர்கள் தாம், மனித நேயத்தை தொலைத்து விடாதீர்கள் என்று அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

# மொழிக் கல்வித் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை

கொழும்புத்துறை, ஜூன் 28

சிங்கள மக்கள் தமிழையும் தமிழ் மக்கள் சிங்களத்தையும் கற்றுக் கொள்ள வசதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் 10 ஆண்டுகள் மொழிக் கல்வித் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நீண்ட காலத் திட்டத்தை அரச அலுவலகங்கள், பாடசாலைகளில் இருந்து ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளரும் முன்னாள் யாழ்.அரச அதிபருமான திருமதி இமெல்டா சுகுமார் பாஷையூரில் நடைபெற்ற அமரர் மதுரகவி நீ.மிக்கோர்சிங்கம் எழுதிய கிறிஸ்தோப்பர் நாட்டுக் கூத்து நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்று தமிழ்ப் பகுதிகளில் பல பெயர் குறியீடுகள், அறிவித்தல்கள், அரச சுற்றறிக்கைகளில் தமிழ்ப் பிழைகள் காணப்படுகின்றன.

இதனை நிவர்த்தி செய்ய தமிழ்ப் புலமையுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் இருக்க வேண்டும். நான் இங்கு பணியாற்றிய இரண்டு ஆண்டுகளிலும் தமிழ் பிழைகளை திருத்துவதில் அதிக நேரத்தைச் செலவிட நேர்ந்தது. தமிழ் மொழிநடை சிதைந்து செல்வது கவலைக்குரியதாகும்.

தமிழ் இலக்கியங்கள், ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதி வடிவங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. இவற்றைப் பாதுகாத்து நூல்களாக வெளியிடுவது அவசியம்.

நூல்களைப் பார்ப்பதைவிட படிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். எல்லாவகையான கலைகளையும் ஒன்றிணைத்து வெளிக்கொண்டு வருவது நாட்டுக்கூத்தின் சிறப்பாகும்.- என்று தெரிவித்தார். (ம-135)

## உடுவிலில் போசாக்குக் கண்காட்சி

வலி வடக்கு, ஜூன் 28

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் போசாக்கு கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மண்டபத்தில் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், உடுவில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக பிராந்திய மலேரியாத் தடை இயக்க பொறுப்பதிகாரி மருத்துவர் இ.சிவசங்கர்,பிராந்திய தொற்று நோயியலாளர் மருத்துவர் ச.சிவகணேசன், பிராந்திய தாய் சேய்நல வைத்திய அதிகாரி திருமகள் சிவசங்கர், யாழ். மாவட்ட மார்புநோய் சிகிச்சை வைத்திய பொறுப்பதிகாரி சி.யமுனானந்தா உட்படப் பலர் கலந்து கொள்வர். (ம-86)

## மீளக்குடியமர்வு கொடுப்பனவு

வன்னியில் இருந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குள் மீளக்குடியமர்ந்து இது வரை அதற்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (ம-7)

## 12 வருடங்களின் பின் பூசை வழிபாட்டுக்கு அனுமதி

மறவன்புலோ சாரை வயல்கரை வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 12 வருடங்களின் பின்னர் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நித்திய பூஜைகள் ஆரம்பமாகவுள்ளன.

ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி காலை இடம்பெற்று மறுநாள் நித்திய பூஜைகள் ஆரம்பமாகும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் ஜூலை இரண்டாம் திகதி ஆரம்பமாகி 4ஆம் திகதி அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் [illegible] குருக்கள் தலைமையில் நடைபெறும். (ம-9)

## நெடுந்தீவு போக்குவரத்துக்கு எரிபொருள் வழங்க ஒப்புதல்

### கூட்டுறவுச் சங்கம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 28

நெடுந்தீவு பஸ் போக்குவரத்துக்குத் தேவையான எரிபொருளை வழங்க நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

தற்போது நெடுந்தீவு சேவைக்கென இரண்டு பஸ்கள் இருந்த போதும் சீரான சேவை கிடைக்காமல் மக்கள் வைத்தியசாலை, பாடசாலை மற்றும் உள்ளூரில் உள்ள அலுவலகங்களில் தமது தேவைகளுக்காக சில சமயங்களில் மிகவும் நீண்ட தூரம் நடந்தே செல்ல வேண்டியுள்ளது.

பயணச் சீட்டில் கிடைக்கும் பணத்தில் எரிபொருளை வாங்கி பஸ்சேவையை நடத்துமாறு யாழ். இ.போ.ச. அதிகாரிகள் அங்குள்ள ஊழியர்களுக்குப் பணித்திருந்ததை அடுத்து கிடைக்கும் காசில் டீசல் வாங்கியே சேவை இடம்பெற்றது.

கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறையில் நடந்த அபிவிருத்திக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்திடம் டீசல் வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர். இதன்போது சங்கத்துக்கு இ.போ.ச. ஐந்து லட்சம் ரூபாவரை வழங்க வேண்டி உள்ளதாகக் கூறப்பட்டது.

இதற்கான மானியம் வழங்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கூறியதை அடுத்து இ.போ.சவுக்கு நெடுந்தீவில் டீசல் வழங்கச் சங்கத் தலைவர் ஒப்புதலளித்தார். (ம-7)

## பளைப் பிரதேச மாணவருக்கு உயர்தரப் பாடசாலை தேவை

பளை, ஜூன் 28

பளைப் பிரதேசத்தில் மேலும் ஒரு பாடசாலையில் உயர்தர வகுப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளைப் பெற்றோர் கோரியுள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உயர்தர வகுப்புகள் பளை மத்திய கல்லூரியில் மட்டும் நடத்தப்படுகின்றன.

ஆனையிறவு தொடக்கம் எழுதுமட்டுவாழ் வரையான பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் மாணவர்கள் மத்திய கல்லூரியிலேயே உயர்தர வகுப்புகள் கற்க வேண்டியுள்ளது.

இதனால் தூர இடங்களில் உள்ள மாணவர்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் பளைக்கு வரவேண்டியுள்ளது.

குறிப்பாகப் பச்சிலைப்பள்ளியின் கிழக்குப் பிரதேசமான மாசார், சேரன்பற்று, கோயில்வயல், இயக்கச்சி, சங்கத்தார் வயல் போன்ற இடங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதால் பிரதேசத்தில் வேறொரு பாடசாலையில் உயர்தர வகுப்புகளை நடத்துதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளனர். (ம-9)

## புற்றுநோய் சிகிச்சை நிபுணரின் சேவையைப் பெற உதவுங்கள்

### தென்மராட்சி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 28

யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஜெயக்குமாரனின் சேவையை மக்கள் பெறுவதற்கு உரிய தரப்பினர் அவரின் கோரிக்கைக்கு முன்னுரிமை கொடுக்குமாறு தென்மராட்சிப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இன்றைய கால கட்டத்தில் உயிர் கொல்லும் நோய்களில் ஒன்றாக புற்றுநோய் உருவாகியுள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின் படி 7.6 மில்லியன் மக்கள் புற்றுநோயால் இறந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புகைத்தல் மற்றும் அளவுக்கு அதிகமாக மது அருந்துதல் போன்றவற்றால் இந்த நோய்க்கு அதிகமாக ஆளாகின்றனர்.

இவற்றைத் தடுக்கும் முயற்சியில் வட மாகாணத்தில் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் கிளினிக்குகளை நடத்தி நோயாளர்களுக்கு அளப்பரிய சேவையாற்றி வருகின்றார்.

இந்த நிலையில் மூன்றாம் தரப்பினரின் அருவருக்கத்தக்க செயற்பாட்டால் இவரின் சேவையை மக்கள் இழந்துள்ளனர்.

இதனால் இவரது கோரிக்கைக்கு தகுந்த தீர்வைப் பெற்றுக் கொடுக்க உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் கொள்ளையிடப்பட்ட தங்க நகைகளும் பணமும் மீட்பு

## முக்கிய சந்தேகநபரான ஆசிரியை விளக்கமறியலில்

மன்னார்,ஜூன் 28

மன்னார் நானாட்டான் பகுதியில் வீடொன்றிலிருந்து கொள்ளையிடப்பட்ட தங்க நகைகளும், பணமும் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நானாட்டான் உமநரிப் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளையில் பறிபோன 25 பவுண் நகையும் பணமுமே மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆசிரியை ஒருவரும் அவரது இருபிள்ளைகளும் உறவினர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி ஓய்வூதியர் ஒருவரது வீட்டில் பட்டப்பகலில் இந்த நகைகளும் 75 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டன.

இது தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், களவு போன கையடக்கத் தொலைபேசி இணைப்பைக் கொண்டு இந்தக் கொள்ளையுடன் தொடர்புபட்டவர்களைப் பொலிஸார் தேடிப் பிடித்ததுடன் அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளும், பணமும் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் ஆசிரியை ஒருவரும் அவரது மகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் அடுத்த நாள் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.யூட்சனிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

ஆசிரியையை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி மகள் இளம் தாய் என்பதால் அவரை 3 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற விசாரணையை அடுத்து ஆசிரியையின் மகனும், உறவினர் ஒருவரும் திங்கட்கிழமை பண்டிவிரிச்சான் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதுடன் மீட்கப்பட்ட நகைகளும் பணமும் நீதிமன்றத்தின் ஊடாக உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

மன்னாரில் பல்வேறு இடங்களிலும் இது போன்ற கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த நிலையில் பொலிஸார் கொள்ளையுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்துள்ளமை மக்களுக்கு ஓரளவு ஆறுதலை வழங்கியுள்ளது. (க-12)

# கனடா பிரஜை கொலை விசாரணை சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 28

கிளிநொச்சி பரந்தன் கமறிக்குடாவில் கனேடிய பிரஜை ஒருவரின் படுகொலை வழக்கில் கைதான ஐந்து சந்தேகநபர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் கமறிக்குடாப் பகுதியில் தனது காணியில் தங்கியிருந்த கனேடிய பிரஜையான அந்தோனிப்பிள்ளை மகேந்திர ராசா என்பவர் கடந்த மாதம் 3 ஆம் திகதி கோரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பாகக் கடந்த மாதம் 22 ஆம் திகதி ஞானராசா ஆரணி என்ற மூன்று பிள்ளைகளின் தாயார், கல்லுசாமி பாலச்சந்திரன், அப்பாவு ஆனந்தராசா, அபயசிங்க முதியான் சலாகே மைக்கல் பிரதீப் குமார, அருளம்பலம் அகிலன் ஆகிய ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு கடந்த மாதம் 23 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர் கடந்த 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

அன்றைய தினம் குறித்த ஐந்து பேரையும் மன்றில் முன்னிலைப்படுத்தியபோது இவர்களைத் தொடர்ந்து எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க)

# தமிழரசுக் கட்சியின் இளைஞரணி நிர்வாகிகள் வவுனியாவில் தெரிவு

இலங்கைத் தமிழரசு கட்சியின் இளைஞர் அணியின் வவுனியா மாவட்ட கிளை கடந்த 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. வவுனியா நகரசபை மண்டபத்தில் 23 ஆம் திகதி காலை இடம்பெற்ற இலங்கைத் தமிழரசு கட்சியின் மூத்த உப தலைவர் டேவிட் நாதன் தலைமையில் இந்த வைபவம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத் தமிழரசு கட்சியின் இளைஞர் அணியின் தலைவராக எம்.எம் ரதன் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக மதீஸ்வரனும் பொருளாளராக க.சுரேஸ்குமாரும், உப தலைவராக எம்.செந்தூரனும் நிர்வாக சபை உறுப்பினர்களாக இ.சர்மிலன், நிரோஜ், தர்சன் க.பிரகாஸ், மு.திவாகரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் இளைஞர் அணித் தெரிவு வவுனியாவில் முதலில் இடம்பெற்றுள்ளது. அடுத்து யாழ்ப்பாணத்தில் இந்த இளைஞர் அணித் தெரிவு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# செட்டிக்குளத்தில் தரித்து நின்ற அரச பஸ்கள் மீது தாக்குதல்

## சேவைகள் தடைப்பட்டதால் பயணிகள் அவதி

இரவில் தரித்து நின்ற இரு அரச பஸ்களின் மீது விஷமிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். செட்டிகுளம் ஆண்டியா புளியங்குளத்தில் பஸ்களின் கண்ணாடிகள் பலத்த சேதமடைந்துள்ளன.

வழக்கமாக வவுனியாவிலிருந்து பூவரசங் குளம் ஊடாக செட்டிக்குளம் செல்லும் அரச பஸ்ஸும், வவுனியாவிலிருந்து வீரபுரம் ஊடாக செட்டிகுளம் செல்லும் பஸ்ஸும் தமது மாலை வேளைச் சேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர் செட்டிகுளம் ஆண்டியா புளியங்குளத்தில் இரவு வேளையில் தரித்து நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு தரித்து நின்ற போது விஷமிகள் கற்களால் தாக்கி கண்ணாடிகளைச் சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால் நேற்றைய தினம் காலை செட்டிகுளத்திலிருந்து வவுனியாவுக்கான அரச பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. இதன் காரணமாகப் பாடசாலை செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் மிகுந்த சிரமத்துடன் இடநெருக்கடிக்கு மத்தியில் தனியார் பஸ்களில் பயணம் செய்வதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, செட்டிகுளம் பொலிஸார் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் தாக்குதலுக்கு உள்ளான பஸ்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (க-400)




மன்னார் முருங்கனில் இருந்து தலை மன்னார் வரை ஆரம்பிக்கப்பட்டுள்ள குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டத்துக்கான வேலைகள் முருங்கனில் இடம்பெற்று வருகின்றது. (12)

# கண்டாவளை விவசாயிகளுக்கு தானிய விதைகள் விநியோகம்

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மிகவும் பின்தங்கிய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் உணவு விவசாய ஸ்தாபனத்தினால் உப உணவுச் செய்கைகளுக்கான விதை தானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணை மற்றும் புன்னைநீராவி ஆகிய இரு விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள, பின்தங்கிய விவசாயிகளின் விவசாயச் செய்கைகளை மேம்படுத்தும் வகையில் உணவு விவசாய ஸ்தாபனத்தினால் மாவட்ட விவசாயத் திணைக்களத்தினூடாக மரக்கறிச் செய்கை மற்றும் உப உணவுச் செய்கைகளுக்கான விதை தானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக புன்னைநீராவி, கட்டைக்காடு, புளியம்பொக்கணை, பிரமந்தனாறு, குமாரசுவாமிபுரம் ஆகிய ஐந்து கிராமங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த விதை தானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் மயில்வாகனபுரம் கிராமத்தில் விவசாயத்திணைக்களத்தால் 15 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுத் தலா அரை ஏக்கர் கச்சான் உற்பத்திக்குரிய விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் தகவல்களை புளியம்பொக்கணை கிழக்குப் பிராந்திய விவசாயப் போதனாசிரியர் திருமதி ஹேமா கமலதீபன் தெரிவித்துள்ளார். (க-6)

# தற்கொலை அங்கி மீட்பு

வவுனியா செட்டிகுளப் பகுதியில் இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து தற்கொலைப்படையினர் பயன்படுத்தும் தற்கொலை அங்கி மீட்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் போர்க்களத்தில் பயன்படுத்தி வந்ததைப் போன்ற தற்கொலை படை அங்கியே படையினரின் தேடுதல் வேட்டையின்போது செட்டிகுளப் பகுதியில் மீட்கப்பட்டது.

ஏற்கனவே விடுதலைப் புலிகளினால் போரின் போது இந்த அங்கி புதைக்கப்பட்டிருக்கலாம் எனப் படையினர் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இது சம்பந்தமான தகவல்களைப் படையினர் திரட்டி வருகின்றனர். (க-402)

# வவுனியாவில் மக்கள் வங்கி கட்டடத் தொகுதிகள் திறப்பு

வவுனியா, ஜூன் 28

மக்கள் வங்கியின் மூன்று பிரதான கட்டடத் தொகுதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியின் வவுனியாக் கிளை, வன்னிப் பிராந்திய அலுவலகம் மற்றும் பீப்பிள் லீசிங் அலுவலகம் என்பனவே வவுனியா மாவட்ட மக்களின் நலன் கருதித் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வன்னிப் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்டடங்களுக்கான பெயர்ப் பலகையை மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணாஜீவா திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து வங்கிக் கட்டடத் தொகுதியை வவுனியா மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.கோடீஸ்வரனும், பீப்பிள் லீசிங் அலுவலகத் தொகுதியை டி.பி. குமாரகேயும் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

இதில் மக்கள் வங்கியின் கிளை முகாமையாளர் என்.வசந்தகுமாரன் உட்பட வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர், வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-400)

# வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம்

சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதை எதிர்த்து வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலமொன்று இடம்பெற்றுள்ளது. அண்மையில் இடம்பெற்ற இந்த ஊர்வலம் வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் ஆரம்பித்து மணிக்கூட்டுக் கோபுரத்தில் முடிவடைந்தது. வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (க-402)

# வாசிப்பு ஆர்வத்தில் அம்பலப் பெருமாள்குளம் நூலகம் அமைக்க நடவடிக்கை துரிதம்

துணுக்காய், ஜூன் 28

துணுக்காய் அம்பலப் பெருமாள் குளம் கிராமத்தில் நூலகம் ஒன்றினை அமைப்பதற்குக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்கான கிராம அலுவலர் ம.குலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தக் குழு தெரிவு செய்யப்பட்டது.

1968 ஆம் ஆண்டு அம்பலப்பெருமாள் குளம் கிராமம் அமைக்கப்பட்டது. ஆனால் இதுவரை காலமும் நூலகமொன்று இங்கு அமைக்கப்படவில்லை. இதுவொரு பெரும் குறையாகவே இங்கு காணப்படுகின்றது.

தற்பொழுது சுமார் 108 குடும்பங்கள் இங்கே மீளக் குடியமர்ந்துள்ளன. நூலகமொன்று இங்கு அமையுமானால் மக்கள் பத்திரிகைகளை வாசித்துப் புதினங்களை அறிந்து கொள்வதற்கும், மாணவர்கள் தமது பாடங்களுக்கான நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் பேருதவியாக அமையும்.

நூலக உருவாக்கத்துக்கென அமைக்கப்பட்டுள்ள குழுவின் தலைவராக இ.அமிர்தலிங்கமும், செயலாளராக க.ஜெயசீலனும், பொருளாளராக சி.ஜெனார்த்தனியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தக் குழுவில் 11 பேர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிராம அலுவலர் இந்தக் குழுவின் காப்பாளராகக் கடமையாற்றுவார்.

பிரதேச சபையின் ஆலோசனைகளையும், உதவிகளையும் இந்தக் குழுவினர் கோரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகர பிரிவில் புனர்வாழ்வுப் பெட்டிகள்

கொழும்புத்துறை, ஜூன் 28

யாழ். மாநகர சபைப் பகுதிகளின் பிரதான இடங்களில் யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியால் புனர்வாழ்வுப் பெட்டிகள் பொருத்தப்படவுள்ளன.

யாழ். மாநகரசபையின் மாதாந்த குறைகேள் ஒன்றுகூடலின் ஓர் அங்கமாக அடுத்த சில வாரங்களில் இந்தப் புனர்வாழ்வுப் பெட்டிகள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சுகாதாரம் தொடர்பான நிகழ்வில் யாழ். மாநகரசபை சுகாதார அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தப் பெட்டிகளில் மக்கள் தமது பகுதிகளின் தேவைகள், குறைகளை சேர்த்து தீர்வைப் பெற்றுக் கொள்ள வசதி ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

# கிராமிய திட்டத்தின் கீழ் நெடுந்தீவுக்கு குடிதண்ணீர்

சுன்னாகத்தில் இருந்து பவுசர் மூலம் கொண்டுவரப்படும் குடிதண்ணீர் படகில் பொருத்தப்பட்டுள்ள தாங்கியில் நிரப்பப்பட்டு கடல் வழியாக கொண்டு சென்று தினமும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம், ஜூன் 28

நெடுந்தீவு பிரதேச மக்களுக்கு கிராமிய குடிதண்ணீர் திட்டத்தின் கீழ் பிரத்தியோகமான கப்பலில் பொருத்தப்பட்ட தாங்கி மூலம் குடி தண்ணீர் அடுத்த ஆண்டு இறுதியில் இருந்து வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகத்தில் இருந்து பவுசர் மூலம் கொண்டுவரப்படும் குடிதண்ணீர் படகில் பொருத்தப்பட்டுள்ள தாங்கியில் நிரப்பப்பட்டு கடல் வழியாக கொண்டு சென்று தினமும் விநியோகிக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன என்று யாழ்.-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோக திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர் தேவை தொடர்பாக யாழ். கைத்தொழில் அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிளிநொச்சியில் இருந்து புங்குடுதீவுவரை 33 இடங்களில் பெரிய தண்ணீர் தாங்கி அமைப்பதற்குக் காணி பெறுவதில் சில தாமதங்கள் ஏற்படுகின்றன.

அதனை அரச அதிபர், பிரதேச செயலர், பிரதேச சபைச் செயலாளர்கள் ஊடாக விரைந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

கல்லுண்டாயில் நவீன தொழில் நுணுக்கத்துடன் கூடிய கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை அமைக்க சம்பந்தப்பட்ட நிபுணர் குழு ஆய்வு செய்து இடத்தை தெரிவு செய்துள்ளது.

நவாலி, ஆனைக்கோட்டை, காக்கைதீவு மக்கள், பொது அமைப்பினர் எமக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றனர்.- என்றார். (ம-41)

## சில மீற்றர்கள் தூரம் மட்டும் திருத்தப்படாத கடற்கரை வீதி



குருநகர் கடற்கரை வீதியின் குறுகிய பகுதி இதுவரை புனரமைப்புச் செய்யப்படாமல் பெரும் சேதமடைந்து காணப்படுகின்றது.

இந்தப் பிரதான வீதி 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளபோதும் வீதியின் சில மீற்றர் தூரம் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது.

இந்த வீதியில் பெரிய குழிகள் காணப்படுவதால் வாகனங்கள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ள இந்த வீதியின் சில மீற்றர் தூரம் மட்டும் புனரமைக்கப்படாமல் இருப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

## மரக்கறி விலைகள் கிடுகிடுவென உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 28

மரக்கறி வகைகளின் விலைகள் குடாநாட்டுச் சந்தைகளில் கிடுகிடுவென உயர்ந்துள்ளன.

தற்போது குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் இடம்பெற்றுவரும் வருடாந்த மகோற்சவங்களை அடுத்து மரக்கறி வகைகளின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது.

மரக்கறி நுகர்வு அதிகரிப்பால் சந்தைகளில் அவற்றுக்குப் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான சந்தைகளில் மரக்கறி வகைகள் காலையிலேயே விற்றுத் தீர்ந்துவிடுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

சுன்னாகம், மருதனார்மடம், சாவகச்சேரி, சங்கானை, திருநெல்வேலி ஆகிய பிரதான சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

திருநெல்வேலி சந்தையில் நேற்று மரக்கறி வகைகளின் விலை விவரம்:-

கத்தரிக்காய் 1 கிலோ- 180 ரூபா, பயற்றங்காய் கிலோ- 200 ரூபா, பாகற்காய் 1 கிலோ- 200 ரூபா, தக்காளிப்பழம்- 1 கிலோ- 190 ரூபா, கரட் 1 கிலோ- 180 ரூபா, லீக்ஸ் 1 கிலோ- 200 ரூபா, வெண்டிக்காய் 1கிலோ- 120 ரூபா, பூசணிக்காய் 1 கிலோ- 80 ரூபா, வெங்காயப்பூ 1 கிலோ- 400 ரூபா, முருங்கைக்காய் 1 கிலோ- 360 ரூபா, உருளைக்கிழங்கு 1 கிலோ- 140 ரூபா, பச்சைமிளகாய் 1 கிலோ- 400 ரூபா, வெங்காயம் 1 கிலோ- 100 ரூபா, கீரை - 1 பிடி - 30 ரூபா, தேசிக்காய் (ஒன்று - 10 ரூபா. (த-17)

# உள்ளூர் தபால் பொதிகள் இ.போ.ச. பஸ்கள் மூலம்

### பிரதம தபாலகத்தில் வாகன வசதி இல்லாமையே காரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.குடாநாட்டுக்கான உள்ளூர் தபால் பொதிகள் மீண்டும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலமே அனுப்பப்பட்டு வருகிறன.

யாழ்.பிரதம தபாலகத்தில் போதிய வாகன வசதி இல்லாமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் தபால் பொதிகள் தினமும் காலையில் பிரதம தபாலகத்தில் இருந்து யாழ். மத்திய பஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து இ.போ.ச. பஸ்களில் குடாநாட்டின் சகல பகுதிக்கும் அனுப்பப்படுகின்றன எனத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தபால் பொதிகள் இவ்வாறு இ.போ.ச. பஸ்களில் அனுப்பி வைக்கப்படுவதால் தபால்கள் மக்களுக்குக் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த உள்ளூர் தபால் பொதிகள் விநியோகம் முன்னர் தபாலகத்தின் வாகனம் மூலமே இடம்பெற்று வந்தன. தீவுப் பகுதிக்கான தபால் பொதிகள் அனுப்பி வைப்பது மட்டுமே இ.போ.ச. பஸ்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது யாழ். பிரதம தபாலகத்தில் போதிய வாகன வசதிகள் இல்லாமையால் இ.போ.ச. பஸ்களிலேயே தபால் பொதிகள் குடாநாடு முழுவதும் அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் தபால் பொதிகளை தபாலகங்கள் உரிய நேரத்தில் மக்களுக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-17)



நல்லூர் கந்தசுவாமி கோயிலின் முன்பாக பருத்தித்துறை வீதி புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (ம-17)

## மீற்றர் ஓட்டோ சேவைக்கு வராதா?

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோ சேவைகள் ஆரம்பிக்கப்படமாட்டாதா என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வைத்தியசாலைகளின் விடுதிகளில் தங்கியிருப்போர் மற்றும் கிளினிக்குகளுக்கு வருவோர் ஓட்டோக்களின் சேவையைப் பெறுவதில் ஆர்வமாக உள்ளனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி மாறுபட்ட கட்டணங்கள் ஓட்டோ செலுத்துவோரால் அறவிடப்படுகின்றன என்றும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில் கொழும்பில் உள்ள வைத்தியசாலைகளில் இந்தச் சேவையைக் கொழும்பு மாநகரசபை நடத்துகிறது. இதற்கென மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோக்கள் இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறான மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோ சேவையை நோயாளர்கள் நலன் கருதி யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் நடத்த முன்வருமா எனவும் கேட்டுள்ளனர்.

இந்தச் சேவைகளை நடத்துவதால் உள்ளூராட்சி சபைகள் தமது பிரதேச வைத்தியசாலைகளில் மக்களுக்கான சேவையுடன் வருமானத்தையும் ஈட்ட முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

## பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு நான்கு 'பிக்கப்' வாகனங்கள்

### இந்திய அரசு வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 28

கைதடியில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனை ஆராய்ச்சி நிலையத்தின் பாவனைக்கென இந்திய அரசு நான்கு 'பிக்கப்' வாகனங்களை வழங்கியுள்ளது.

இந்தப் 'பிக்கப்' வாகனங்கள் தற்போது கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்குக் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காகவே இவற்றை இந்திய அரசு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆராய்ச்சி நிலையம் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது. (த-17)

## கலாசார நிலையம் அமைய இந்த காணியும் பறிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

பொது மக்களின் பாவனைக்காக கலாசார மத்திய நிலையம் அமைப்பதற்கு என்று தெரிவு செய்யப்பட்டிருந்த நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியும் பறிபோகவுள்ளது.

பால் பண்ணை பகுதியில் ஜே/114 கிராம அலுவலர் பிரிவில் உள்ள காணியே இவ்வாறு பறிபோகவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியையும் பறித்து எடுக்க படையினர் முயன்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டள்ளது.

'[illegible]' என்ற குறித்த காணி நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமானதாகும்.

இந்தக் காணியில் கலாசார மண்டபம் ஒரு கோடி ரூபா செலவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிரதேச சபைக்கான தேர்தல்கள் முடிவடைந்த பின் இந்தக் காணியில் சிறுவர் பூங்கா அமைக்க சபை தீர்மானித்திருந்தது.

இதனையடுத்து கலாசார மத்திய நிலையம் அமைப்பதற்கு குறித்த காணியை வழங்க மறுக்கப்பட்ட நிலையில் இராணுவம் அடாத்தாக குறிப்பிட்ட காணியைக் கையகப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் சம்பிக்கவின் கருத்து

# தமிழரின் தன்மானத்துக்கு சவால்


## ராமதாஸ் கடும் கண்டனம்

சென்னை, ஜூன் 28

தமிழீழம் பற்றி தமிழகத் தலைவர்கள் பேசக்கூடாது என்று கூறியுள்ள இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்து தமிழர்களின் தன்மானத்துக்கு விடப்பட்ட சவால் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஈழத் தமிழர்களின் நலனுக்காக தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருவதை பொறுத்துக்கொள்ள முடியாத இலங்கை மின்சக்தித்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க, இலங்கையில் தமிழீழம் என்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழீழத்துக்காக இந்தியா குரல் கொடுத்தால் இலங்கையில் பேரழிவுதான் ஏற்படும். தமிழீழம் அமைக்க தமிழ்நாட்டில் உள்ள தலைவர்கள் முயற்சிக்கக் கூடாது.



அவர்களின் விருப்பங்கள் நிறைவேறாது என்று குறிப்பிட்டுள்ளார். இலங்கை அமைச்சரின் இந்தக் கருத்து தமிழர்களின் தன்மானத்துக்கு விடப்பட்ட சவால். இதைத் தமிழகத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து கண்டிக்க வேண்டும்.

இந்தியா கண்டனம் தெரிவிக்காததால்தான் தமிழகத் தலைவர்களை எப்படி வேண்டுமானாலும் விமர்சிக்கலாம் என்ற துணிச்சல் இலங்கை அமைச்சர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதை இனியும் அனுமதிக்கக்கூடாது. சம்பிக்க ரணவக்கவும் அவரது அரசியல் குருவான ராஜபக்ஷவும் உடனடியாக மன்னிப்புக் கேட்க வேண்டும். தமிழகத் தலைவர்களை விமர்சித்தால் மோசமான விளைவு ஏற்படும் என்று கொழும்பு செல்லும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மூலம் இந்திய அரசு எச்சரிக்க வேண்டும்- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## சென்னை பஸ் விபத்தில் 40 பேர் படுகாயம்



சென்னையில் அரச பஸ் அண்ணா மேம்பாலத்தில் சென்றுகொண்டிருந்தபோது விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 40 பேர் வரை படுகாயமடைந்தனர். இதில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த விபத்து நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சென்னையின் மையப்பகுதியான பாரிமுனையிலிருந்து வடபழனி நோக்கி சென்னை அண்ணாமேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த குறித்த பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் கீழே வீழ்ந்தது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் ராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் நிலைமை மோசமாக உள்ளதாக கூறப்படுகிறது. மருத்துவமனைக்கு கூடுதலாக டாக்டர்கள் வரவழைக்கப்பட்டு காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

விபத்துக் குறித்து பாண்டிபஜார் பகுதி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவத்தினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அப்பகுதியில்பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து சக பயணிகள் கூறுகையில், பஸ்சில் 50 இற்கும் மேற்பட்டோர் பயணித்தனர். வளைவு ஒன்றில் வேகமாக திரும்பி போது தான் பஸ் கவிழ்ந்தது என்றார். (10)

## நிதித்துறையை பொறுப்பேற்றார் மன்மோகன்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

இதனைத் தொடர்ந்து நிதியமைச்சர் பொறுப்பை பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுள்ளார். நிதித்துறை இணையமைச்சராக பழனி மாணிக்கம் மற்றும் நமோ நாராயன் மீனா ஆகியோர் உள்ளனர். பிரதமர் ஏற்கனவே அணுசக்தி, விண்வெளி ஆராய்ச்சி, பொது மக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத்துறை ஆகியவற்றை தன்வசம் வைத்துள்ளார்.

இந்தியப் பொருளாதாரம் சிக்கலான சூழ்நிலையில் நிதியமைச்சர் பொறுப்பை மன்மோகன் சிங் ஏற்றுள்ளார். நரசிம்மராவ் தலைமையிலான அமைச்சரவையில் மன் மோகன் சிங் நிதியமைச்சராக இருந்துள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன் பிரதமர் மன்மோகன் சிங், ரிசர்வ் வங்கி ஆளுநராகவும் பதவி வகித்துள்ளார்.(வ)

## இந்திய மத்திய அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

மீனவர்களுக்கு நீதிமன்ற உத்தரவுப்படி பாதுகாப்பு அளிக்காததால், இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்துவதாகவும், மத்திய அரசின் அமைச்சரவைச் செயலர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க உத்தரவிடக் கோரி, உயர்நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை சட்டத்தரணி ஸ்டாலின் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மீனவர்களுக்கு முப்படை பாதுகாப்பு அளிக்க உத்தரவிடக்கோரி ஏற்கனவே நான் மனு தாக்கல் செய்தேன். கடலோரக் காவல் படை தகுந்த பாதுகாப்பு அளிக்க, உயர் நீதிமன்றக் குழு இடைக்கால உத்தரவிட்டது. கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி, நாக பட்டினம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில், ராமன் உட்பட 5 பேர் காய மடைந்தனர். இந்திய தேசியக் கொடியை அவமதித்தனர். மீன்கள் மற்றும் ஜி.பி. ஆர்.எஸ். கருவிகளை பறித்துச் சென்றனர். மார்ச் 31 ஆம் திகதி 14 படகுகளை சேதப்படுத்தினர். மீனவர்கள் திரவியம், சோமுவை கொடுமைப்படுத்தினர்.

ஏப். 2இல், இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 400 படகுகள் மீது, இலங்கைக் கடற்படை மற்றும் அந்த நாட்டு மீனவர்கள் தாக்குதல் நடத்தினர். மீனவர்கள் முத்து, பாண்டியன், லூயிஸ் காயமடைந்தனர். நீதிமன்ற உத்தரவை செயற்படுத்தியிருந்தால், இதைத் தவிர்த்திருக்கலாம்.

மத்திய அமைச்சரவைச் செயலாளர் அஜித்குமார் சேத், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் சசிகன்ட் சர்மா, கடலோரக் காவல் படை துணை இயக்குனர் மூர்த்தி, வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் ஆகியோர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண் டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## நூலிழையில் உயிர் தப்பினார் சினேகா



இராமேஸ்வரம், ஜூன் 28

திரைப்படப்பிடிப்பின் போது படகு கவிழ்ந்து கடலில் தத்தளித்த நடிகை சினேகா மீனவர்களால் காப்பாற்றப்பட்டார்.

இயக்குநர் குமரவேலுவின் தயாரிப்பில் சினேகா, கிஷோர் நடிப்பில் 'ஹரிதாஸ்' என்ற பெயரில் புதிய திரைப்படம் உருவாக்கப்படுகிறது.

இந்தத் திரைப்படத்தின் படப் பிடிப்பு இராமேஸ்வரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. தனுஷ்கோடி அருகே கடலில் தீவு போல் உள்ள சிறிய மணல் மேட்டில் பாடல் காட்சியொன்றை படமாக்கினர்.

இதற்காக சினேகா, கிஷோர், இயக்குநர் குமரவேலு, ஒளிப்பதிவாளர் ரத்தின வேலு உள்ளிட்டோர் படகில் மணல் தீவுக்குச் சென்றனர்.

கிஷோர், சினேகா பாடல் காட்சியை படமாக்கி விட்டு அனைவரும் படகில் கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது சினேகா வந்த படகு அலையில் சிக்கிக் கவிழ்ந்தது.

அனைவரும் தண்ணீரில் தத்தளித்து உயிருக்குப் போராடினார்கள். இதை அவதானித்த மீனவர்கள் விரைந்து சென்று அவர்களைக் காப்பாற்றினார்கள்.

இதுகுறித்து இயக்குநர் குமாரவேலு தெரிவித்ததாவது:-

அலைகள் அதிகம் இருப்பதால் மணல் திட்டில் படப்பிடிப்பு நடத்தப்போக வேண்டாம் என்று பலர் எச்சரித்தனர். அதைக் கேட்காமல்போய் சிக்கி கொண்டோம்.

படத்தில் நடிக்கும் சிறுவன் பிருதிவிராஜையும் நீரில் மூழ்காமல் காப்பாற்றப் போராடினேன். மீனவர்கள் வந்து அனைவரையும் காப்பாற்றினர். அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினோம். சினேகா தான் இதில் மிகவும் அதிர்ச்சியடைந்துவிட்டார் - என்றார். (வ)

## தொழில் நிறுவனங்களைத் தகர்க்க அல் குவைதாவினர் சதித்திட்டம்


ஹைராபாத், ஜூன் 28

ஆந்திராவில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை தகர்க்க அல் குவைதா தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டி உள்ளதாக மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

குஜராத் மாநிலம் கூச் பகுதி வழியாக அல்குவைதா தீவிரவாதிகள் ஊடுருவி ஹைதராபாத் நகருக்கு வர திட்டமிட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து ஆந்திர மாநில தலைமை கொளார் பங்கஜ் திவிவேடி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பாதுகாப்பைப் பலப்படுத்தும்படி உயர் பொலிஸ் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து ஹைதராபாத்தில் உள்ள சைபராபாத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த முன்னணித் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அனைத்து நிறுவனங்களுக்கும் இரகசியக் கண்காணிப்புக் கமரா பொருத்த வேண்டும் என்று பொலிஸார் அறிவுறுத்தி உள்ளனர். (வ)



குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் 7 லட்சத்து 50 ஆயிரம் தீக்குச்சிகளைக் கொண்டு இளைஞர் ஒருவர் உருவாக்கிய பார்வையாளர்களை மிகவும் கவர்ந்த தாஜ்மகாலின் மாதிரி.

## மத்திய அரசில் இணையுமாறு ராகுலுக்கு அழைப்பு

டில்லி, ஜூன்.28

நாடு சந்தித்துவரும் பிரச்சினைகளைத் தீர்க்க காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் காந்தி மத்திய அமைச்சரவையில் இணைய வேண்டும் என்று மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை மத்திய அமைச்சரவையில் விரைவில் பெரியளவில் மாற்றம் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் ராகுல்காந்தியும் மத்திய அரசில் சேர வேண்டும் என்று கிருஷ்ணா அழைப்பு விடுத்துள்ளார். (வ)

## மவோ தீவிரவாதிகளின் தாக்குதலில் பொலிஸார் சாவு

ஜார்க்கண்டில் நேற்று முன்தினம் இரவு மாவோ பயங்கரவாதிகள் பதுங்கியிருந்து பொலிஸார் வந்த வாகனம் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக இன்று காலை ஜார்கண்டில் ரயில் தண்டவாளங்களில் குண்டுவைத்து மாவோயிஸ்ட்டுகள் தகர்த்துள்ளனர்.

இதனால் தன்பத் ரயில்வே பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் ரயில்சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பாதையில் வரும் சுமார் 12 ரயில்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. காயமடைந்த பொலிஸாரில் 2 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மியன்மார் எதிர்கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி, பரிஸில் நடைபெற்ற கூட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

# புத்தகங்களைப் படித்து முடித்தால் தண்டனைக் காலம் குறைக்கப்படும்

## பிரேஸிலில் வருகிறது விநோதத் திட்டம்

புத்தகம் படித்தால் கைதிகளின் தண்டனை குறைக்கப்படும் என்கின்ற புதுவிதமான சட்டத்தை பிரேஸில் அறிமுகம் செய்துள்ளது.

பிரேஸில் சிறைக் கைதிகள் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளனர். இதைத் தடுக்க புதுவிதமான வழியை பின்பற்ற உள்ளனர்.

பிரேஸிலில் உள்ள நான்கு சிறைகளிலும் மிக கடும் குற்றம் புரிந்த கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். புதிதாக வரும் கைதிகளை அடைக்க இடவசதி இல்லை. இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட அரசு புதிய திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது. இதன்படி, கைதிகளுக்கு 12 விதமான புத்தகம் படிக்கும் பணிகள் கொடுக்கப்படும். அதனைத் திறமையாகச் செய்து முடித்தால் தண்டனைக் காலம் குறைக்கப்படும்.

**இதனைச் சரியாகச் செய்தால் ஓர் ஆண்டு தண்டனை காலத்தில் அதிகபட்சமாக 48 நாள்கள் குறைக்கப்படும்**

இலக்கியம், தத்துவ இயல், அறிவியல் தொடர்பான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு புத்தகத்தையும் 4 நாள்களுக்குள் படித்து முடிக்க வேண்டும்.

இதனைச் சரியாகச் செய்தால் ஓர் ஆண்டு தண்டனைக் காலத்தில் அதிகபட்சமாக 48 நாள்கள் குறைக்கப்படும். இதன் மூலம் கைதிகள் அறிவு, திறமைய்யை வளர்த்துக் கொள்வதோடு விரைவில் விடுதலையும் செய்யப்படுவார்கள். (ந)

## சிரியாவுக்கு நேட்டோ எச்சரிக்கை

துருக்கிப் போர் விமானத்தை சிரியப்படைகள் சுட்டு வீழ்த்தியதற்கு நேட்டோ நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்தச் செயல் ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் இனிமேல் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நேட்டோ நாடுகள் சிரியாவை எச்சரித்துள்ளன.

நேட்டோவில் அங்கம் வகிக்கும் 28 நாடுகளின் தூதுவர்கள், சக உறுப்பு நாடான துருக்கியின் தூதுவருடன் இது தொடர்பாக பிரசெல்ஸில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடிய பின்னரே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

## விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட விவகாரத்தால்

# சிரிய எல்லையில் பதற்றம் துருக்கி இராணுவம் குவிப்பு

## இரண்டாவது விமானமும் தாக்கப்பட்டதாக குற்றம்சாட்டுகிறது துருக்கி

சிரியாவால் துருக்கி விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதற்கு எச்சரிக்கை விடுத்துள்ள துருக்கிப் பிரதமர் ரீசெப் தயிப் எர்டோகன், தமது நாட்டு இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று அறிவித்துள்ளார்.

சிரிய இராணுவம் மீண்டும் ஒருமுறை எல்லை மீறிச் செயற்பட்டால் அது துருக்கிக்கு எதிரான இராணுவ நடவடிக்கையாகக் கருதப்படும் என்றும் துருக்கிப் பிரதமர் எச்சரித்துள்ளார். இந்த விவகாரம் குறித்து துருக்கி, நேட்டோ அங்கத்துவ நாடுகளுடன் நேற்றுமுன்தினம் விசேட ஆலோசனை நடத்திய நிலையிலேயே துருக்கிப் பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

துருக்கி நாடாளுமன்றத்தின் வார அமர்வில் உரையாற்றிய பிரதமர் எர்டோகன்:-

ஐக்கிய நாடுகள், மற்றும் கொபி அனான் பஷர் அல் ஆசாத்துக்குப் பல ஆலோசனைகள் வழங்கினாலும் அவர் எதனையும் கவனத்தில் எடுக்கவில்லை. சிரிய நிர்வாகம் நாட்டை ஆளுவதற்கு தகுதியானதல்ல. இந்தக் கொடூர ஆட்சியில் சிறுவர்கள், பெண்கள் முதியவர்கள் என எல்லோரும் எந்த பச்சாதாபமும் இன்றி கொல்லப்படுகிறார்கள் -என்றார்.





கடந்த வெள்ளிக்கிழமை சிரியாவால் துருக்கி போர் விமானம் சுட்டுவீழ்த்தப் பட்டதைத் தொடர்ந்து துருக்கி அரசின் அழைப்புக்கு அமைய நேட்டோ நாடுகள் அன்காராவில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் தொடர்பில் ஆலோசனை நடத்தியது. 28 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட நேட்டோவின் 63 ஆண்டு வரலாற்றில் தமது அங்கத்துவ நாடொன்று இவ்வாறான அவசர ஆலோசனைக்கு அழைப்புவிடுப்பது இது இரண்டாவது முறையாகும். நேட்டோ சாசனத்தில் 4ஆவது சரத்தின் கீழே துருக்கி இந்த ஆலோசனைக்கு அழைப்பு விடுத்தது. இந்தச் சரத்தில் அங்கத்துவ நாட்டின் எல்லைப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அவசர ஆலோசனைக்கு அழைப்பு விடுக்க முடியும்.

இந்த விடயம் குறித்து துருக்கி ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கும் கண்டனம் தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில் சிரிய நிர்வாகம் துருக்கி தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகச் செயற்படுவதாகவும் அது பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் என்றும் துருக்கி குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே துருக்கியின் மற்றுமொரு விமானத்தின் மீது சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தியதாக துருக்கி துணைப் பிரதமர் புலன்ட் அரின்க் தெரிவித்துள்ளார். எனினும் துருக்கி தரப்பில் எச்சரிக்கை விடப்பட்டதைத் தொடர்ந்து தாக்குதலை நிறுத்தியதாக அவர் தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் இருந்த இரு துருக்கி வீரர்களையும் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த விமானத்தின் மீதே சிரிய இராணுவம் சூடு நடத்தியுள்ளது. (ந)

# தலை துண்டிக்கப்பட்டு பாக். படையினர் படுகொலை

ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவிய தலிபான் தீவிரவாதிகள், 7 பாகிஸ்தான் வீரர்களின் தலைகளைத் துண்டித்து படுகொலை செய்துள்ளனர் என்று அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆப்கானில் உள்ள தலிபான் தீவிரவாதிகள், பாகிஸ்தான் எல்லையோரங்களில் பழங்குடியினத்தவர் வசிக்கும் மலைப் பகுதிகளில் பதுங்கிக் கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்கின் திர் பகுதிக்குள் ஊடுருவிய தலிபான் தீவிரவாதிகள், 6 பாகிஸ்தான் வீரர்களைச் சுட்டுக் கொன்றனர்.

**தீவிரவாதிகளின் தாக்குதலில் காணாமற்போன 11 வீரர்களில் ஏழு பேரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.**

இந்தத் தாக்குதலின் போது 11 பாகிஸ்தான் வீரர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களில் 7 பேர் தலைகள் துண்டிக்கப்பட்டு தலிபான்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலைக்கு, பாகிஸ்தானின் புதிய பிரதமர் ராஜா பர்வேஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## உகண்டாவில் நிலச்சரிவு:

# 3 கிராமங்கள் புதையுண்டன

## 450 பேரைக் காணவில்லை



உகண்டா நாட்டின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில், மூன்று கிராமங்கள் புதையுண்டதால், 450 பேரைக் காணவில்லை. அவர்கள் மண்ணில் புதையுண்டு இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

ஆபிரிக்க நாடான உகண்டாவில்,கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்தது. இதனால், புதுடா மாகாணம் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில் கென்யா நாட்டின் எல்லையை யொட்டி அமைந்துள்ள எல்கான் மலையில், மோசமான நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவினால், மூன்று கிராமங்கள் சேற்றில் புதையுண்டுள்ளன. இதுவரை 30 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 450 பேரைக் காணவில்லை. இவர்கள் மண்சரிவில் புதையுண்டு இறந்திருப்பார்கள் என அஞ்சப்படுகிறது. நிலச்சரிவில் புதையுண்டவர்களை மீட்கும் பணி தொடர்ந்து இடம்பெறுகிறது.

## 79 சிறுமிகள் மீட்பு

அமெரிக்காவில் விபசாரத்தில் ஈடுபட்ட 79 சிறுமிகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்புடைய 104 பேரையும் தாம் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் 13 வயது முதல் 17 வயது வரையுள்ள, பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்த வயதுள்ள, ஒரு லட்சம் பெண்கள் விபசாரத்தில் தள்ளப்படுகின்றனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தடுப்பதற்கு அந்த நாட்டுப் பொலிஸார் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

# பொலிவியாவில் கிளர்ச்சி தீவிரம்

பொலிவியாவில் ஜனாதிபதிக்கு எதிராகப் பொலிஸாரின் கிளர்ச்சி தீவிரமடைந்து வருகிறது. மூன்றாவது நாளாக இடம்பெற்ற போராட்டத்தின் போது ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் தடியடி நடத்தினர். இதனால் கலவரம் ஏற்பட்டது. பல பொலிஸார் காயமடைந்தனர்.

பொலிவியாவில் கடந்த நான்கு நாள்களாக பொலிஸார் சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

லபாசா நகரில் அதிபரின் ஆதரவாளர்களும், இராணுவத்தினரும், பொலிஸார் மீது தடியடி நடத்தினர். இதனால் கலவரம் ஏற்பட்டது. இதுகுறித்து தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அமந்தாத விலா,

''பொலிஸார் பிரச்சினைக்கு ஜனநாயக ரீதியில் தீர்வு காண ஜனாதிபதி முயற்சி மேற்கொண்டு வருகிறார்''- என்றார் .



அரசு எங்களின் கோரிக்கையை தீர்க்க முன்வருவதாகத் தெரியவில்லை. தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறுவழியில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசகு எண்ணெய் இறக்குமதியை ஈரானிடம் நிறுத்தியது கொரியா

## ஜூலை முதல் நடைமுறைக்கு



சியோல், ஜூன் 28

ஈரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதியை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் நிறுத்துவதாக தென்கொரியா அறிவித்துள்ளது.

ஈரான் எண்ணெய்க்கான காப்புறுதியை ஐரோப்பிய வங்கிகள் தடை செய்ததை அடுத்தே தென்கொரியா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாகக் குற்றம் சாட்டி வரும் மேற்குலக நாடுகள் அணுச் செயற்பாட்டை நிறுத்துவதற்கு ஈரானுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன. இதனடிப்படையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஈரானின் முக்கிய வருமானம் ஈட்டும் துறையான எண்ணெய் மீது கடுமையான தடைகளை விதித்து வருகிறது. அத்துடன் ஈரானின் எண்ணெய் ஏற்றுமதிக்குப் பாதிப்பை ஏற்படுத்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அதற்கான காப்புறுதிகளுக்குத் தடை விதிக்கவுள்ளன.

இந்த நிலையில் ஆசியாவில் முதல் நாடாகத் தென்கொரியா ஈரானின் எண்ணெய் இறக்குமதியை முற்றாக நிறுத்தவுள்ளது. ''ஈரானின் எண்ணெய் இறக்குமதிக்கான காப்புறுதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதிக்கவுள்ளது. இதனால் எமக்கு காப்புறுதிகளைப் பெற முடியாதுள்ளது'' என்று தென்கொரியப் பொருளாதார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் பெரும்பாலான சரக்குக் கப்பல்களுக்கான காப்புறுதிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளே வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சைப்பிரஸும் கோரியது கடன்

யூரோ மண்டலத்தில் ஐந்தாவது நாடாக சைப்பிரஸும் தமது நிதி நெருக்கடியை சமாளிக்க ஐரோப்பிய ஒன்றியத்திடம் கடனைக் கோரியுள்ளது.

கிரீஸ் நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சைப்பிரஸ் வங்கிகளை மீட்கும் வகையிலேயே அந்த நாடு நிதியுதவியைக் கோரியுள்ளது. கிரீஸின் கடன்களை சைப்பிரஸ் வங்கிகள் இழந்துள்ள நிலையில், அவை பெரும் சரிவைச் சந்தித்து வருகின்றன.

சைப்பிரஸ் அரசு நேற்று முன்தினம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தமது நிதியுதவி கோரிக்கைக்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளது. எனினும் குறித்த தொகையை சைப்பிரஸ் அரசு கோரவில்லை. எதிர்வரும் காலங்களில் இது குறித்து பேச்சு நடத்தி பெறப்பட வேண்டிய தொகை குறித்து தீர்மானிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று சைப்பிரஸ் அரச பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

(ந)

## மரண தண்டனைக் கைதி விடுதலையில் குழப்பம்





மரண தண்டனைக் கைதி சரப்ஜீத் சிங்கை பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மன்னித்து விடுதலை செய்துள்ளார் என்று செய்தி வெளியாகியது. அதுகுறித்து இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளிலும் சுமார் 5 மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்து ஒளிபரப்பாகி வந்த நிலையில், திடீரென அதை மறுத்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி மாளிகை, சரப்ஜீத் சிங்கை விடுவிக்கவில்லை, மாறாக சுர்ஜீத் சிங் என்ற பாகிஸ்தான் கைதிதான் விடுதலை செய்யப்படவுள்ளார் என்று கூறியுள்ளது.

பாகிஸ்தானில் 1990ஆம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பில் தொடர்புடையவர் என்று கைது செய்யப்பட்டவர் சரப்ஜித் சிங். தவறுதலாக எல்லை தாண்டியதை தவிர, தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்று அவர் வாதாடினார். ஆனால், அவருக்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. அப்போது முதல் 22 ஆண்டுகளாக லாகூர் சிறையில் சரப்ஜித் சிங் இருந்து வருகிறார். நிரபராதியான அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று இந்தியாவில் அவரது சகோதரி தல்பீர் கவுர் போராட்டத்தைத் தொடங்கினார்.

இந்நிலையல்,சச்சா சிங் என்பவரின் மகனான சுர்ஜீத் சிங், கடந்த 30 வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டு பின்னர் 1989 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் பெனாசிர் பூட்டோ பரிந் துரையின் பேரில், ஜனாதிபதி குலாம் இஷாக்கான் உத்தரவின் பேரில், ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டவர். அவர்தான் தற்போது விடுதலை செய்யப் படவுள்ளார். சரப்ஜீத் சிங் விடுவிக்கப் படவில்லை என்று ஜனாதிபதி மாளிகை விளக்கியுள்ளது.

இதேவேளை இந்தியரான சுர்ஜித் சிங்கை பாகிஸ்தான் விடுதலை செய்ய உள்ளதற்கு கிருஷ்ணா வரவேற்புத் தெரிவித்துள்ளார். சுர்ஜித் சிங்கைப் போலவே பாகிஸ்தான் சிறையில் 22 ஆண்டுகளாக உள்ள சரப்ஜித் சிங்கையும் விடுவிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் ஜனாதிபதியை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார். பாகிஸ்தான்சிறையில்உள்ள அனைத்து இந்தியர்களை யும் விடுவிக்க வேண்டும் என் றும் இந்தியா வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ந)

## 'பிக்பென்' கோபுரத்துக்கு 2ஆம் எலிசபெத்தின் பெயர்

லண்டனில் உள்ள புகழ் பெற்ற, 'பிக் பென்' கடிகாரக் கோபுரத்துக்கு, 2ஆம் எலிசபெத் அரசியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசி இரண்டாவது எலிசபெத், அரியணை ஏறி 60 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, இந்த ஆண்டு முழுவதும், பிரிட்டனில் விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவரைப் போற்றும் விதத்தில் லண்டன் நாடாளுமன்றுக்கு அருகில் அமைந்துள்ள, வரலாற்றுப் புகழ் மிக்க, 'பிக் பென்'கடிகாரக் கோபுரத்துக்கு, 'எலிசபெத் கோபுரம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெயர் மாற்ற நடவடிக்கையைப் பிரிட்டன் நாடாளுமன்றம் வரவேற்றுள்ளது.

புகழ்பெற்ற இந்தக் கோபுரம் கடந்த 1859ஆம் ஆண்டு, கட்டி முடிக்கப்பட்டது. இந்தக் கோபுரத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள, மிகப்பெரிய மணியின் ஓசை, லண்டனின் சில கிலோமீற்றர் தூரம் வரை கேட்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (ந)




# மணிவிழா நல்வாழ்த்துக்கள்

**34 வருடங்கள் அரச சேவையாற்றி ஓய்வுபெறும் நிலையில்இன்று (28.06.2012) வியாழக்கிழமை மணிவிழாக்காணும் துன்னாலை கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த திரு. நாராணபிள்ளை குமரகுருநாதன் அவர்களுக்கு எமது மனம் நிறைந்த மணிவிழா நல்வாழ்த்துக்கள்.**



## திரு. நாராணபிள்ளை குமரகுருநாதன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

அகவை அறுபது தன்னை அருமையாய் பூர்த்தி செய்து
அறுபத்தோராம் வயதில் இன்று நல் காலை வைக்கும்
சுகமுறு நல்லநாளில் சுந்தரத் தமிழால் போற்றி
சுகங்களே உம்மைத் தேட இனிமையாய் வாழ்த்துகின்றோம்
அகம் மகிழ் சேவை தன்னால் அனைவரையும் கவர்ந்த
அன்புடை முறைமை தன்னை ஏற்றியே வாழ்த்துகின்றோம்
செகமது உள்ள மட்டும் நின் புகழ் நிற்கும் என்று
சிறப்புடன் வாழ்த்துகின்றோம் செம்மையாய் வாழி! வாழி!

**வாழ்த்துவோர்:**

**மாணிக்க வாசகர்-கமலேஸ்வரி (அண்ணா, அண்ணி-ஜேர்மனி),**
**பெறாமக்கள்: தர்மேஸ்வரன்-கயல்விழி குடும்பம் (லண்டன்),**
**வாமதேவன் (லண்டன்), பகீரதன்-மலர்விழி குடும்பம்(லண்டன்),**
**பகீரதன்-... விழி குடும்பம் (லண்டன்), வாசுதேவன் (ஜேர்மனி)**

(19694)(6-5-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(14)

அவள் தனது வியாபாரத்தைக் கண்காணிக்க நாளின் பலமணி நேரங்களைச் செலவழித்தாள். அவளது சிறந்த நடத்தையும் வசீகரமான விழிகளும் மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றுத் தந்தன. அவள் ஆற்றிய நற்பணி தனது சொந்த ஊரிலிருந்த ஏழைகளுக்குள் மிகவும் ஏழையானவர்களுக்கும் செய்த மிக உயர்ந்த சேவை ஆகும். அவளது வாழ்க்கை பரவலாகப் பலருக்கும் பயன் மிக்கதாக அமைந்திருந்தது.

**உங்கள் வாசலில்**

உங்கள் வாசலுக்கு வாழ்வின் வாய்ப்புகள் வருகின்றன அல்லவா? வைக்கோல் போரில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் நோயாளி மனைவியின் துணிகளைத் துவைப்பதற்கு வீட்டிற்குள் வரவழைக்கப்பட்டார். அவர் இதற்கு முன்னால் துணி துவைப்பதென்றால் என்னவென ஒரு போதும் உணர்ந்ததில்லை. அந்த வழிமுறை மெதுவானதாகவும் கடினமானதாகவும் இருப்பதைக் கண்ட அவர் ஒரு வாஷிங் மிஷனைக் கண்டுபிடித்து வாய்ப்பை உருவாக்கிக் கொண்டார். நியூஜெர்சியில் கூர்ந்த மதி படைத்த முடி திருத்தும் ஒருவர் முடிவெட்டும் கத்தரிக்கோலைக் கண்டுபிடித்து பணக்காரரானார். அது சிறிய, செலவில்லாத கண்டுபிடிப்பு. அதற்கு அதிக தேவை உள்ளதால் அதிக லாபத்தை அளிக்கிறது. குழந்தை கை உறைகளைக் கட்டும் கொக்கியின் கண்டுபிடிப்பு உரிமையாளர், அதனால் பலநூறு ஆயிரம் டாலர்களைச் சம்பாதித்தார்.

அங்கியின் கழுத்துப்பட்டைக் கொக்கியைக் கண்டு பிடித்தவர் வருடத்திற்கு 20,000 டொலர்களை உரிமத்தொகையாகப் பெறுகிறார். சட்டைக் கைப்பித்தான் தைக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர் 50,000 டொலர்களை ஐந்து வருட உரிமத்தொகை பெற்றார். ஒரு பெண் முடியில் செருகும் கொண்டை ஊசியை தலையில் பாதுகாப்பாகப் பற்றிக் கொள்வதற்காக முறுக்கி விட்டாள். அதைப் பார்த்த அவளது கணவன் முறுக்கப்பட்ட கொண்டை ஊசியை தயாரித்து ஏராளமாகச் சம்பாதித்தார்.


''என்னால் இதைச் செய்யமுடியாது'' என்று நீங்கள் சொல்வதால் எந்தப் பயனும் கிடையாது. விழிப்போடிருந்து, உங்கள் நுண்ணறிவை வளர்த்துக் கொண்டு உங்களால் என்ன செய்யமுடியும் என்பதைக் கண்டறியவேண்டும்.

**வாய்ப்பைப் பற்றிக் கொள்ளுதல்**

**ஸ்பானிய தங்கம்**

வில்லியம் பிப்ஸ் மெயின் கிராமத்தைச் சேர்ந்த ஆடு மேய்க்கும் இளைஞன். அவன் கப்பல் மரத் தச்சு வேலை கற்றுக்கொண்டவன். அவன் ஒரு நாள் பாஸ்டன் நகர வீதிகளில் நடந்து கொண்டிருக்கும்போது, பஹாமாத் தீவுகளுக்கு அப்பால் ஒரு ஸ்பானியக் கப்பல் உடைந்து தரை தட்டி விட்டதாகவும் அதில் ஏராளமான பணம் இருப்பதாகவும் சில மாலுமிகள் பேசிக்கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்டான். அவன் அதைக் கண்டுபிடிக்க முடிவு செய்தான். உடனே புறப்பட்டான். பயணத்தின் போது பல கஷ்டங்களை அனுபவித்தான். பிறகு, அந்தக் கப்பலையும் அதில் இருந்த தங்கப் பொக்கிஷத்தையும் கண்டுபிடித்தான்.

மாலுமிகள் பேசிக்கொண்டிருந்ததை அவன் செயல்படுத்தி விட்டான். அவனுக்குச் செயல்படுத்தும் திறமை இருந்தது. புராதன கால சிலைக் கதையில், வாய்ப்பைப் பற்றிக் கொண்டு அதைப் பயன்படுத்திக் கொள்வதைப் பற்றி என்ன கூறப்பட்டிருந்ததென்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். எந்த சாகச முயற்சியிலும், மற்றவர்கள் எதையும் காணாத சமயத்தில், நல்லது எதுவெனக் காணும் திறமையுடைய சிலர் இருக்கலாம். அங்கே, ஒரு வாய்ப்பைக் காணும்போது அதை எவ்விதம் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென அறிந்துள்ள இன்னும் சிலரும் இருக்கலாம். அந்த ஒரு சிலர் பெற்றுள்ளதைச் செயல்படுத்தும் திறமை என அழைக்கலாம். அதுவே எந்தச் சாகச முயற்சியிலும் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே வித்தியாசத்தை உருவாக்குகிறது.



மாவீரன் அலெக்சாண்டர் தேவவாக்கு சொல்லும் பெண் அர்ச்சகரிடம் யோசனை கேட்கச் சென்றார். அவள் அன்று நல்லநாள் இல்லை என்ற காரணத்தால் கோயிலுக்குச் செல்ல மறுத்து விட்டாள். அலெக்சாண்டர் அவளைக் கோயிலுக்குச் செல்லுமாறு வற்புறுத்தினார். அப்போது, அவள் கூறினார் ''நீ வெல்லப்பட முடியாதவன்'' அதுவே அவருக்கு தேவவாக்காக இருந்தது. அவர் உண்மையில் யாராலும் வெல்ல முடியாதவராக இருந்தார்.

ஜார்ஜ் எலியட் கேட்கிறார். 'வாய்ப்பை உபயோகிக்க முடியாத மனிதனுக்கு அதனால் என்ன பயன்?''

**-ஒரிசன் ஸ்வெட் மார்டன்-**

(தொடரும்)

# உலகின் மூத்தகுடிகளில் ஒன்றான திராவிடர் முருகன் வழிபாட்டை மேற்கொண்டு வந்தனர்

## முன்னாள் துணைவேந்தர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூன் 28

''இலங்கையில் வேல்வழிபாடு முருகன்வழிபாடு நிலவிய இடங்களை உள்ளடக்கியதாக ஒரு வரைபடத்தை வரைந்தால் அதன் ஊடாக இலங்கையின் மூத்த குடியினர் யார்? அவர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் எவை? என்ற வரலாற்று உண்மை தெட்டத் தெளிவாகத் தெரியவரும்.

உலகின் மூத்த குடிகளில் ஒன்றான திராவிட இனத்தின் முதன்மை வழிபாடாக வேல்வழிபாடும், வேலவன் வழிபாடும், முருகன் வழிபாடும் இருந்து வந்துள்ளன. இது வரலாற்று ஆதாரங்களை உள்ளடக்கிய உண்மை" என்று யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் துறை பேராசிரியருமான நாகலிங்கம் சண்முகலிங்கன் தெரிவித்தார்.

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசாமி கோயிலில் 'முருகன் அழகன்' பக்திப் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இறுவட்டை வெளியிட்டு வைத்து உரை யாற்றும் போதே சண்முகலிங்கன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது: இன்று வாழ்வியலில் இறைவழிபாட்டுக்குக்கூட பொருத்தமான அளவு நேரத்தைச் செலவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆன்மிகத்தோடு இணைந்த நிலையில் தான் எமது வாழ்வியல் முன்னேற்றம் உள்ளது. எமது வாழ்க்கை நேர முகாமைத்துவத்தில் இலத்திரனியல் சாதனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சில நிமிடங்களில் எமக்கு தேவையானவற்றை பயன்படுத்துவ தற்கு உதவுகின்றன. இந்த வகையில் இறுவட்டின் பயன்பாடும் உள்ளது.

குறிப்பிட்ட சில நிமிடங்களில் எமது பக்தி உணர்வை இறை அற்புதங்களை மற்றும் தகவல்களைக் கண்டு கொள்வதற்கு இறுவட்டுகள் உதவுகின்றன. இதன் ஊடாக பெருமளவு தகவல்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள முடிகின்றது.

நாம் எமது தொன்மையை, வரலாற்றை காலநெருக்கடியில் மறந்தவர்களாக, தெரியாதவர்களாக வாழக் கூடாது. இலங்கையில் வேல்வழிபாடு, முருகன்வழிபாடு, வேலவன்வழிபாடு என்பன பூர்வீக வழிபாடுகளாக இருந்துள்ளன. இது திராவிடர்களின் ஆதிவழிபாடாகும். இந்த வழிபாடு இடம்பெற்ற இடங்களை இணைத்து ஒரு வரை படத்தை வரைந்தால் இலங்கையின் பூர்வீகக் குடிகள் யார் என்ற உண்மையைக் கண்டு கொள்ள முடியும். நான் அரசியல் பேசவில்லை உண்மையான வரலாறைக் கூறுகின்றேன். வரலாறு மறைக்கப்பட முடியாதது. தொல்பொருள் ஆதாரங்களோடு கூடியது.

தமிழர் இனத்தின் தொன்மைக்கு ஆதாரங்களாக விளங்குபவை பக்தி இலக்கியங்கள். பக்தி இலக்கியங்கள் ஆன்மிக வாழ்க்கைக்கும் அறநெறி வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. எனவே இசைப் பாடல்களை காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு உருவாக்க வேண்டும். பக்தி இலக்கியங்கள், பக்திப் பாடல்கள் அருளாளர்களால், இறைவன் அருள் பெற்றவர்களால்தான் படைக்கப்படுகின்றன. இத்னையே நாயன்மார்களின் வரலாறும், இந்து மத இலக்கியங்களின் வரலாறும் எமக்கு எடுத்து விளக்குகின்றன.

அறநெறியோடு இணைந்த வாழ்வே மேல்நிலை பெறும். இதனையே சமயங்கள் அனைத்தும் எடுத்துக் கூறுகின்றன. இதனை மனதில் ஏற்றி சமூகத்திற்குத் தேவையானவற்றை வழங்கி வாழத் தலைப்பட வேண்டும்- என்றார். இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் வை.கோவர்தனன் ஆய்வுரையை நிகழ்த்தினார். (எ-11)



அண்மையில் நடைபெற்ற யாழ். இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவின் போது பழைய (2005 உயர்தரப் பிரிவு) மாணவர்கள் ஒன்றிணைந்து கல்லூரி நூலக பாவனைக்கென 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவிடம் கையளித்தனர். (எ-13)

## புலமைப்பரிசில் மாணவர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்திய அரசினால், இலங்கை மாணவர்கள் 150 பேருக்கு மகாத்மா காந்தி புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. இதற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து விண்ணப்பிப்பதற்கு 26 மாணவர்கள் தகுதியானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று பாடசாலை அதிபர் வீ.கணேசராஜா அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சையில் உயர் புள்ளிகள் பெற்ற 150 மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு, இந்திய அரசின் மகாத்மா காந்தி புல்மைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. (எ-5)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தலைவராக க.விக்கினேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்ற தெரிவில், பணிப்பாளர் சபை உபதலைவராக ம.சற்குணசிங்கமும், நிர்வாக உறுப்பினர்களாக மு.சிதம்பரப்பிள்ளை, சி.இராஜாராம், வ.முத்துராசாவும், இ.வஜிகரன், ப.வேதநாயகி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டவர். (எ-29)

* * *

மந்துவில் மேற்கு கேலம் இராசராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கு புதிய சித்திரத்தேர் ஒன்று அமைப்பது தொடர்பில் தேர்திருப்பணிச் சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர் வே.இரத்தினசிங்கம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக இ.நாகராசா, செயலாளராக பெ.நடராசா, பொருளாளராக மு.நித்தியானந்தம், உபதலைவராக வே.இரத்தினசிங்கம், உப [illegible] றும் 15 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இலக்கியப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச மட்ட இந்த ஆண்டுக்கான இலக்கியப் போட்டி முடிவுகள் பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன. போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:

**கனிஷ்ட பிரிவு**

**கவிதைப் போட்டி**

பி.அபிநயா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வி. லன்சிகா - தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், சி. சிந்துஜா - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை.

**கட்டுரைப் போட்டி**

கு.துஷ்யந்தி, கு. மாதுமை, வ.நிரோஜினி- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள உயர்தரப் பாடசாலை .

**கவிதை பாடல்**

உ.சௌமியா - புற்றளை மகாவித்தியாலயம்.

**கவிதை ( ஆங்கிலம்)**

சு. துவாரகன் - பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரி

**கையெழுத்துப் போட்டி**

செ. நிதுஷா, சி. சங்கவி - புற்றளை மகா வித்தியாலயம் சோ.நற்குணதர்சிகா - பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

ம.நிமல்ராஜ் - புற்றளை மகா வித்தியாலயம், சு. சுபஹரி - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.ந. சர்மிளா - பருத்தித்துறை - வட இந்து மகளிர் கல்லூரி.

**கட்டுரைப் போட்டி**

லோ.ஜெசோதா - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, உதர்சிகா - பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, க. மிதுராஜினி - புற்றளை மகா வித்தியாலயம், கு. அர்ச்சனா - பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி.

**திறந்த பிரிவு**

**பாடல் ஆக்கப் போட்டி**

பா.வேதநாயகம் - தும்பளை தெற்கு, மு.தணிகாசலம்- கற்கோவளம், சி.சிவநேசன் - அல்வாய் மேற்கு

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

மு.தணிகாசலம் - கற்கோவளம், பா.வேதநாயகம் - தும்பளை தெற்கு,

**விவரணப் போட்டி**

மு. தணிகாசலம் - கற்கோவளம்

**சிறுகதைப் போட்டி**

இ.சச்சிதானந்தம் -தும்பளை தெற்கு ஆர். கோபிசங்கர் புலோலி தெற்கு, பொ.மகாதேவா - தும்பளை.

**கவிதைப் போட்டி**

பா.வேதநாயகம் தும்பளை தெற்கு. த.பாலகிட்ணபிள்ளை - புலோலி தெற்கு, இ.சச்சிதானந்தம் - தும்பளை தெற்கு.

(எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனிததிரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## எமது காணி நிலமும் ஆக்கிரமிக்கப்படும்போது...

ஜேர்மன் இறையியலாளர் மார்ட்டின் நிம்லர். அவருடைய இளம்பருவத்தில் யூதர்களுக்கு எதிரானவராகவும், ஹிட்லருக்கு ஆதரவாளராகவும் இருந்தார். ஆனால் ஜெர்மனியில் நாஜி இசம் பரவியபோது, ஹிட்லர் யூதர்களை மட்டும் அழிக்க அல்ல, மாறுபட்ட கருத்துக்கொண்ட எல்லோரையும் அழிக்கவே விரும்பினார் என்பதை உணர்ந்தார். அதன் பின்னர் அவர் ஹிட்லரை எதிர்த்தபோது 1937 இலிருந்து 1945 வரை சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டார். முகாம்களில் இருந்தபோது நிம்லர் ஒரு கவிதை எழுதினார்.

''முதலில் அவர்கள் யூதர்களுக்காக வந்தார்கள்; நான் யூதன் அல்ல என்பதால் அதை எதிர்க்கவில்லை

பிறகு அவர்கள் கம்யூனிஸ்ட்களுக்காக வந்தார்கள்; நான் கம்யூனிஸ்ட் அல்ல என்பதால் அதை எதிர்க்கவில்லை

பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளுக்காக வந்தார்கள்; நான் தொழிற்சங்கவாதி அல்ல என்பதால் அதை எதிர்க்கவில்லை

பிறகு அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள்; அதை எதிர்ப்பதற்கு யாருமே எஞ்சியிருக்கவில்லை'' என்கிறது அந்தக் கவிதை.

இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களில் கலந்துகொண்ட தமிழ் மக்களின் எண்ணிக்கையை மீட்டுப் பார்க்கிறபோது தவிர்க்க முடியாமல் நிம்லரின் கவிதையே ஞாபகத்துக்கு வந்தது.

போர் முடிந்த பின்னர் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளின் கீழ் இராணுவத்தினர் தமிழர்களின் நிலங்களை ஒரு சீரிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கையகப்படுத்தி வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. அரசுடன் சேர்ந்திருந்து அரசியல் செய்பவர்கள்கூட இந்த உண்மையை இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். முடிந்தவரையில் காணிகளை நிலங்களை படையினர் வசப்படுத்துவதற்கு விட்டுவிடாதீர்கள் என்று அரச அலுவலர்களிடம் இந்த அரசியல்வாதிகள்கூட இரகசியமாக மன்றாடுகிறார்கள்.

ஆனால், நாங்களோ – தமிழ் மக்கள் – எங்கள் காணிகளுக்கு ஆபத்து ஏதுமில்லைத்தானே, பின்னர் ஏன் இந்தப் பிரச்சினையில் தலையைப் போட வேண்டும் என்று அல்லது எங்களுக்குக் காணியே இல்லை பின்னர் ஏன் நாங்கள் போராட வேண்டும் என்று சிந்தித்தபடி ''நமக்கேன் வம்பு நாம நம்மட பாட்டில இருப்பம்'' என்பதாக இருந்து விடுகிறோம்.

நிலப் பறிப்பாலும் ஆக்கிரமிப்பாலும் பாதிக்கப்படுபவர்கள் யாராகவோ இருக்கையில் நாம் ஏன் அவர்களுக்காகப் போராட வேண்டும் என்பதே எம்மில் பலருக்குமான நினைப்பு. எமக்கு எத்தனையோ வேலைகள் இருக்கும்போது அதையெல்லாம் விட்டு இந்தப் பிரச்சினைகளைப் பார்த்துக் கொண்டு திரிய முடியுமா என்பது நாம் எழுப்பும் மற்றொரு நியாயம்?

இவையே போராட்டங்களில் மக்கள் தலைகளின் எண்ணிக்கை குறைவதற்கான காரணங்கள். இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் மக்களின் உள்ளூர் பிரதிநிதிகளாக இருப்பவர்களில் கணிசமானோர்கூட இந்தப் போக்கில் இயங்குவதும் வியப்பாக இருக்கிறது. எமக்கு ஏதும் நடக்கவில்லைதானே என்று நாம் இப்படியே இருந்தால் ஒரு நாள், நிம்லர் சொன்னது போல் எங்கள் வீடுகளும் காணிகளும் ஆக்கிரமிக்கப்படும்போது குரல் கொடுப்பதற்காக எவரும் இருக்கப்போவதில்லை.

# இரு நீதிமன்றங்கள்: ஒரே செய்தி

*தமிழ் மக்களது வாழ் நிலங்கள் திட்டமிட்ட முறையில் இராணுவத்தின் தேவைக்கென அரசால் கையகப்படுத்தப்படுவது தொடர்பாக சிங்கள ஊடகவியலாளர் பிரசன்ன அபேவிக்கிரம எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.*

■ **வியெஸ்ரி**

நாளாந்த வாழ்க்கைச் சிரமங்களால் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் பொதுமக்களது ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை அடக்கி, ஒடுக்கிவிட இன்றைய ஆட்சியாளர்கள் பல சூட்சுமமான வழிமுறைகளைக் கையாள்கின்றனர்.

அதற்கான அண்மைக்கால உதாரணங்களையும் குறிப்பிட முடியும்.

இரு வேறு சம்பவங்கள் குறித்து இரு நீதிமன்றங்களால் அண்மையில் விடுக்கப்பட்ட உத்தரவுகளே அவையாகும்.

ஒன்று, அரசியல் ஆதரவுப் பின்னணி கொண்ட குண்டர் கோஷ்டி ஒன்றால் கட்டுவன பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த இரு ஜே.வி.பி. உறுப்பினர்களது இறுதிக் கிரியைகளைப் பொதுமக்களது அமைதிக்குப் பாதகம் ஏற்படாத விதத்தில் அமைதியாக நடத்த வேண்டுமென விடுக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவு.

மற்றையது, தமது சொந்த நிலம் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் யாழ்.குடாநாட்டுத் தமிழ் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட நிகழ்வுக்குத் தடைவிதித்து யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் விடுத்த தடை உத்தரவு.

பாதிப்புக்கு உள்ளான தென்பகுதிச் சிங்கள மக்களுக்கும், வடபகுதித் தமிழ் மக்களுக்கும் எதிராக விடுக்கப்பட்ட இந்த இரு நீதிமன்ற உத்தரவுகளும் வெவ்வேறு வகைப்பட்டவை. ஆனால் அவற்றின் மூலம் விடுக்கப்பட்ட செய்திகள் ஒரே விதமானவையே. அதாவது அதிகாரத்திலுள்ள அரசுக்கு விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டுமேயொழிய, அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய பாதிப்புக்கு உள்ளாகும் எந்தத் தரப்பினருக்கும் உரிமை கிடையாது என்பதே அதுவாகும்.

இவ்வாறு தெற்கு மற்றும் வடக்கின் பாதிப்புக்களுக்கு ஆளான சிங்கள மற்றும் தமிழ் மக்களது ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிக்காது நீதிமன்றங்களால் விடுக்கப்பட்ட உத்தரவுகள் ஒரே விதமானவையாக இருப்பினும், இவ்வாறு தெற்கிலும் வடக்கிலும் அரசுக்கு எதிராகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த அந்த மக்களைத் தூண்டிய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளில் ஒருபுறம் சில ஒற்றுமை இருப்பது போன்றே பாரதூரமான வேற்றுமைகளும் இருப்பதை உணரமுடிகிறது.

ராஜபக்ஷ தரப்பு நிர்வாகத்துக்கு எதிராக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் காணாமல் போகச் செய்யப்படுதல், படுகொலை செய்யப்படுதல், ஜனநாயக நடைமுறை மீறல்கள், உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினத்தால் ஏற்படும் சிரமங்கள் என்பன தென்பகுதி சிங்கள மக்களை எந்த அளவுக்குப் பாதிக்கின்றதோ, அதே விதத்தில் வடபகுதித் தமிழ் மக்களது வாழ்க்கையையும் பாதிக்கச் செய்கின்றன.

அதற்கும் மேலாகத் தமது அரசியல் அடையாளப்படுத்தல் தொடர்பான சிக்கல்களுக்கும் அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறு பாதிக்கப்படும் தென்பகுதிச் சிங்கள மக்களது பாதிப்புக்கள் குறித்த பல அண்மைக்கால சம்பவங்கள் தொடர்பான நேரடிக் காட்சிகள் எம் கண் முன்னால் இருப்பினும், ஊடகப் பண்புகளாலும், சிங்கள பௌத்த போரியல் திரையாலும் தென்பகுதிப் பொதுமக்களுக்கு மறைக்கப்பட்டிருக்கும் வடபகுதி பாதிக்கப்பட்ட மக்களது சிரம வாழ்க்கை குறித்து வெளிப்படுத்த எனக்கு ஒரு வாய்ப்புத் தருவீர்களா?

தமது அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளுக்காக அவலப்பட்ட வடபகுதித் தமிழ் மக்கள் மிக நீண்ட காலமாக ஆகாயமும் பூமியும் பொறுத்துக்கொள்ள இயலாத அளவுக்கு எண்ணற்ற அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள நேர்ந்தது.

எமது சகோதர தமிழ் மக்களது நெஞ்சங்களை நார் நாராகக் கிழித்து தூள் தூளாக்கியே மூன்று தசாப்த கால போர் முடிவுக்கு வந்துள்ளது. ஆகக்குறைந்தது போர் முடிவுக்கு வந்ததன் பின்னராவது அவ்விதம் தூள் தூளாகி இரத்தம் கசியும் தமிழ் நெஞ்சங்களுக்கு அன்பு காட்டி அரவணைத்து ஆறுதல்படுத்தி வேதனையைக் குணப்படுத்த வேண்டிய கடமை தென்பகுதி அரசியல் தலைமைகளுக்கு உண்டு.

ஆயினும் அது குறித்து அக்கறை காட்டாது இரத்தம் கசியும் அந்தத் தமிழ் சகோதரர்களின் நெஞ்சங்களை நிலத்தில் போட்டுக் காலால் மிதிக்கும் வகையிலேயே ஆட்சி அதிகாரத் தரப்புக்கள் செயற்படுகின்றன.

யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் அவர்கள் மேற்கொள்ள முயன்ற ஆர்ப்பாட்டத்துக்கு தடை விதித்ததான செய்தியின் பின்னணி அந்தச் சகோதர தமிழ் நெஞ்சங்களின் புதிய கண்ணீர்க் கதையையே கூறி நிற்கிறது.

தமது சொந்த நிலங்களில் இருந்து தம்மை வெளியேற்றி அவற்றை இராணுவத்தினரின் தேவைக்கெனக் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராகவே வடபகுதி பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள முடிவெடுத்தனர். அரசின் இந்த நியாயமற்ற செயற்பாடு குறித்து அண்மைக் காலமாக ஊடகங்கள் தொடர்ச்சியாக விமர்சித்து வந்துள்ளன. அவற்றில் திருமுறிகண்டி மற்றும் கொக்காவில் பிரதேசத்தில் 4000 ஏக்கர் வரையான நிலம் அரசால் படையினரின் வீடமைப்புத் திட்டத்துக்கென கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடத்தில் படையினரின் குடும்பங்களுக்கென ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. அந்த நிலங்களில் முன்னர் வாழ்ந்து வந்த பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஒன்றில் நலன்புரி நிலையங்களில் அல்லது உறவினர்களின் வீடுகளில் தற்போது ஏதோ வகையில் சிரமங்களுடன் தமது வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் அவர்களில் 165 குடும்பங்களை திருமுறிகண்டியில் வாழ இயலாத தாழ் நிலப் பகுதியில் மீளக்குடியேற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கடந்த 18 ஆம் திகதியன்று அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதுவும் குறிப்பிட்ட அந்தப் பிரதேசம் இராணுவத்தினரின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளதொரு பிரதேசமே.

அதேவேளை தாம் கையகப்படுத்தியுள்ள 1033 ஏக்கர் நிலத்தை சட்டப்படி அரசுடைமையாக்கும் முயற்சிகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். இதில் 29 ஏக்கர் நிலமே அரசுக்குச் சொந்தமான காணி. ஏனையவை தனியாருக்குச் சொந்தமானவை.

யாழ்ப்பாணம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தமிழ் மக்களது மயானபூமிகூட இந்தவிதம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் இந்த வேளையில் இந்த நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இவை தவிர கோப்பாய், நல்லூர், தெல்லிப்பழை போன்ற பிரதேசங்களிலும் தமிழ் மக்களது காணிகள் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவை மட்டுமன்றி பல்லாயிரக் கணக்கான பொது மக்களைப் பலிகொண்ட இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் 17.5 ஏக்கர் நிலத்தின் உரிமையை இராணுவத்தரப்பு கோரி வருவதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன.

இந்தவிதம் தமிழ் மக்களது நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு மேலதிகமாகத் தமிழ் மக்களது மத வழிபாட்டுத் தலங்களையும் அழிப்பதன் மூலம் பௌத்த மத சித்தாந்தத்தை அந்தப் பகுதியில் நிலை நிறுத்த அரசு முயல்வதாக ஊடகங்கள் விமர்சித்து வருகின்றன.

கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் 30 வருடங்கள் பழமை வாய்ந்த பிள்ளையார் கோயிலை இடித்துச் சேதப்படுத்தி விட்டு அங்கு புத்தர் சிலையொன்றை நிறுவும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. வட பகுதியில் மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலும் படையினரும் பௌத்த துறவிகளும் முன்னின்று இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

இவை யாவற்றையும் கூட்டிக் கழித்துக் கணக்கிடும்போது தெரிய வருவதென்ன? இனச் சுத்திகரிப்பு ஒன்றை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது இதிலிருந்து தெளிவாகின்றதல்லவா?

சிங்கள மக்களுக்கு இல்லாத பிரச்சினைகளை இந்த அரசால் தமிழ் மக்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ளமை இதன் மூலம் தெளிவாகின்றதல்லாவா? அதேபோன்று இத்தகைய விதத்தில் வடபகுதியிலும் தென்பகுதியிலும் பாதிப்புக்குள்ளான மக்கள் அதற்கெதிராக கிளர்ந்தெழுவதைத் தடுக்க வெவ்வேறு வகையான அணுகுமுறைகளை முன்னெடுப்பது நாட்டின் ஒரே அரசியல் அதிகாரத்தரப்பே என்பதை நாம் மனதில் கொள்வது அவசியம்.

அதன் மற்றொரு அர்த்தம் அந்த அதிகாரத் தரப்புக்கு எதிராக போராட்டம் நலிவுற்று செயலிழந்து போகப் போவதில்லை என்பதும் ஒன்றிணைந்த போராட்டமாக உருவெடுக்கத்தக்கது என்பதுமேயாகும். இரு நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட ஒரே விதமான உத்தரவுகள் வெளிப்படுத்தும் செய்தி இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தினரின் அதிக பிரசன்னத்தால் பாதிக்கப்படும் யாழ். மக்களின் வாழ்க்கை

*நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட ஆய்வாளர் கிப்சன் பேற்மன் எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கம்.*

யாழ்ப்பாணமாவட்டம் 1995இல் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரின் இருப்பு அதிகமாகக் காணப்படுகின்றது.

யாழ். குடாநாட்டை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து குறுகிய காலத்தில் பல்வேறு இடங்கள் 'உயர் காப்பு வலயங்கள்' என முத்திரை குத்தப்பட்டன. விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை எதிர்நோக்குவதற்கும், இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புக் கருதியும் 'உயர் பாதுகாப்பு வலயங்கள்' அமைக்கப்பட்டன. இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களை விட யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மிக அதிக எண்ணிக்கையான உயர் காப்பு வலயங்கள் காணப்படுகின்றன.

அங்கு மக்களின் வாழ்விடங்களில் 16 சதவீதமானவை உயர் காப்பு வலயங்களாகும். இந்த இடங்களில் பொதுமக்களின் நடமாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துலக மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு மனிதாபிமான உடன்பாடுகளை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், நாட்டில் உயர் காப்பு வலயங்கள் உருவாக்கப்படுவதை இந்த அனைத்துலக உடன்பாடுகளால் தடுக்கமுடியாது. அதற்கான போதியளவு சட்ட வரைபுகள் காணப்படவில்லை. எனினும் உண்மையில் இவ்வாறான உயர் காப்பு வலயங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கின்றன. ஜனநாயக சோசலிச குடியரசான இலங்கை பின்வரும் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான சரத்துகளைக் கொண்டுள்ளது:

- பேச்சு சுதந்திரம்
- அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்
- சங்கம் அமைப்பதற்கான சுதந்திரம்
- மத சுதந்திரம்
- ஒருவர் தனது சொந்தப் பண்பாட்டைப் பின்பற்றி அதனை மேம்படுத்துவதற்கான சுதந்திரம்
- சட்ட ரீதியான தொழில்கள், வர்த்தகம், முயற்சியாண்மை போன்றவற்றை மேற்கொள்வதற்கான சுதந்திரம்.
- நடமாடுவதற்கான சுதந்திரம், இலங்கைக்குள் எந்தவொரு பகுதியிலும் வசிப்பதற்கான சுதந்திரம்

அரசமைப்பின் மூலம் இலங்கை மக்களுக்கு இந்தச் சுதந்திரம் அனைத்தும் உறுதிப்படுத்தப்பட்டாலும் உயர் காப்பு வலயம் என்ற பெயரில் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான பெருமளவான நிலங்களை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

சொந்த இடங்களிலிருந்த மக்களைப் பலவந்தமாக வெளியேற்றியமை, மக்களின் நடமாடும் சுதந்திரத்துக்கு இடையூறு விளைவித்தல், சிறுபான்மை மக்களின் உரிமைகளை மதியாமை போன்றவற்றின் மூலம் இலங்கை அரசு அடிப்படைச் சுதந்திரத்தைக் கொண்டுள்ள உள்நாட்டு மற்றும் அனைத்துலகச் சட்டங்களை மீறிச் செயற்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர் காப்பு வலயங்களும் அகற்றப்படும் என ஜனவரி 2010இல் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். 2011 ஓகஸ்ட் முடிவில் அவசரகாலச் சட்ட நடைமுறைகள் காலாவதியாகிய பின்னர், உயர் காப்பு வலயங்களுக்கு இருந்த 'உத்தியோகபூர்வ' அங்கீகாரம் இல்லாமல் போய்விட்டது.

ஆனால் இந்த மாற்றமானது ஒவ்வொரு மக்களும் இயல்பு வாழ்வை வாழமுடியும் என்பதை உறுதிப்படுத்துவதாக இருக்கவில்லை. அல்லது இவ்வாறான 'உத்தியோகபூர்வ' செயற்பாடுகள் நிறுத்தப்பட்டமை யாழ். குடாநாட்டில் இயங்கும் அனைத்து இராணுவ நிர்வாகங்களும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன என்பதைக் குறிக்கவில்லை.

இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் 2011 முடிவுக்குள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படுவர் என இலங்கை அரசு அறிவித்திருந்தது. ஆனால் இக்காலக்கெடுவுக்குள் பணி பூர்த்தி செய்யப்படவில்லை. அண்மையில், மாதகலைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் தமது நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானித்திருந்தனர். அப்படி நில உரிமையாளர்கள் தமது நிலங்களை மீட்பதற்குச் சட்டத்தை அணுகினாலும்கூட தற்போது நடைமுறையில் காணப்படும் நீதிமுறைகள் இவர்களுக்கு வலுவான தீர்வை வழங்கப்போவதில்லை.

வலி. வடக்கில் உயர் காப்பு வலயங்களில் காணிகளைக் கொண்ட சுமார் 26,000 வரையானவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது தவிக்கின்றனர். யாழ். குடாநாட்டில் உயர் காப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த 100,000 வரையானவர்கள் அண்மைக் காலம்வரையில் சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்து விட்டனர் என்று அரசு தெரிவித்துள்ளது.

உயர் காப்பு வலயங்கள் தொடர்பான கலந்துரையாடல், திட்டமிடல் மற்றும் அவற்றில் சில மக்களின் பாவனைக்காக விடப்பட்டமை போன்றன உயர் காப்பு வலயங்கள் தொடர்பில் தெளிவின்மையை ஏற்படுத்தியுள்ளது. யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து உயர் காப்பு வலயங்களும் மக்களின் பயன்பாட்டுக்காக மீளத்திறக்கப்படுமா என்றும் சந்தேகம் தொடர்ந்தும் நிலவுகின்றது. இராணுவத்தினரின் பயன்பாட்டிலுள்ள உயர் காப்பு வலயங்கள் மக்களின் பாவனைக்காக திறந்து விடும் விருப்பத்தை இலங்கை அரசு இன்னமும் கொண்டிருக்கவில்லை என்பதையே அதன் தற்போதைய நிலைப்பாடு சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கை அரசானது மனித உரிமைகளுக்கான அனைத்துலக பிரகடனம், பொது மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக சாசனம், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளுக்கான அனைத்துலக சாசனம் போன்ற பல முக்கிய சாசனங்களை ஏற்றுக் கைச்சாத்திட்டுள்ள போதிலும், அவற்றைப் பின்பற்றி நடக்கவில்லை.

"ஒவ்வொருவரும் சமஉரிமையுடன், கௌரவத்துடன், சுதந்திரமாக பிறக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் மற்றையவர்களை சகோதர மனப்பான்மையுடன் ஏற்று அவர்களின் உரிமைகளை மதித்து நடக்கவேண்டும்" என்று அனைத்துலக மனிதாபிமான உரிமைகள் சாசனத்தின் முதலாவது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசு பல பத்தாண்டுகளாக இதன்படி நடக்கவில்லை என்பது துரதிர்ஷ்டம்தான்.

உயர் காப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்வதற்கான மக்களின் அடிப்படை மனித உரிமை பறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த மக்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல இடங்கள் அழிந்துவருகின்றன.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002-2006 வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சில நிலங்களை அதன் உரிமையாளர்களிடம் கையளித்தது. ஆனால் தற்போது அந்த நிலங்கள் உள்ளடங்கலாக பல பிரதேசங்களை அரசு உயர் காப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது.

தெல்லிப்பளை, கொல்லன் கலட்டி, பலாலி விமான நிலையத்தைச் சூழவுள்ள காங்கேசன் துறைப் பிரதேசம், பொன்னாலை தொடக்கம் தொண்டமானாறு வரையான கரையோரப் பிரதேசங்கள் மாதகல், கீரிமலை, மயிலிட்டி, வசாவிளான் உள்ளடங்கலாகப் பல உயர் காப்பு வலயங்களாக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மிருசுவில், கிளாலி, அரியாலை கிழக்கு, அல்லைப்பிட்டி போன்ற இடங்களும் இராணுவத்தால் முற்றுமுழுதாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான இடங்களில் இருந்த வசதிகள் ஏற்கனவே அழிக்கப்பட்டு இப்போது போதியளவு வசதி வாய்ப்புக்கள் காணப்படாததால் மக்கள் மீளவும் அங்கு செல்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

முப்பது ஆண்டுகளாக நடந்த குருதி சிந்தும் போரை, உயர் காப்பு வலயங்களில் தமது சொந்த வீடுகளைக் கொண்ட மக்கள் படும் துன்ப துயரங்கள் இன்றும் நினைவூட்டுவனவாக உள்ளன. முதன் முதலாக உயர் காப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்ட போது, பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்தனர். இந்த மக்கள் இன்று வரை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படவில்லை.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்திலுள்ள தமது நண்பர்களினதும், உறவினரதும் வீடுகளில் தற்காலிகமாக வாழ்கின்ற அதேவேளையில், ஏனைய மக்கள் நலன்புரி நிலையங்களில் தொடர்ந்தும் தங்கி வாழ்கின்றனர். இந்த மக்கள் தமது சொந்த நிலங்களில் வாழ முடியாததால் இவர்கள் தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதில் சங்கடங்களை எதிர்நோக்கியுள்ளனர். எந்தவொரு தொழிலையும்கூட மேற்கொள்ள முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். தவிர, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் என்பது மிகத் தாழ்வாகக் காணப்படுகின்றது. ஏனெனில் முகாம்களில் இவர்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

இவ்வாறான தொடர் இடப்பெயர்வுகளின் விளைவாக தமிழ் இளையோர் தமது கல்வியை இடைநிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துவிட்டனர். இடப்பெயர்வு காலத்தில் இந்த மக்களுக்கு ஓர் உறுதியான தொழில் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

இலங்கை இராணுவத்தினர் பல ஆண்டுகளாக மக்களின் நிலங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால் இந்த மக்கள் போரின் பின்னரும் தமக்கான வாழ்வை மீளக் கட்டியெழுப்ப முடியாதுள்ளனர். போர் தற்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், தமிழ் மக்கள் வாழ்விடங்களில் இராணுவமயப்படுத்தலும், இராணுவச் செலவினமும் இன்றும் அதிகரித்த வண்ணமேயுள்ளன.

இந்த ஆண்டில் இலங்கையின் பாதுகாப்புச் செலவீனம் 2 பில்லியன் டொலர்களாகும். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இது ஏழு சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

*(தொடரும்)*

**யாழ்.மாவட்டத்தில் மக்களின் வாழ்விடங்களில் 16 சதவீதமானவை உயர்பாதுகாப்பு வலயங்களாக உள்ளன. இங்கு மக்களது நடமாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம் இந்த அகங்காரம்

சமய உலகில் ஒரு முரண்பாட்டுக் கொடுமை உண்டு. கொள்கையும் நடைமுறையும் வேறு வேறாக இருக்கிற கொடுமைதான் அது. "ஆணவம் கூடாது, அகங்காரம் கூடாது, அகங்கார ஆணவம்தான் இறைவனிடம் இருந்து நம்மைப் பிரித்து நரகத்தில் தள்ளுகிறது" என்று ஓயாமல் உபதேசிக்கும் சமயத் தலைவர்கள் பலர் அகங்காரத்தின் உச்சியில் இருக்கின்றார்கள்.

"ஆணவத்தை விட்டு விடுங்கள்" என்று நமக்கு உபதேசிக்கும் சாமியார்கள் நாம் விட்டுவிட்ட ஆணவத்தை எல்லாம் மொத்தமாகச் சேர்த்து மூட்டை கட்டித் தாம் வைத்திருக்கும் கொடுமை மிகவும் துன்பமானது.

மதத் தலைவர்களைப் பார்க்கச் சென்றால் அங்கே ஒரே ஒரு நாற்காலி மட்டுமே இருக்கும். அவர் மட்டுமே உயர்வானவர். மற்றவர் எல்லோரும் கீழானவர்கள் என்று அவரே முடிவு செய்துவிடுகிறார். துறவிகள் , சாமிகள், சமயத்தலைவர்கள் பலருக்கு இந்த அகங்காரம் இருப்பது நல்லதல்ல. அவர்கள் துறவின் இலட்சணத்துக்கு இது இழுக்கு.

"காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன். காலின் மேல் கால் வைக்கப் பயந்தேன். காலினைக் களித்து நன்கு நீட்டவும் பயந்தேன். நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தேன்" என்று அடக்கத்துடன் பாடினார் வள்ளலார். அவரல்லவா சமயத்தலைவர்.

"நான் மிகவும் பெரிய மனிதர், நீங்கள் எல்லாம் அற்பப் பூச்சி" என்கின்ற பாவனையில் சில சாமியார்கள் பவனிவருவார்கள். துறவின் வழி இவர்கள் போக வேண்டிய முக்திக்கு இது தடை என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

மிக உன்னத துறவி என்று பலராலும் கொண்டாடப்பட்டவர் காஞ்சி பீடத்தில் இருந்து நூறாண்டு வாழ்ந்த மகா பெரியவர். அவர் துறவின் இலக்கணம். குற்றம் அற்றவர். மாட்டுக் கொட்டிலில் தங்குவார். எளிமையான மகான். கர்வம் சிறிதும் இல்லாத கல்விக்கடல்.

ஒருமுறை இந்தத் துறவியிரிடம் " வாழ்க்கையில் நீங்கள் இழந்த பாக்கியம் எதுவும் உண்டா? துறவு பெற்றதால் இந்தப் பேறு நமக்கு அமையவில்லையே என்று எதைக் குறித்தாவது நீங்கள் வருந்தியது உண்டா?" என்று கேட்டார்கள்.

சுவாமிகள் பளிச்சென்று, "இந்தப் பீடத்திற்கு என்று ஒரு மரபு உண்டு. பீடாதிபதியாக இருக்கிறவர்களை எல்லோரும் விழுந்து நமஸ்காரம் செய்வார்கள். ஆனால் பீடாதிபதிகள் யாரையும் விழுந்து நமஸ்காரம் செய்வதில்லை. பீடத்துக்கு அது பொருந்தாது. நான் சின்ன வயதிலேயே பட்டத்துக்கு வந்துவிட்டேன். பல பெரியவர்களைச் சந்திக்கின்ற போதெல்லாம் விழுந்து நமஸ்காரம் செய்து ஆனந்தப்பட வேண்டும் என்று நினைப்பேன். ஆனால் அவ்வாறு செய்ய முடியாது. நான் மதிக்கிற பலரை விழுந்து நமஸ்காரம் செய்யும் பாக்கியத்தை நான் இழந்துவிட்டேன். இது எனக்கு மிகவும் வருத்தம் தரும் விடயம்" என்றார்.

ஆஹா... அவரல்லவா பெரியவர். தன்னைவிடப் பெரியவர்களை நமஸ்கரிக்கும் எண்ணமல்லவா அகங்காரம் அற்ற நிலை. இன்றைக்கும் பல சாமியார்கள் தங்களை விடப் பெரியவர்கள் யாரும் இருக்கவே முடியாது என்று அறிவிக்கிறார்களே.. என்ன செய்வது?

கபீர்தாஸ் வாழ்வு கிட்டத்தட்ட ஒரு துறவியின் வாழ்வுதான். ஆனால் அவர் துறவறம் ஏற்கவே இல்லை.

"நீங்கள் ஏன் துறவியாக சந்நியாசம் வாங்கக்கூடாது?"என்று பலர் அவரைக் கேட்டார்கள். "நன்றாக இருக்கிறது இப்போது நான் பலரையும் நமஸ்கரிக்கும் பாக்கியத்தில் இருக்கிறேன். துறவியாகி விட்டால் பலரும் என்னை நமஸ்கரிப்பார்கள். பலரை வணங்கும் என் பாக்கியமே போய்விடுமே" என்றார். ஆணவமற்ற துறவு அவருடையது.

விஸ்வாமித்திரரும் வசிட்டரும் தேவலோகம் போனார்கள். அங்கு வசிட்டருக்கு நாற்காலி போட்டார்கள். விஸ்வாமித்திரருக்கு நாற்காலி இல்லை. அவர் கோபித்துக் கொண்டார். பிரமன் அவரைச் சமாதானம் செய்து, "உங்களை விட அறிவில் குறைந்த ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்து மேலே வந்தால் ஆசனம் கிடைக்கும்" என்றார்.

வரும் வழியில் ஓர் ஏழை விவசாயியைப் பார்த்து அறிவற்றவன் என்று விஸ்வாமித்திரர் முடிவு செய்து அவனை அன்னதானத்திற்கு அழைக்க நினைத்தார்.

அவன் தன் மனைவியுடன் ஏதோ சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அதைக் கவனிக்கச் சொன்னார் வசிட்டர்.

விவசாயியின் மனைவி உணவு கொண்டு வந்திருந்தாள். சாப்பிடப் போன விவசாயி. "அப்பாவும் அம்மாவும் சாப்பிட்டார்களா?" என்றான்.

"அவர்களுக்கு என்ன அவசரம் ? உழைக்கிற நீங்க முதலில் சாப்பிடுங்கள். அவர்கள் பின்னர் சாப்பிடுவார்கள்" என்றாள் மனைவி.

துள்ளியெழுந்த விவசாயி, "பெற்றவர்கள் உண்ணாமல் நான் உண்ணுவதா? உருப்படுவேனா? இந்த வேலை இங்கே ஆகாது, முதலில் அவர்கள் சாப்பிட்ட செய்தியைச் சொல்லு... பின்னர் நான் சாப்பிடுகிறேன்" என்று கூறிவிட்டு வயலுக்குப் போய்விட்டான்.

"இவனா அறிவற்றவன்?" என்று வசிட்டர் கேட்டார்.

" எனக்கு ஏன் சொர்க்கத்தில் நாற்காலி கிடைக்கவில்லை என்று இப்போது புரிகிறது" என்றார் விஸ்வாமித்திரர்.

எவரையும் நினைத்த மாத்திரத்தில் நம்மைவிடக் குறைவாக நினைப்பது நல்லதன்று. சமயத் தலைவர்கள் அப்படி நினைப்பது அவர்களது சமயத்திற்கு ஆகாது.



சுகி.சிவம்

# தீவகத்தின் முதல் ஆங்கிலப் பாடசாலையாக மிளிர்ந்தது புனித அந்தோனியார் கல்லூரி



என்.சசிக்குமார்

ஊர்காவற்றுறையில் அமையப் பெற்றுள்ள புனித அந்தோனியார் கல்லூரி தீவகக் கல்விப்புலத்தின் திடம் மிக்க அடையாளங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆலயத்திற்கு அருகில் நீலக்கடலைகள் ஆரத்தழுவிடும் கீழைத் திசையில் நிலை பெற்றுள்ள இந்தக் கல்லூரி 1872 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜனனம் கொண்டது. யாழ்ப்பாண அப்போஸ் தலிக்க ஸ்தானிகர் மேதகு கிறிஸ்தோப்பர் பொஞ்ஞின் அமல மரித்தியாகியின் காலத்தில் ஊர்காவற்றுறை பங்குத்தந்தையாக விளங்கிய பிரான்ஸ் நாட்டு மறை போதகர் அருள்திரு ஜே.பொய்சோ அ.ம.தி. அவர்களால் இக்கல்லூரி ஸ்தாபிதம் கண்டது.

ஊர்காவற்றுறை வாழ் பெருமக்கள் மனமுவந்து வழங்கிய ஆறு ஏக்கர் காணியில் அழகுற எழுந்த இந்தக் கல்லூரி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே முதன்முதலாக ஆங்கிலம் கற்பிக்கப்படும் கல்லூரியாக எழுந்த பெருமைக்குரியது. இந்தக் கல்லூரியின் முதலாவது முதல்வர் என்ற பெருமையைப் பெற்றவர் ஏ.சுவாம்பிள்ளையாவார். பின்னர் 1879 தொடக்கம் 1896 வரை அமலமரித் தியாகிகள் சபைக்குழுக்களால் இக்கல்லூரி நிர்வகிக்கப்பட்டது.

1883இல் யாழ்ப்பாணத்தின் 2ஆவது ஆயராக விளங்கிய மேதகு ஹென்றி யூலியன் அ.ம.தி ஆண்டகையின் காலம் முதல் இந்தக் கல்லூரி துரித வளர்ச்சி கண்டது. அப்போது தீவுப் பகுதியில் பணியாற்றிய அருள்திரு ஜே.என்.எஸ். சந்திர சேகரம் அடிகளார் இளந்துறவிகளாக விளங்கிய புனித சூசையப்பர் சபை சகோதரர்களிடம் கல்லூரியை ஒப்படைக்குமாறு ஆயரிடம் பெரிதும் வேண்டினார். இதன் பயனாக 1896இல் அருட்சகோதரர்கள் டெனிஸ், பிலிப், பற்றிக் ஆகியோர் அடங்கிய புனித சூசையப்பர் சபைக் கல்விமான்கள் ஊர்காவற்றுறையை வந்தடைந்தனர். 1907இல் கல்லூரி ஆங்கிலப் பாடசாலையாகப் பதிவுசெய்யப்பட்ட பின்னர் ஆரம்பப் பாடசாலைக் கட்டடம் 1909இல் விஸ்தரிக்கப்பட்டது. அருட்சகோதரர்கள் போல், இன்னாசிமுத்து, பீற்றர் கிளமென்ற் ஆகியோரும் இந்தப்பாடசாலைக்கென அனுப்பி வைக்கப்பட்டனர். 1918இல் இங்கு 250 மாணவர்கள் கல்வி கற்றபோது அவர்களுடைய பெறுபேற்று வீதம் 89 ஆக இருந்தது என சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

இந்தப் பாடசாலையின் துரித வளர்ச்சியும் மாணவர்களின் பரந்த ஆங்கிலக் கல்வி அறிவும் இந்தப் பாடசாலையை ஆங்கில பாடசாலையாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற தீவுப்பகுதி மக்களின் அவாவும் 1921இல் நிறைவுகண்டது. 1921இல் இருந்து ஆங்கிலம், தமிழ் எனும் இரு பிரிவுகள் பாடசாலையில் இயங்கத் தொடங்கின. தமிழ்ப் பாடசாலையின் தலைமையாசிரியராக அருட் சகோதரர் பீற்றர் பணியாற்றியபோது ஞானப்பிரகாசம், இராசையா ஆகியோர் அவருக்குத் துணைபுரிந்தனர்.

(தொடரும்)

# போரிலிருந்து மீண்டு பொலிவுறும் பெரியபுலம் வீரகத்தி விநாயகர்



லக்ஸ்மன்

ஆரம்பத்தில் சிறிய குடிலில் அமைந்திருந்த இந்த ஆலயத்தைக் கட்டடமாகப் புனரமைத்தவர் வே.விசுவலிங்கம். 1909 ஆம் ஆண்டில் இருந்து இந்த ஆலயத்தைப் பராமரித்து வந்த சின்னக்குட்டியர், விசுவலிங்கம் குடும்பங்களே கொடியேற்றத் திருவிழாவைச் செய்து வந்தனர். அத்துடன் விசுவலிங்கம் என்பவரே ஆரம்ப காலத்தில் பத்துத் திருவிழாக்களையும் செய்துவந்துள்ளார்.

புங்குடுதீவில் முதன்முதலாக தேர் ஓடியது இந்தக்கோயிலில்தான் என தற்போது 83 வயதையுடைய இளைப்பாறிய ஆசிரியை மீனாட்சி சிங்கராஜா கூறுகின்றார். இவர் விசுவலிங்கத்தின் மகளாவார். இந்தப் பரம்பரையைச் சேர்ந்த புங்குடுதீவு மரணவிசாரணை அதிகாரியாகவுள்ள பிரேமகுமார் தற்சமயம் கொடியேற்றம் தேர்த்திருவிழாக்களைச் செய்து வருகிறார் எனத் தெரிகின்றது.

ஏனைய நால்வரும் மேற்படி ஆலயத்தைச் சேர்ந்தவருள் (சபையை) தெரிவு செய்யப்பட வேண்டும். குறிப்பிட்ட மூன்று தர்மகர்த்தாக்கள் ஆயுள்காலமும் ஏனைய நால்வரும் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை தெரிவு செய்யப்படவும் வேண்டும். இது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தினர் நவராத்திரி, நடேசர் அபிஷேகம், சதுர்த்தி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை போன்ற விழாக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. 1965 இல் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. 1991-1996 வரையான காலப்பகுதியில் மக்களற்ற நிலையில் ஆலயப்பகுதி பெரும் சேதமுற்றிருந்தது. பூசைகள் இடம்பெறாத நிலையில் இந்தக் காலங்களில் அங்கு தங்கியிருந்த கனகரத்தினம் என்பவர் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று விளக்கு வைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேற்றம் செய்யாத நிலம், போக்குவரத்துப் பிரச்சினை, இறுக்கமான கட்டுப்பாடுகள் குடியிருப்பவர்களுக்கான உத்தரவாதமின்மை, தனிமை வாழ்வு என்பன இன்னமும் தொடரும்போதும் விநாயகர் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் ஆலயத்தை அழியவிடாது பாதுகாப்பதில் அக்கறை காண்பிக்கிறார்கள். 1997இல் அடியார்கள் கோயில் திருப்பணிகளை மேற்கொண்டு அதனை மீண்டும் உன்னத நிலைக்குக் கொண்டு வந்துள்ளனர். இதற்கு உந்து சக்தியாக பிரபல வர்த்தகர் க.தேவதாஸ் இருந்துள்ளார்.

நா.அம்பலவாணரைத் தலைவராகவும் செயலாளராக க.தேவதாசையும் பொருளாளராக ஆ.விஸ்வலிங்கத்தையும் கொண்ட தற்போதைய நிர்வாகம் ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்த திருப்பணிச்சபை என்பன தமது பணிகளை நிறைவேற்றி உள்ளதுடன் மிகுதியாகத் தம்வசம் இருந்த பணத்தையும் நிர்வாக சபையிடம் ஒப்படைத்துள்ளது. கோயிலுக்கென சுமார் நூறு ஏக்கருக்கும் அதிகமான ஏக்கர் நிலம் உள்ளது. கோயிலின் வடக்குப் பகுதியில் ஆலயத்திற்கு வரும் அடியார்கள் தங்கி நிற்கக்கூடியதான மடம் ஒன்றை அமைக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

பழைய தேர் உடைந்து பாவிக்க முடியாத நிலையில் உள்ளது. புதிய தேர் ஒன்றை அமைக்கவும் அன்னதான மடத்தைப் புனரமைக்கவும் சுற்று மதில்கள் அமைக்கவும் வேண்டியுள்ளன. அதற்கான வேலைகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும். என்பது இப்போதைய நிர்வாகத்தினரின் குறிக்கோளாக உள்ளது. 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பார்கள். குடாநாட்டைப் பொறுத்த வரை கோயில் உள்ள ஊரெல்லாம் குடியில்லா ஊராகி விட்டது. இந்த நிலையை மாற்றி வீரக்தி விநாயகர் ஆலயச் சூழல் முன்பு இருந்தது போல அதிக மக்களைக் கொண்ட பகுதியாக அதனை மாற்ற விநாயகரின் அருள் வேண்டும் என்பதுதான் எமது முக்கிய பிரார்த்தனையாக இருக்கிறது என்கிறார் செயலாளர் க.தேவதாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத் தேர்தலில் கூட்டமைப்பு நிச்சயம் போட்டியிடும்

## அரியநேத்திரன் எம்.பி. கூறுகிறார்



தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கட்சி பதிவதென்பதும், கூட்டமைப்பு ஒற்றுமையாக இருப்பதென்பதும் ஒரே ஸ்தானத்தில் வைத்து அலசி ஆராயும் விடயமல்ல.

அம்பாறை, ஜூன் 28

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் போட்டியிடும். இதற்காக நாம் எம் கொள்கையைவிட்டு இறங்குவதாக அர்த்தமில்லை. இடைக்கால நிர்வாகமாக அதனைக் கொள்வோம் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில் இரா.சம்பந்தன் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தலைமைப் பேருரையின் ஒளிப்பேழை இறுவட்டு வெளியீட்டு விழா காரைதீவு விபுலானந்தா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய காலகட்டத்தில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மிக முக்கியமானதாகும். தமிழ்மக்கள் எவருக்குப் பின்னால் அணி திரள்கிறார்கள் என்பதை அறிவதற்கு இந்தத் தேர்தலை சர்வதேசம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எமக்குள் பிரச்சினைகள் இல்லாது ஒன்றுபட்ட சக்தியாக நாம் திகழ்வதன் மூலம்தான் தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தை செவ்வனே முன்னெடுத்துச் செல்லமுடியும்.

இன்று சிலர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் ஒற்றுமையில்லை என்ற புரளிகளைக் கிளப்பத் தொடங்கியுள்ளனர். கூட்டமைப்பின் ஒற்றுமை குறித்து வெளியிடும் விஷமத்தனமான விமர்சங்கள் அர்த்தமற்றவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையில் எவ ரும் சந்தேகம்கொள்ளத் தேவையில்லை. கூட்டமைப்பு ஒற்றுமையாகவே உள்ளது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாகவே செயற்படுகின்றது.

ஆனால் தேர்தல் திணைக்களத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிந்தால்தான் அதில் ஒற்றுமையுள்ளதென்று சிலர் நினைக்கிறார்கள்.

2002, 2004, 2010ஆம் ஆண்டுகளில் பதியாமலிருந்து வந்த போதிலும் இப்போது ஏன் இதைப் பெரிதுபடுத்தி விஷமப்பிரசாரம் செய்ய முனைகிறார்களோ புரியவில்லை.

நிச்சயமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கட்சி பதிவதென்பதும், கூட்டமைப்பு ஒற்றுமையாக இருப்பதென்பதும் ஒரே ஸ்தானத்தில் வைத்து அலசி ஆராயும் விடயமல்ல. ஒற்றுமை வேறு, கட்சிப் பதிவென்பது வேறு. கட்சி பதிந்தால்தான் ஒற்றுமை என்பதல்ல.

ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் ஒற்றுமையை இல்லாமல் செய்வதற்காகப் பல சக்திகள் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய சக்திகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைக் குழப்புவதற்குப் பணம் கொடுத்தும் பலரை இறக்கியுள்ளன. இதனால்தான் விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

**ஜனநாயகக்கட்சி**

இலங்கையில் 63 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. இதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும்தான் ஒரு ஜனநாயகக் கட்சியாகத் திகழ்கின்றது.

எம்மை எவரும் விமர்சிக்க முடியும், எம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடும்பாவிகளை எரிக்க முடியும், கௌரவமாகக் கறுப்புக் கொடியும் எமக்குக் காட்டமுடியும். எதையும் தாங்கும் சக்தியாக, ஜனநாயகத்தை மதிக்கும் சக்தியாக இதன் போதெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திகழும் என்பதே வரலாறு ஆகும்.- என்றார்.

(ச-30)

## வான் விபத்தில் 10 பேர் படுகாயம்



மஸ்கெலியா,ஜூன்28

மஸ்கெலியாவில் இருந்து நல்லதண்ணீர் நோக்கிப் பயணித்த தனியார் வான் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதால் படுகாயமடைந்த 10 பேர் மஸ்கெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு ரிக்காடன் பீட்டன் தோட்டத்துக்கு அருகில் பாதையை விட்டு விலகி மரத்துடன் மோதி வான் விபத்துக்குள்ளானதில் பயணம் செய்தவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பாக நல்லதண்ணீர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பிரிட்டன் பெண்ணுக்கு விளக்கமறியல்

கண்டி,ஜூன்28

விசா இன்றிச் சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த பிரிட்டன் நாட்டுப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கண்டி - நாகஸ்தேனை பகுதியில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் தற்போது மனநிலை குன்றிய நிலையில் உள்ளதாகவும் கண்டிப் பொலிஸார் கூறுகின்றனர். (ச)



கிழக்கு மாகாணக் காணித் திணைக்களத்தினால் திருகோணமலையில் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

## பட்டதாரிக்கு நியமனம் வழங்க அரசு முன்வந்தமைக்கு பாராட்டு

எருவில்,ஜூன்28

கிழக்கு மற்றும் வட மாகாணப் பட்டதாரிகளுக்கு எவ்வித பாகுபாடுமின்றி நியமனங்களை வழங்க அரசு முன்வந்துள்ளமைக்கு இலங்கை சுதந்திர பட்டதாரி சங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்கு மாகாணத்தில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் வேலைத்திட்டம் அரசினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

கிழக்கு மாகாணப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் வேலைத்திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், அடுத்த கட்டமாக வடமாகாண வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

30 ஆண்டு காலமாக இடம்பெற்ற போர்ச் சூழலுக்கு மத்தியிலேயே கிழக்கு மற்றும் வட மாகாணப் பட்டதாரிகள் பட்டப்படிப்பை மேற்கொண்டனர். இவர்களின் அயராத முயற்சி மற்றும் தியாகங்களை நாம் பாராட்ட வேண்டும். அத்துடன் பெற்றோரின் வழிகாட்டலினால் இன்று பட்டதாரிகளாகச் சமூகத்தில் நல்ல அந்தஸ்துடன் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் திறமைக்கு ஏற்ப பட்டதாரி நியமனங்களை வழங்க வேண்டிய சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-31)

## பெற்றோல் விற்ற வர்த்தகர் கைது

பொகவந்தலாவை, ஜூன் 28

பொகவந்தலாவை நகரில் சட்டவிரோதமாகப் பெற்றோல் விற்பனை செய்து வந்த வர்த்தகர் ஒருவரைப் பொகவந்தலாவைப் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவை நகரில் விசேட அதிரடிப் படையினரும் பொகவந்தலாவைப் பொலிஸாரும் இணைந்து திடீர் சோதனை ஒன்றை மேற்கொண்டபோதே குறித்த வர்த்தகர் கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து 22 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டதாகப் பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட வர்த்தகரை ஆள்பிணையில் செல்ல பொலிஸார் அனுமதித்துள்ளனர்.

(ச)

## கந்தப்பளை நகரத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

நுவரெலியா,ஜூன்28

நுவரெலியா, கந்தப்பளை நகரத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

தேயிலைமலை வனப் பகுதியிலிருந்தே கந்தப்பளை நகர பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த பிரதேச சபை அதிகாரிகள், தற்பொழுது கடும் காற்று வீசுவதனால் வரட்சி ஏற்பட்டிருக்கின்றது. ஆகையினால் வனப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நீர்தாங்கியில் நீர்வற்றிக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பணத்துக்காகக் குடிதண்ணீர் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

நீர்வளம் நிரம்பிய கந்தப்பளையில் வாழ்கின்ற இம் மக்களுக்கு இவ்வாறான நிலை உருவாகுவதைத் தடுக்க நுவரெலியா பிரதேசசபை உடனடி நடவடிக்கை மேற்கொள்வதோடு இவ்வாறான நீர்ப்பற்றாக்குறைக் காலத்தில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

## மரையை வேட்டையாடியோர் கைது

கண்டி,ஜூன்28

பொகவந்தலாவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கியூ தோட்டப் பகுதியில் மரையொன்றை வேட்டையாடிய குற்றச்சாட்டின் பேரில் இருவர் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்களிடமிருந்து 36 கிலோ மரை இறைச்சியைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். குறித்த நபர்கள் ஹற்றன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை, நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். பெண்கள் வகையில் சில செலவுகளைச் செய்யலாம். தொலைபேசி வழியில், சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக, உங்களின் வீட்டுக்கு வராத உறவினர் ஒருவர் வருவார்.

**இடபம்:** கடந்த காலத்தில் உறவினர் ஒருவர் செய்த உதவிக்கு, இப்போது பதில் உதவி செய்வீர்கள். நாளைய சில காரியங்களுக்காக, இன்றே முன்னேற்பாடு செய்வீர்கள். பழைய அனுபவம் ஒன்றை, அசை போட்டுப்பார்த்து, புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள்.

**மிதுனம்:** நண்பர்கள், சக ஊழியர்களுக்காக தாராளமாகச் செலவு செய்வீர்கள். நேரத்திற்கு சாப்பிடாமல், வேலைகள் செய்வதன் மூலம் உடல் உபாதைகளுக்கு ஆள்படுவீர்கள். சிலர் தங்களின் பிரச்சினைகளை உங்களிடம் சொல்லி, ஆலோசனை கேட்பார்கள். தூக்கமின்மையால் அவதிப்படுவீர்கள்.

**கடகம்:** பொறுப்பில்லாமல் செயற்படும் குடும்ப உறுப்பினர்களால் கவலை அடைவீர்கள். உங்களுக்கு வேண்டியதை சாதிக்க நண்பர்கள் ஒருவரின் உதவியை நாடுவீர்கள். ஆதாயமில்லாத விடயங்களில் தலையிட்டு கோபம், பதற்றம் ஏற்படும். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்கலாம்.

**சிங்கம்:** புத்திசாலித்தனமான முடிவுகள் எடுத்து செயற்படுவீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, செல்வாக்கு அதிகரிக்கும். உங்களுக்குத் தேவையான சில பொருள்களை வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று, சுலபமாக முடிந்து விடலாம்.

**கன்னி:** கௌரவத்துக்காகச் செலவுகள் செய்வீர்கள். நண்பர்களுடன் விருந்துகளில் பங்கேற்பீர்கள். உங்களின் சொல் பேச்சு கேட்காமல் குழந்தைகள் நடப்பதன் மூலம் கோபம் அடைவீர்கள். அயலாருடன் சுக,துக்கங்களை பகிர்ந்து கொள்வீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை பிற்போட்டு வைப்பீர்கள்.

## நாளை

ஆனி 15 வெள்ளிக்கிழமை 29.06.2012
திதி: தசமி பி.இ 12.32 வரை
நட்சத்திரம்: சுவாதி சித்தம் மு.இ 11.04 வரை
சுபநேரம்: 05.56- 07.26 வரை
ராகு காலம்: 10.26- 11.56 வரை

**துலாம்:** தொட்ட காரியங்கள் துரிதமாக நடக்கும். மற்றவர்கள் செய்ய வேண்டிய சில வேலைகளையும் சேர்த்து, நீங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். குறைந்தளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில், அதிகளவில் பலன் கிடைக்கும். பரபரப்பாகச் செயல்படுவீர்கள்.

**விருச்சிகம்:** ஆரவாரம் இல்லாமல், அமைதியாகச் செயற்படுவீர்கள். மற்றவர்களை நம்பி, சில வேலைகளை ஒப்படைத்து விட்டு அது எப்படியாகுமோ என்று கலக்கம் ஏற்படும். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்தி வரும். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவிகளை எதிர்பார்ப்பார்கள்.

**தனுசு:** உறவினர்கள் சிலரைத் தொடர்பு கொண்டு, முக்கிய விடயங்களைப் பேசுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை, நண்பர்கள் மூலம் முடிப்பீர்கள். வாய்ப்புகள் தேடி வரும் நாள். உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். பல நாள்களாக வராமல் இழுத்தடித்த பண வரவு ஒன்று வரும். சில வேலைகளைச் செய்ய மறுத்து விடலாம்.

**மகரம்:** எந்த வேலையையும் பிற்போடாமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். தற்செயலாக நடக்கும் சில விடயங்களால், உங்களுக்கு சந்தோஷம், மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலர் உங்களைப் பற்றிப் பெருமையாகப்பேசுவர். மாலை நேரத்தில், நண்பர்களுடன் முக்கிய நிகழ்வு ஒன்றைப் பற்றி உரையாடுவீர்கள்.

**கும்பம்:** தடுமாற்றங்கள், குழப்பங்களைச் சந்திப்பீர்கள். உறவினர் ஒருவரால் ஏற்பட்ட மன உளைச்சல், சங்கடங்கள் தீரும். உங்களின் வேலை ஒன்றுக்காக, மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த, கோயில் ஒன்றுக்கு செல்வீர்கள்.

**மீனம்:** சில பொருள்களை வாங்க ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய நேரிடும். வியாபாரிகள், வாடிக்கையாளர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நல்லது. திட்டமிட்ட வேலை ஒன்றில், திடீரென மாற்றங்கள் செய்யலாம். எந்த வேலையும் விறுவிறுப்பாக முடியாமல், கடுமையாக இழுத்தடிக்கலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | 3 | | 5 | | |
| | | 5 | 4 | | | 2 | | |
| | 7 | 4 | 8 | 9 | | 6 | | 1 |
| | | 7 | | 2 | 4 | | | 3 |
| | | 8 | | | | 9 | | |
| 3 | | | 5 | 8 | | 4 | | |
| 4 | | 3 | | 5 | 1 | 7 | 6 | |
| | | 6 | | | 9 | 1 | | |
| | | 1 | | 7 | | | | 5 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 2 | 8 | 4 | 5 | 7 | 1 | 6 |
| 1 | 7 | 5 | 3 | 2 | 6 | 9 | 4 | 8 |
| 8 | 4 | 6 | 9 | 7 | 1 | 3 | 2 | 5 |
| 7 | 8 | 3 | 5 | 6 | 4 | 1 | 9 | 2 |
| 4 | 6 | 1 | 2 | 8 | 9 | 5 | 7 | 3 |
| 2 | 5 | 9 | 7 | 1 | 3 | 8 | 6 | 4 |
| 3 | 9 | 4 | 1 | 5 | 2 | 6 | 8 | 7 |
| 6 | 1 | 8 | 4 | 3 | 7 | 2 | 5 | 9 |
| 5 | 2 | 7 | 6 | 9 | 8 | 4 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Aircom E
Travelss & Tours
எமது முதலாவது கிளை யாழ். நகரில் இன்று குதூகலமாக ஆரம்பம்

**Head Office**
No - 2A, Ratnam Road,
Colombo - 13.
Tel - 011 4617109
Fax - 011 2336446

**Branch**
No -6, Charambiady Lane,
Off Stanly Road, Jaffna.
Tel - 021 221 9113

AGENT FOR
WESTERN UNION®
MMBL Money Master
(19782)(6-8-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கல்வியை சீர்குலைத்த கல்வியமைச்சர் பதவி விலகுக!

## இலங்கை ஆசிரியர் சங்கம் காட்டம்

கொழும்பு,ஜூன்28

மாணவர்களுடைய கல்வியைச் சீர்குலைத்த அமைச்சர் தொடர்ந்தும் பதவியில் இருப்பதை அனுமதிக்கக் கூடாது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் இசற் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். ஆனாலும் அதனைக் கல்வி அமைச்சர் உள்வாங்கிக் கொள்ளவில்லை. இதனால் மாணவர்களது கல்வியைச் சீர்குலைத்த கல்வி அமைச்சர் பதவியில் இருக்கக் கூடாது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மூன்று லட்சம் மாணவர்களின் வாழ்க்கையுடன் கல்வி அமைச்சு விளையாடியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாணவர்களின் உரிமை மீறப்பட்டுள்ளது. மாணவர்களின் உரிமையை மீறிச் செயற்பட்ட அமைச்சர் தொடர்ந்தும் பதவி வகிப்பது நியாயமாகுமா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஆண்டு 2 லட்சத்து 94 ஆயிரம் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினர். இதில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் விடைத்தாள் மீள் மதிப்பீட்டுக்காக 750 ரூபா செலுத்தி விண்ணப்பம் செய்துள்ளனர் என்று அவர் கூறினார்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் படி புதிய, பழைய பாடத்திட்டங்களுக்கு அமைவாக இசற் புள்ளிகள் வழங்கப்படாமல் இரண்டினையும் இணைததாகவே இசற் புள்ளிகள் வெளியிடப்பட்டன.

மாணவர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையினை ஏற்படுத்தியது. இதனையடுத்து மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு மாணவர்கள் முறைப்பாட்டினைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஒல்லாந்தர் கோட்டை மக்களின் பார்வைக்கு




கொழும்பு,ஜூன்28

கற்பிட்டியில் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கோட்டையை பல தசாப்தங்களுக்குப் பின் தற்போது பொது மக்கள் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கோட்டையைப் பார்வையிட விரும்புவோர் அடையாள அட்டைகளினை பதிவு செய்த பின் கடற்படையினைச் சேர்ந்த ஒருவரின் வழிகாட்டலில் கோட்டைக்குள் செல்வதற்கு அனுமதியளிக்கப்படுவதாக கற்பிட்டி கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார். இங்கு திமிங்கிலத்தின் எலும்புகள், பழைய நங்கூரம் உட்பட பல பொருள்களையும் காணக் கூடியதாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு புதிய பணிப்பாளர்

கொழும்பு,ஜூன்28

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய நிர்வாகப் பணிப்பாளராக எல்.ஈ.சுசந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தநியமனம் கனிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால் வழங்கப்பட்டுள்ளது.

எல்.ஈ.சுசந்த சில்வா, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் உறுப்பினராகவும் வீதி அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத் தாபனம் என்பவற்றின் பணிப்பாளர் சபையிலும் உறுப்பினராக இருந்துள்ளார். (ச)

## ஆர்ப்பாட்டமில்லை; தீ விபத்து!



பொரளை, கோட்டை வீதியிலுள்ள இரு மாடிகளைக் கொண்ட தொலைத்தொடர்பு உபகரணங்களை திருத்தும் நிலையமொன்றில் நேற்று புதன்கிழமை அதிகாலை தீ பற்றி எரிந்தது. இரு மாடிகளைக் கொண்ட கட்டடத்தின் கீழ் தளத்திலுள்ள களஞ்சிய அறையில் ஏற்பட்ட தீ மேல்தளத்துக்கும் பரவியுள்ளது. கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## இசற் புள்ளி கணிப்பீடு

# தவறுகளை வெளியிட்ட அதிகாரிக்கும் இடமாற்றம்

கொழும்பு,ஜூன்28

இசற் புள்ளி கணிப்பீட்டில் காணப்படும் தவறுகள் தொடர்பான தகவல்களை வெளியிட்ட அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இசற் புள்ளி கணிப்பீட்டு முறையில் தவறுகள் காணப்படுவதாக பரீட்சைத் திணைக்கள விசாரணைப் பிரிவு அதிகாரியொருவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

**குற்றங்களைச் சுட்டிக் காட்டிய உத்தியோகத்தர் பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.**

குற்றங்களைச் சுட்டிக் காட்டிய உத்தியோகத்தர் பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சையின் இசற் புள்ளி கணிப்பீடு பிழையானது. புதிய பழைய பாடத் திட்டங்கள் தொடர்பில் தனித்தனியே மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டியது அவசியமானது என்று குறித்த அதிகாரி கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இந்த அறிக்கை சமர்ப்பித்த காரணத்துக்காக குறித்த அதிகாரியை கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் இடமாற்றம் செய்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.(ச)

# டெங்கு பரவும் சூழல் இருந்தால் 6 மாதச் சிறை

கொழும்பு,ஜூன்28

டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு 50,000 ரூபா அபராதம் அல்லது 6 மாத கால சிறை தண்டனை விதிக்கப்படும் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்குக் கட்டுப்படாத நபர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு மாத்திரமன்றி சுகாதாரத் தரப்பினருக்கும் இதுகுறித்து சட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளது என்று அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதிவரை செயற்படுத்தப்படவுள்ள டெங்கு வாரத்தில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்பை மக்கள் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# கப்பம் கோரிய பொலிஸார் கைது

கப்பம் கோரிய ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வர்த்தகர் ஒருவரையும் அவரது சகோதரரையும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடத்தி கப்பம் கோரியுள்ளனர். 21 லட்சம் ரூபா கப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

உண்டியல் முறையில் வெளிநாட்டு நாணயங்களை கொடுக்கல் வாங்கல் செய்து வந்த வர்த்தகரே இவ்வாறு கடத்தப்பட்டார்.

வர்த்தகரும், அவரது சகோதரரும் சென்ற வாகனத்தை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடத்திச் சென்றுள்ளனர். வாகனத்தில் இருந்த 21 லட்ச ரூபாவினை பொலிஸ் உத்தியோகத்தர்கள் எடுத்துக் கொண்டதுடன் மேலும் 50 லட்சம் ரூபா பணத்தைக் கப்பமாக வழங்குமாறு கோரியுள்ளனர்.

50 லட்சம் ரூபா வழங்க முடியாது என வர்த்தகர் தெரிவித்ததைத் தொடர்ந்து கப்பத் தொகை 10 லட்சமாகக் குறைவடைந்துள்ளது. பத்து லட்சம் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வர்த்தகரையும் அவரது சகோதரரையும் பொலிஸார் விடுதலை செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வர்த்தகரின் சகோதரர் கொழும்பு மோசடி தவிர்ப்புப் பிரிவிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதன் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் 21 லட்ச ரூபா பணத்துடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ச)



கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் வட மத்திய மா[illegible]வை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினர்.

# துமிந்தவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு அனுமதியில்லை

## புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொள்வது தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் இதுவரையில் எந்தவித ஆலோசனைகளையும் வழங்கவில்லை என்று புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.


பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது புலனாய்வுப் பிரிவினர் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முல்லேரியாப் பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா படுகாயமடைந்ததுடன், படுகொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபராகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரில் உள்ள மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார். சந்தேகநபரான துமிந்த சில்வாவிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டால் வாக்கு மூலத்தை பதிவு செய்ய முடியும் என்று புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
11
★
05
★
1945

மறைவு
09
★
07
★
2011

## அமரர் கதிரன் சின்னத்தம்பி

அன்புள்ள அப்பாவே!
கண் இமை போன்ற காவலரே!
எங்கள் இதயங்கள் அழும் ஓசை
உறங்கிய உங்கள் செவிகளுக்குக் கேட்டிடுமோ ?
தள்ளாடும் கால்களும் தடுமாறும் இதயமும்
நிழல் தர நீங்கள் இன்றி
தணலாய் தவிப்பதை யார்க்கு உரைப்போம் ?
அந்த வேளை எம் அருகில் வந்து ஆறுதல் தாரும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 09.07.2011 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் கதிரன் சின்னத்தம்பியின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று 28.06.2012 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.27, கொக்குவில் மேற்கு,
பூநாறி லேன், கொக்குவில். (19780)(6-8-9)

குடும்பத்தினர்

# முறை தவறிய மின்சாரத்துக்காக செலுத்தினர் 50 லட்சம் ரூபா நட்டஈடு

யாழ்ப்பாணம், ஜூன் 28

கொழும்பிலிருந்து வந்த மின்சார சபையின் விசேட குழு நடத்திய சோதனை நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சட்டவிரோத மின்பாவனையாளர்கள் 117 பேரும் சுமார் 50 லட்சம் ரூபாவை மின்சார சபைக்கு நட்டஈடாகச் செலுத்தவேண்டி யேற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரையான நான்கு தினங்கள் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய ஐந்து பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே பொலிஸாரின் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது மின்மானியின் சுழலும் வேகத்தைக் கட்டுப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 52 பேரும் சட்டவிரோதமான முறையில் மின் இணைப்பைப் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 65 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றங்களின் முன்னிலையில் நிறுத்தப் பட்டனர். அதன்போதே மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டஈடு எனக் கணிக்கப்பட்ட சுமார் 50 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

(10-3)

# கற்கைநெறிக்கு பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம், ஜூன்28

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞான பீடத்துக்கான புதிய மாணவர்களுக்குரிய பதிவுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ள இந்தப் பதிவுகளை ஏற்கனவே பதிவு செய்தவர்கள் மற்றும் விண்ணப்பம் பதிவு செய்யத் தவறியவர்களும் உரிய ஆவணங்களுடன் நேரில் வந்து மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(16)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


## அறை வாடகைக்கு உண்டு

பல்கலைக்கழக சூழலில் வேலை செய்யும் பெண்களுக்கு / மருத்துவபீட மாணவிகளுக்கு அறை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:071 887 0772 (19791)(5-6-9)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(19703)(6-8-9)


## யா / இணுவில் மத்திய கல்லூரி

### ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2012

காலம் : 30.06.2012 சனிக்கிழமை
இடம் : கல்லூரி சரஸ்வதி கலையரங்கு
நேரம் : பிற்பகல் 1.30 மணி

**தலைவர் :**
திரு . அ. சதானந்தன் (அதிபர்)

**முதன்மை விருந்தினர்:**
கலாநிதி க. ஸ்ரீகணேசன்
(சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கல்லூரி பழைய மாணவன்

**சிறப்பு விருந்தினர்கள்:**
உயர் திரு. ஆ. இராஜேந்திரன்
(வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)
உயர் திரு வே. பிறேமச்சந்திரன்
(பணிப்பாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு)
கல்லூரி பழைய மாணவன்

**பரிசில் வழங்கல்:**
திருமதி செல்வக்குமாரி ஸ்ரீகணேசன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இணுவில், சுன்னாகம் (19766)(6-8-9)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம்

# மரண அறிவித்தல்

## சின்னையா சங்கரப்பிள்ளை



கோட்டைக்காடு, நாக்கியம் புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட சின்னையா சங்கரப்பிள்ளை கடந்த (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மா தம்பதியரின் மூத்த மகனும், செல்லம்மா, தருமராசா, காலஞ்சென்ற இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான முருகு - தெய்வானை தம்பதியரின் மருமகனும், நல்லம்மாவின் அன்புக் கணவரும், அற்புதராசா, இராசேந்திரா சாந்தினி, யோகராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், குணசேகரம், நிரஞ்சலா, பிரபாலினி, சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனும், அபிராமி, ஸ்ரீவக்சன், கஜந்திரன், சகஸ்திரா, அருந்ததி, அபினாஸ், கௌதம், கிஷோக், செரினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.6.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோட்டைக்காடு,
சுன்னாகம். (19785) (6.9.45)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சின்னராசா



இணுவில் கிழக்கைப், பிறப்பிடமாகவும், மண்டைதீவு முதலாம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு, வன்னியசிங்கம் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட க. சின்னராசா நேற்று (27.06.2012) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரஸ்வதியின் (தங்காள்) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தில்லைவனம் தம்பதியரின் மருமகனும், தேன்மொழி, அருள்மொழி, சுதாகரன், மகிழ்மொழி, சிறிதரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவகுமார், ரவீந்திரன், சசிக்குமார், சுபாஜினி, துஷ்யந்தி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவிலில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (28.06.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் ஆலடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (19804)(6-8-9)

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்.....



அன்னை மடியில்
21
.
06
.
1925

இறைவன் அடியில்
09
.
07
.
2011

## அமரர் கந்தையா ஐயம்பிள்ளை

(செல்லையா)

(பிரபல புகையிலை வர்த்தகர், ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், நாரம்மல)

**திதி: 28.06.2012 (பூர்வபக்கம்)**

*வேரூன்றி கிளைகள் பல விட்டு*
*ஆல மரமாய் இருந்தீர் ஐயா!*
*அதில் விழுதுகளாய் எமை தாங்கி நின்றீர்*
*வேரறுந்த மரமாய் நீர் விழவே*
*நெஞ்சை விட்டகலா உம் நினைவால்*
*காயவில்லை எம் ஈரவிழிகள்*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

ஐ. [illegible]லிங்கம் (மகன்),
[illegible] மேற்கு,
வேலணை. (19803) (45.6.9)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## வீதி சேதம்

பருத்தித்துறையிலிருந்து கடற்கரை வீதி வழியாக வல்வெட்டித்துறைக்குச் செல்லும் பிரதான வீதி மோசமாகச் சேதமடைந்துள்ளது.

இந்தப் பாதையூடாகச் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் மற்றும் மினி பஸ்கள் பெரும் சிரமங்ளை எதிர்கொண்டு வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேபோல் கடற்கரை வீதியை இணைக்கும் தம்பசிட்டி அல்வாய் நாவலடி வீதியிலும் பெரியகுழிகள் ஏற்பட்டுள்ளன. நீண்ட காலமாகத் திருத்தப்படாத இந்த வீதிகளை திருத்தி கடற்கரைவீதி ஊடான போக்குவரத்தை சுலபமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-8)

# நயினாதீவு தேர், தீர்த்தத் திருவிழாவுக்கு 40 படகுகள் சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தையொட்டி தினமும் 22 படகுகள் சேவையில் ஈடுபடுவதாகவும் சப்பரம், தேர், தீர்த்தத் திருவிழாக்களில் மக்களின் வரவு அதிகமாகக் காணப்படும் என்பதால் மேலும் 18 படகுகள் சேவையில் இணைக்கப்பட்டு நாற்பது படகுகள் உற்சவ இறுதித் தினங்களில் சேவையில் ஈடுபடுமென நயினாதீவு குறிகாட்டுவான் தனியார் படகு உரிமையாளர் சங்கத் தலைவர் எஸ். தர்மலிங்கம் தெரிவித்தார்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி குடாநாட்டிலிருந்தும் வேறு பகுதிகளிலிருந்தும் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் நயினாதீவுக்கு வந்து செல்கின்றனர்.

இதனால் மக்களுக்கான படகுச் சேவையில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

**22 படகுகளிலிருந்து இறுதித் திருவிழாக் காலங்களில், மக்களின் வரவு அதிகரிக்கும் என்பதால் 40 படகுகளாக மாற்றப்படும்.**

இந்த நெருக்கடிகள் திருவிழா இறுதி நாள்களில் அதிகமாக இருக்கும். எனவே நெருக்கடிகளைக் குறைத்து மக்கள் போக்குவரத்தை விரைவுபடுத்த அந்த மூன்று தினங்களும் 40 படகுகளை சேவையில் ஈடுபடுத்தவுள்ளோம் என்றார். மக்களுக்கான அனைத்துச் சேவைகளும் உரிய முறையில் கிடைக்கக்கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறங்காவல் சபைத் தலைவர் அ. தியாகராசா தெரிவித்தார். (10-7)

# நயினை நாகபூஷணிக்கு இன்று திருமஞ்சம்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய திருமஞ்சத் திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது.

மூலமூர்த்தி அம்பாளிற்கு 108 சங்காபிஷேகமும் எழுந்தருளி அம்பாளிற்கு 1008 சங்காபிஷேகமும் நடைபெற்று கைலாச வாகனத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

இரவு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் விநாயகர், அம்பாள், சுப்பிரமணியர் சமேதர்களாக வீற்றிருந்து வீதியுலா வரும் தெய்வீகக் காட்சி இடம்பெறும்.

ஈழ நல்லூர் பாலமுருகன் நாதஸ்வரக் கலைஞர்களின் நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம்பெறும்.

# மீள்சுழற்சி மூலம் டெங்கைக் கட்டுப்படுத்தலாம்

## டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவிப்பு

மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருள்களைச் சூழலில் வீசுதல் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பதற்கு காரணம் என்பதை குடம்பி தொடர்பான ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன என்று டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ரஞ்ஜித் படுவன்துடாவ குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களில் 60 தொடக்கம் 70 வீதமான மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருள்களில் நீர் தேங்கியிருக்கின்றது. அவ்வாறான பொருள்களை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் டெங்கு பெருகுவதற்கு ஏற்ற சூழலை இல்லாதொழிக்க முடியும்.

இதேவேளை, கிராம மட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. மீள்சுழற்சி தொடர்பான குழுவுக்கு கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு அவசியமானது - என்றார் அவர். (ந)

# இதயத்தினுள் தெய்வீகத் தங்கம்

படைத்த இறைவனுக்கு இன்னுமொரு பெயர் ஹிரண்யகர்பம். ஆகவேதான் இறைவனை பங்காரு (தங்கம்) என அழைக்கின்றனர். இந்தத் தெய்வீகத் தங்கத்தை உங்கள் இதயத்தில் பதித்துக்கொண்டால் உங்களால் உங்கள் விருப்பத்துக்கேற்ப நகைகளைச் செய்து கொள்ள முடியும். உதாரணமாக சாந்தி, சத்யம், தர்மம் போன்ற நகைகளைச் செய்துகொள்ள முடியும்.

தங்கம் இன்றி எந்த ஆபரணமும் செய்துகொள்ள முடியாது என்பதைப்போல் தெய்வீகமின்றி உங்களால் அமைதியையும், சத்தியத்தையும், தர்மத்தையும் அடையமுடியாது. ஹிரண்யகர்பம் ஒவ்வொருவரிடமும் நிறைந்துள்ளது. அதனால்தான் சுவாமி ஒவ்வொருவரையும் பங்காரு என அழைக்கின்றோம்.

இந்த உண்மையைப் புரிந்துகொண்டு இறைவன் உன்னுள் நிறைந்திருக்கிறான் என்ற உறுதியான நிலைப்பாடு எழுந்தால் மட்டுமே உனது வாழ்வில் அனைத்து நலனும் சேரும். இதை மறந்துவிட்டு வெளிப்புறமாகக் காணப்படும் எந்த ஒரு பொருளுக்காகவும் செய்யப்படும் முயற்சிகள் நிச்சயம் தோல்வியைத்தான் தழுவும். ஆகையால் முதலில் இறைவன்மேல் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



## சாயி சிந்தனை

## சமய சந்திதிகளில்

புலோலி குரும்பைசிட்டி சாமுண்டிகாதேவி சமேத ஞானவைரவர் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. ஜூலை மாதம் 13 திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகப் பூசை, வழிபாடுகள் இடம்பெற்று இரவு வைரவப் பெருமான் சப்பறத்தில் வீதிஉலா வருவார். (ந-8)

* * *

நவாலி சென். பீற்றர் தேவாலயத்தில் கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றம் ஆரம்பமாகித் தொடர்ந்து காலை, மாலை ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன. பத்து நாள்கள் தொடர்ந்து இடம்பெற்றுவரும் இந்தத் திருவிழாவில் இன்று இரவு நற்கருணை ஆராதனையும் சுற்றுப் பிரகாரமும் இடம்பெறும். நாளை வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு திருநாள் திருப்பலி ஆரம்பமாகி திருச்சொரூப பவனி நடைபெறும். (ந-100)

## உணவு சிற்றுண்டி வழங்கலுக்கான கூறு விலை கோரல் 2012/13

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் நடத்தப்படும் கருத்தரங்குகள், பயிற்சிவகுப்புகள், விழாக்கள், போட்டிகள் என்பவற்றுக்கு உணவு சிற்றுண்டிவகைகளை வழங்குவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

1. நியதிகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்ளடங்கியதான விரிவான கேள்வி கோரல் விவரத்தினை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.
2. கேள்விப்பத்திரங்களை 02.07.2012 தொடக்கம் 18.07.2012 முற்பகல் 10 மணிவரை ரூபா நானூறு (400.00) மீளளிக்கமுடியாத வைப்புப் பணம் செலுத்தி நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்களை 18.07.2012 முற்பகல் 10 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலாகவோ அலுவலகத்திற்கு (கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி) அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
4. அதிகாரம் பெற்ற கேள்விச் சபை 18.07.2012 பிற்பகல் 2 மணிக்கு கூடி கேள்விப் பத்திரம் திறக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.
5. இது சுருக்கமான பத்திரிகை விளம்பரமாகும்.

க. முருகவேல்
வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.

(சி/1022) (45.6.9)

உ
சிவமயம்





## முக்கிய அறிவித்தல்
## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்

மேற்குறித்த ஆலயபரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை (29.06.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய வளாகத்தில் பெருமதிப்பிற்குரிய கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே சகல தர்மகர்த்தாக்கள், அங்கத்தவர்கள், அடியவர்கள், தொண்டர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் தயவுசெய்து தவறாது கலந்து புதிய நிர்வாகத் தெரிவுக்கும் ஆலய வளர்ச்சிக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வீ. இராமநாதன்
தலைவர்

வ. வனேஸ்வரன்
பொருளாளர்

செயலாளர்

(19688)(6.9.45)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



31.12.2011 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த

## அமரர் நவரத்தினம் கணேசமூர்த்தி


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (26.06.2012) செவ்வாய்க்கிழமை பாலியாற்றில் நடைபெற்றன.
வீட்டுக்கிருத்தியம் இன்று (28.06.2012) வியாழக்கிழமை அன்னாரின்இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருநகர்
மல்லாவி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவரியின்றிய சிறையிலிருந்து ஒரு குரல்....



எங்கோ ஒரு மூலையில்
மரண ஓலங்கள்
ஏங்கியவாறே என்னன்னை!
விடிவிடியென எழுந்து
விடியலுக்காய் விரைந்திட்ட தந்தை!
இனிதாய் நீ பேசிய காலங்களில்
என்மனதில் சலனம் ஏற்படவில்லை
என்று புலம்பியவாறே தங்கை!
காலை வரும் நாளிதழில்
தன் பெயர் தேடும் தம்பி!
இவையாவும் என் முன்னே
தெரிகின்ற புகைப்படமாயல்ல
என்கண்களில் ஓடும்
திரைப்படமாய்.....

பொலிகை குமரன்

## முடிவிலே...

போர் முடிந்து விட்டது
சமாதானம் மலர்ந்து விட்டது
எல்லாம் சுபமே என்றனர் - ஆனால்
என் போன்றவர்களுக்கு
சுற்றியுள்ள முள் வேலிகள்
தான் இன்னமும் தெரிகின்றன
விடியலின்றிய வாழ்வினை
தடுப்பு நிலையங்களிலோ
நிரந்தரமாய் பெற்றுவிட்டோம்
நாமிங்கு போரின் முடிவினிலே....

சு.லக்ஸனா
கெற்பேலி மத்தி, மிருசுவில்



## சிந்தனைக்குச் சில......

- அன்பான குணம் அலையில்லாத நதி.
- ஆசை உள்ளளவும் அலைச்சலும் உண்டு.
- குரு பக்தியால் நிறைவேறாதது எதுவுமில்லை.
- பணம் பாம்பு போல, மகிழ்ச்சி கீரி போல. இரண்டும் ஒன்று சேராது.
- பணம் சேமிப்பது ஊசியால் குழி தோண்டுவது போன்றது
- பொருளை அடகு வைப்பதை விட விற்றுவிடுவது மேல்

எஸ்.ஜிந்துஜா
கோண்டாவில்.

## தாயின் கருவறை

உன் கருவறையில்
உண்மையிலே இன்பம் தான்
உலக இன்பமெல்லாம்
உண்மையிலே பொய்மையே
உலக இன்பத்தைக் காண்பதற்கு
உன்னிலிருந்து குதித்தேன்
உணர்ந்துவிட்டேன் என் தவறை
உண்மையிலேயே
மீண்டும் கிடைக்குமா?
உன் கருவறை
பூட்டி வைத்து விடு
என்னையும்!

எஸ்.ஜிந்துஜா
கோண்டாவில்.



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக் கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-.........................
முகவரி :- ..........................
..........................................
.......................... ..........................
திகதி கையொப்பம்

## கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களா? பெண்களா?

விமர்சனப் பகுதி



வந்தனா
கரவெட்டி.

எமது இளைஞர் சமுதாயம் இன்றைய காலகட்டத்தில் பல்வேறு வகையான விரும்பத்தகாத பழக்க வழக்கங்களால் தமது எதிர்கால வாழ்க்கை, அவர்களது குடும்ப கௌரவம் என்பவற்றைச் சீரழிக் கின்றது. போதைவஸ்து பழக்கத்தால் பாதிக்கப்பட்டு வரும் ஆண்களை கைபேசியும் விட்டு வைக்க வில்லை. நாளுக்கு நாள் மிகமிக வேகமாக அதிகரித்துவரும் கைப் பேசிப் பாவனையால் அதிகமாகப் பாதிக்கப்படுவது ஆண்களே.


சிறுவர் முதல் வயது வந்த தாத்தா வரை கைப்பேசியை உபயோகிக் கின்றனர். "அளவுக்கு மிஞ்சினால் அமிர் தமும் நஞ்சு'' என்ற பழ மொழிக்கு இணங்க அவசியமான வேளைக்கு மட்டும் என்று அளவோடு பயன்பட்ட கைப்பேசிப் பாவனை இன்று பொழுதுபோக்கு சாதனமாக மாறி ஆண்களைப் பலவழிகளிலும் பாதிப்படையச் செய்கிறது.

கைப்பேசி மீள்நிரப்பு அட்டை வாங்கி வாங்கியே இளைஞர்களின் கையிருப்பு முடிந்து போகிறது. பணம் இல்லாது போவது ஒருபுற மிருக்க மீள்நிரப்பு அட்டை வாங்கு வதற்காக சொந்த வீட்டிலேயே பணம் திருடும் இளைஞர்கள் இல் லாமல் இல்லை. இவ்வாறு பணத் தைச் செலவு செய்து யாராவது ஒரு பெண்ணுடன் கதைப்பார்கள். ஆனால் அந்தப் பெண் யார் என்றுகூட அவர்க ளுக்குத் தெரியாது. ஏதேச்சையாக ஓர் எண்ணைத் தவறாக அழுத்தி அழைப்பை ஏற்படுத்தும்போது மறு புறம் கதைப்பது பெண்குரல்தான் என்றால் சொல்லவே வேண்டாம். திரும்பத் திரும்ப அழைப்பை ஏற்படுத்துவார்கள். மறுபுறத்தில் கதைக்கும் பெண்ணுக்கும் தம் செல விலேயே பணம் போடுவார்கள். பணத்தின் அருமையும் நேரத்தின் அருமையையும் இவ்வாறான ஆண் கள் புரிந்து கொள்வதில்லை. கைப் பேசி மூலம் "காதல் கோட்டை" திரைப் படப் பாணியில் காதலித்து வாழ்வை வீணடிக்கின்றனர். அதன்பின் மனம் விரக்தி அடைந்து மதுவுக்கு அடிமை யாக வேண்டியதுதான்.

இப்போதெல்லாம் அடிக்கடி நிகழும் வீதி விபத்துகளுக்கு காரண கர்த்தாவாக கைப்பேசியே காணப் படுகிறது. தலைக்கவசத்துக்குள் கைப்பேசியைச் செருகி உரையாடிய படியே வாகனத்தைச் செலுத்துகிறார் கள். ஓட்டுநரின் கவனம் உரையாட லில் இருக்கும்போதே விபத்துக்கள் ஏற்படுகின்றன். முக்கியமாகப் பேச வேண்டி இருப்பின் வாகனத்தை நிறுத்திவிட்டு பேச வேண்டியது தானே? இதில் மிகவும் வேதனைக் குரிய விடயம் என்னவெனில் ஒழுங்கு முறையாக வீதியில் வரும் அப்பா விகளின் உயிருக்கும் சேர்த்து உலை வைத்துவிடுகிறார்கள் என்பதுதான். வேகம் ஒரு ஒருபுறம், கைப்பேசி உரை யாடல் ஒருபுறம் இளைஞர்களுக்கு இது போதுமே, இதனால் ஏற்படும் விளைவு கள் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்.

இன்னொரு பக்கம் பார்த்தால் பல ஆண்கள் ஆபாசப் படங்களையும், பாடல்களையும் கைப்பேசியில் பதிவு செய்து அதனை ரசிக்கின்ற னர். வீதிகளில், ஒழுங்கைகளில் நின்று அவற்றைப் பார்க்கின்றனர். ஆனாலும் எப்படியோ பொலிஸாரி டம் அகப்பட்டு நீதிமன்றம்வரை செல்கின்றனர். நீதிவானிடம் நன் றாக வாங்கிக் கட்டிக் கொண்டு அப ராதமும் செலுத்திவிட்டு வருகிறார் கள். இது அவர்களுக்கு மட்டும் தலைகுனிவு அல்ல அவர்களின் குடும்பத்துக்கும் சேர்த்துத் தலை குனிவுதான்.

கைபேசி மூலம் தொடர்பினை ஏற்படுத்தி வந்த ஒரு பெண்ணுக்காக கொலை கூட செய்திருக்கின்றனர் என்ற செய்தியையும் நாம் மறந்து விடக்கூடாது. இதனால் இப்போது சிறை யில் வாடுகின்றனர். அவர்களது வாழ் வைப் பாதிக்க வைத்தது இந்தக் கைப்பேசி தானே? கைப்பேசிகளை அவசியமான தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தினால் அது வரம். இல்லா விட்டால் அதுவே உங்களுக்கும் உங்கள் எதிர்கால வாழ்வுக்கும் சாபமாகிவிடும்.




**அடிக்கடி நிகழும் வீதி விபத்துகளுக்கு காரண கர்த்தாவாக கைப்பேசியே காணப் படுகிறது.**

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

கைத்தொலைபேசி பாவனையால் அதிகம் பாதிகப்படுவது ஆண்களா? பெண்களா?



**உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்ரகமுவ தேர்தலில் தமிழ்க் கட்சிகள் கூட்டு

## தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த

கொழும்பு, ஜூன் 28

சப்ரகமுவ மாகாணசபைத் தேர்தலின்போது இரத்தினபுரி, கேகாலை ஆகிய இரண்டு மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி ஆகிய மூன்று கட்சிகளுக்கும் இடையில் கூட்டமைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இந்த முயற்சியில் கண்டியைத் தளமாகக் கொண்டு செயற்படும் சமூக அபிவிருத்தி நிறுவகம் ஈடுபட்டுள்ளது.

மலையகக் கூட்டமைப்பு தொடர்பான முதற்கட்டப் பேச்சு கடந்தவாரம் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்றுள்ளது. இந்தப் பேச்சில் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், தொழிலாளர் தேசிய முன்னணி தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம், மலையக மக்கள் முன்னணி அரசியல்துறை தலைவர் நாடாளுமன்ற் உறுப்பினர் ராதாகிருஷ்ணன் ஆகியோருடன் தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் திலகராஜ், ஜனநாயக மக்கள் முன்னணியின் மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் பெ.முத்துலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் இருக்கின்ற குறைந்த பட்ச தமிழ் வாக்காளர் எண்ணிக்கை காரணமாக பெரும்பான்மை தேசிய கட்சிகளின் வேட்பாளர்களாக போட்டியிட்டு தமிழ் வேட்பாளர்கள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. பெரும்பான்மை தேசிய கட்சிகளில் போட்டியிடுவதன் மூலம், அந்தக் கட்சிகளுக்கு வாக்குகளைப் பெற்று தரலாமே தவிர, தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக்காது. ஆனால் சிறுபான்மை கட்சிகள், தமக்கு இடையிலான அரசியல் முரண்பாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பிரதிநிதித்துவம் பெறப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கில் கூட்டாக போட்டியிட்டால், குறைந்தபட்ச வாக்குகள் மூலமாகவே வெற்றி பெறும் சாத்தியம், இன்றைய தேர்தல் முறையின்கீழ் அநேகமாக இருக்கின்றது. இந்தப் படிப்பினைகளை கடந்த கால சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பெற்றுத்தந்துள்ளன.

தமிழ் பேசும் வடக்கு-கிழக்கு, முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவங்களுக்கு இணையாக மலையக மக்களின் பிரதிநிதித்துவங்களையும் இந்நாட்டில் காப்பாற்றிக் கொள்வதற்காக மலையகத் தமிழ்க் கட்சிகளை, அரசியல் நிலைப்பாடுகளுக்கு அப்பால் ஒரு கூட்டமைப்பாகக் கொண்டு வரும் முகமாகவே இந்த முயற்சி நடைபெறுகிறது.

ஏனைய மலையக கட்சிகளையும், சமூக அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு, பரந்துபட்ட ஐக்கியத்தை ஏற்படுத்தி மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்துவதே இந்த முயற்சியின் ஒரே நோக்கம் எனவும், மலையகம் தொடர்பில் அக்கறை உள்ள இடதுசாரிகளை இணைத்துக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும், இது தொடர்பில் அக்கறை உள்ளவர்கள் கண்டி, போதியங்கள மாவத்தை, 37 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள சமூக அபிவிருத்தி நிறுவகத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் பெ.முத்துலிங்கம் தெரிவித்தார்.



STUDENT VISA
UK, AUSTRALIA, CANADA & INDIA
Sponsorship (சிறந்த வங்கி) செய்து தரப்படும்.
IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
September 2012 Intakes
அதிக விசாக்களைப் பெற்று 100% நம்பிக்கையைப் பெற்றுக் கொண்ட
ஒரே உயர் கல்வி நிறுவனம்
London Metropolitan Campus
No.01, Deanston Building, Deanston Place, Colombo-03
விபரங்களுக்கு - 072 1575991


## மரண அறிவித்தல்



### திருமதி சிவபாக்கியம் கந்தசாமி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கந்தசாமி நேற்று (27.06.2012) சிவபதம் அடைந்தார்.

அன்னார் தலையாழி- கொக்குவிலை சேர்ந்த காலஞ்சென்ற சபாறட்ணம் கந்தசாமியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சபாறட்ணம் -அன்னம்மா தம்பதியரின் மருமகளும் இராசமலர், கணேசபிள்ளை, காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் சந்திரவதனி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் றஞ்சினி, ரோகினி, பத்மினி, ஸ்ரீறஞ்சன் (றஞ்சன்) வசந்தினி, சாந்தி, காலஞ்சென்ற யோகேஸ்வரி, யோகறாணி, மகாதேவா (தேவா), சிவகணேசா (சிவா U.K), ஆகியோரின் பாசமிகு தாயும் யோகேஸ்வரன், தர்மலிங்கம் (ஆங்கில ஆசிரியர்), இரத்தினமூர்த்தி (Swiss), றஞ்சினிதேவி, பிரதீபன், மாலதி, றஜனி (U.K), ஆகியோரின் பாசமிகு மாமியும் துஷியேந்திரன் (கண்ணன்), சைலஜா, தர்சிகா, றொசாந் (U.K), சுஜிந்தன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), பிரியதர்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), பிரியந்தன் (யாழ் இந்துக்கல்லூரி), கீதப்பிரியன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), அகிஷன் (U.K), ஆகியோரின் அன்புப் பாட்டியும் டென்சிகா, விதுஷிகா ஆகியோரின் பூட்டியும் கொக்குவிலை சேர்ந்த நாகலிங்கத்தின் (கனடா) அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2012) வியாழக்கிழமை ஸ்ரேசன் றோட் கோண்டாவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
ஸ்ரீ றஞ்சன் (றஞ்சன்) மகன்
மகாதேவா (தேவா) மகன்
குடும்பத்தினர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு.(19828) (15-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 02 • 06 • 1940



மறைவு 29 • 05 • 2012

### திருமதி விக்னேஸ்வரி பஞ்சலிங்கம்

29.05.2012 அன்று இறைபதமடைந்த திருமதி விக்னேஸ்வரி பஞ்சலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து எங்கள் வேதனையில் பங்குபற்றி அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மலர்மாலை அணிவித்து கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமாக இரங்கல் செய்தி தெரிவித்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.06.2012) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன் னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில் (19822)(03) குடும்பத்தினர்


சிறப்புத்தன்மையை புரிந்துக்கொண்ட வாடிக்கையாளர்களான உங்களுக்காகவே

பஜாஜ்
RE 205
முச்சக்கர வண்டி

ரூ.450,100/-* ம் விசேட விலைக்கு!

முந்துங்கள்! இவ் விசேட விலை குறிப்பிட்ட கால வரையறைக்கு மட்டுமே.



* 2012 ஜுன் 22 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்
* இவ் விலைக்கு சகல வரிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு முன்னறிவித்தல்களின்றி எவ் வேளையிலும் மாற்றமடையலாம்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் (1979, பாவக்கிரகம் 85, அனுசநட்சத்திரம்) சொந்தத் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொ.பே: 0750970638

(1-6-9)

## கடை வாடகைக்கு

இல. 334, நாவலர் வீதியில் அமைந்துள்ள சகல தளபாட வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 075 078 4912

(19810)(5-6-9)

## Study In London University

- இதோ! எதிர்வரும் 3ஆம், 4ஆம் திகதிகளில் உங்களை நேரில் சந்தித்து - பல்கலைக்கழக அனுமதியை வழங்க முன்வருகின்றனர் "ULSTAR UNIVERSITY" குழுவினர்.
- கடந்த மாதத்தில் இதே பல்கலைக் கழகத்திற்கு தென்மராட்சியைச் சேர்ந்த 'பா. ரஜீவன்' மேற் படிப்பிற்காக சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.
- IELTS அவசியமில்லை.
- தகைமை- A/L இல் 2C Pass போதுமானது.
- University graduate மாணவர்களுக்கு அதிக முன்னுரிமை வழங்குகின்றனர்.

'நழுவ விடாதீர்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை'

"WORLD EDUCATION COSULTANCY & CHEC" (WEC)

No.: 26,Jeyawardana Ave, Degiwala, Colombo.
Sangaththanai,Chavakachcheri.
contact: 077 947 1848

(19767) (5-6-9)

## பெயர் மாற்றம்

காக்கைதீவு ஆனைக்கோட்டையைச் சேர்ந்த **கதிரமலை யோகநாதன்** ஆகிய நான் இன்று 28.06.2012 இல் இருந்து **கதிரமலை யோகன்** என பெயர் மாற்றம் செய்கின்றேன். அத்தோடு இனி சகல ஆவணங்களிலும் **யோகன்** என கையொப்பமிடுவேன் என உறுதியளிக்கிறேன்.

க.யோகன்.

(19805)(5-6-9)

## உடன் வாடகைக்கு வீடு தேவை

குளியலறை இணைந்த சிறிய வீடு வாடகைக்கு தேவை.
அரியாலை, நல்லூரடி, கல்வியங்காடு, கொழும்புத்துறை, சுண்டுக்குளி ஆகிய இடங்களில் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777033039, 0770107611

(19812)(5-6-9)

## உடனடி வேலைவாய்ப்பு

நாலி நகரத்தில் அமைந்துள்ள பிரபல்யமான சிவன் கோயிலுக்கு (மீனாட்சி சுந்தரேஸ்வரர்) அனுபவம்/ பொருத்தமானவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். 1. கட்டட மேற்பார்வையாளர் (திருப்பணி வேலைகள்)
2. கணக்காளர்
3. மாலை கட்டுபவர் (பண்டாரம்)
4 சிற்றூழியர் (பல வேலை)

தொடர்பு: 077 606 7559

(சி/900)(5-6-9)

# கையை வெட்டிவிட்டு பெண்ணின் கைப்பையை அபகரித்த திருடன்

பெண்ணின் கையை வெட்டிவிட்டு கைப்பையை அபகரித்துச் சென்றான் திருடன்.


இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலடி ஒழுங்கை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் கொற்றாவத்தையைச் சேர்ந்த இன்பரசு ஜன்சிகா (வயது-17) என்ற பெண்ணே கையில் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவர் வீட்டிலிருந்து பஸ்ஸுக்காக வந்து கொண்டிருந்த வேளை சைக்கிளில் வந்த திருடன் இவரது கையை வெட்டிவிட்டு கைப்பையைத் திருடிச் சென்றுள்ளான். பையில் 2 ஆயிரம் ரூபா பணமும் ஆவணங்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. நெல்லியடிப் பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர். (16-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1947 ★ 02 ★ 18



மறைவு 2011 ★ 07 ★ 10

அமரர் **கந்தையா செல்வராசா**

திதி : 28.06.2012 வியாழன்

நேசத்தில் நில்லாத நதியாக நீண்டோடி
பாசத்தின் பக்குவத்தில் பரந்துயர் குன்றாகி
வீசுகின்ற தென்றலென வள்ளண்மை வரப்பெற்று – ஊர்
பேசும் வரலாறாய்ப் பெற்றதோர் பெரும் பேறே!

எல்லாமும் கண்டோம் நின் எஃகுமனத்தால்
சொல்லால் முடிவிலா சோதிப்புகழ் கொண்டாய் ?
வெல்லற்கரிய விதி வழியில் பிரிந்தாலும் வரும் நாளில்
வல் நின் தடங்கொண்டு வாழ்ந்திடுவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓராண்டு திவச நிகழ்வுகள் இன்று [28.06.2012] வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அச்சுவேலி இல்லத்தில் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்

[ இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி

(சி/1034)(6-8-14)

பிள்ளைகள்,
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 ★ 03 ★ 1949



உதிர்வு 09 ★ 07 ★ 2011

அமரர் **ஆறுமுகம் ஆறுமுகராசா**

திதி : பூர்வபக்க நவமி

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள்
மட்டும் எங்கள் மனதை விட்டகலவில்லை.

கோயிற் குடியிருப்பு,
கந்தையா வீதி, சாவகச்சேரி

(18103)(6-8-9)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### புத்திசிகாமணி இராமநாதன்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆஸ்திரேலியாவில் Strathfield ஐ வசிப்பிடமாகக் கொண்டவரும், Spiceland முன்னாள் உரிமையாளருமான புத்திசிகாமணி இராமநாதன் கடந்த (25.06.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புத்திசிகாமணி - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், ரத்னாவின் அன்புக் கணவரும், கஜன், சாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதிஷின் அன்பு மாமனும், இஷான், யுவன் ஆகியோரின் அன்பு பாட்டனும், பத்மநாதன், சிதம்பரநாதன், செல்வராசா, தவமணி ஆகியோரின் சகோதரனும், சித்திரா நடராஜா, மகேசன், கணேசன், ரஞ்சன் கந்தவனம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29.06.2012) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியிலிருந்து 9 மணிவரை Strathfield Town Hall, 65 Homebush Road, Strathfield என்ற இடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிக்கிரியைகளும், தகனக்கிரியையும் Macquarie park crematorium, corner of Delhi and plassey Roads, North Ryde என்ற இடத்தில் நாளை மறுதினம் (30.06.2012) சனிக்கிழமை முற்பகல் 10. 30 மணியிலிருந்து 2 மணிவரை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Email. rshants @ yahoo . com

தகவல்:
C.K. விசாகரத்தினம்.

(19852) (45.6.9)

## பணியாளர் தேவை

★ பராமரிப்பாளர்
★ எழுது வினைஞர்/ கணக்காளர்

விரும்புவோர் பின்வரும் தொ.பே.இலக்கத்துடனோ 071-4977019 அல்லது நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

(சி/1033)(5-6-9)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில் உள்ள ஜெற் மோட்டோர்ஸ் அருகில் உள்ள ஒழுங்கையில் 2½ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 075 0406 823

(c/1013)(6-3)

## நாஹா மருத்துவ நிலையம்

எலும்புகளில் வலியை ஏற்படுத்தும் வாதம், அஸ்மா, தீராத புண்கள், குழந்தையில்லா கெற்ப நோய்க்கான சாதனை புரியும் மருந்தியல்.

கிழமை நாள் - பி.ப. 3.00 - இரவு 7.00
சனி, ஞாயிறு - காலை 8.00 - பி.ப. 2.00
தொ.பே.: 077 321 2740
வங்கி முன் லேன், சாந்தாவத்தை
[illegible] (ஜெயபதி [illegible]),
மானிப்பாய்.

(19817)(5-6-9)

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி ஜெர்மன் (ராணி) ஞான இராசேந்திரம்



இளவாலையைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும்கொண்ட மேரி ஜெர்மன் (ராணி) ஞான இராசேந்திரம் நேற்று முன்தினம் (26.06.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் ஞான இராசேந்திரம் (முன்னாள் உரிமையாளர் - ராணி ரெக்ஸ், பண்டத்தரிப்பு) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்புப் புத்திரியும், காலஞ்சென்ற லூர்துமேரி (பண்டத்தரிப்பு) மற்றும் ஜோசேப்பின் (சொர்ணம் - லண்டன்), காலஞ்சென்ற அலோசியஸ் (செல்லக்கோண் - அச்சு வேலி) மற்றும் றோசலின் (லில்லி - பெரியவிளான்), இம்மானு வேல் (நவம்- கனடா), ஆன்கிறேஸ் (மல்லிகா - அச்சுவேலி), செபஸ்ரியன் (அன்ரன் - இளவாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ், பொன்ராசா மற்றும் மாகிறேற், மரியநாயகம் (சுதா பேக்கவுஸ் - பெரியவிளான்), சுகுணா, சின்னராசா, நளினி ஆகியோரின் மைத்துனியும், பிறேம்குமார் (பிரான்ஸ்), அனற்வேமின் றஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ஜீவானந்தன் (கனடா) அவர்களின் அன்பு மாமியும், மிருதுலா, மிதுஷான் (கனடா) ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.06.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3.30 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் இறுதி யாத்திரைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித அன்னாள் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடுத்தலான,
இளவாலை.

தகவல்:
இராசேந்திரம் (கணவர்)
(முன்னாள் உரிமையாளர்- ராணி ரெக்ஸ் பண்டத்தரிப்பு)

(19811) (45.6.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி, உரிமை வேண்டி மீண்டும் கனடாவில் கறுப்பு ஜூலை நிகழ்வு

## தமிழ் உறவுகளுக்கு கனேடிய தமிழர் தேசிய அவை அழைப்பு

கனேடியத் தமிழர் தேசிய அவையின் ஏற்பாட்டில் உலகளாவிய ரீதியில் மீண்டும் நீதிவேண்டி, உரிமைவேண்டி தமிழர் நடத்தும் மாபெரும் கறுப்பு யூலை நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கனடா அல்பெர்ட் கம்பெல் சதுக்க முன்றலில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைத்துத் தமிழ் உறவு களையும் கலந்து கொள்ளுமாறு கனேடியத் தமிழர் தேசிய அவை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து கனேடியத் தமிழர் தேசிய அவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

29 ஆண்டுகளுக்கு முன்னர் ஜூலையில் ஆரம்பித்த தமிழினப்படுகொலை இன்று 28 ஆண்டுகள் கடந்தும் தொடர்கின்றது. ஈழத்தமிழினம் தொடர்ந்தும் இனப்படு கொலைக்குள்ளாகி வருகின்றது. தனது பொறுப்பில் இருந்து தவறி நிற்கும் சர்வதேசத்தை அதன் மனித நேயக் கடமைகளை ஆற்ற வைக்க நாம் தொடர்ந்தும் கடுமையாக உழைக்க வேண்டும். இது நாம் துவண்டு கிடக்கும் நேரமல்ல, விவேகத்துடன் விரைந்து செயற்படும் காலம்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து காலங்காலமாக ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் நிலத்தை அபகரிப்பதில் மிகவும் மும்முரம் காட்டி வந்தனர். அதன் உச்சக்கட்டமாக இப்போது நடக்கும் நில அபகரிப்பைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஏற்படுத்தியவர்கள் தமது இன்னொரு இலக்காக தமிழர் மண்ணைப் பறிக்கும் முயற்சியில் இறங்கி இருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் இப்போது நிலம் அபகரிக்கும் முயற்சியின் தீவிரம் மிகவும் அச்சத்தை தருவதாக அமைகின்றது.

**இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து காலங்காலமாக ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் நிலத்தை அபகரிப்பதில் மிகவும் மும்முரம் காட்டி வந்தனர். அதன் உச்சக்கட்டமாக இப்போது நடக்கும் நில அபகரிப்பைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.**

இந்த நில அபகரிப்பு முயற்சியை முறியடிப்பதானது புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு முக்கிய கடமையாக அமைகின்றது. நாம் தொடர்ந்தும் அமைதியாக இருந்தோம் என்றால் பாலஸ்தீனம் போல் தமிழீழ மக்களுக்கு ஒரு நாடு வேண்டும் என்ற கருத்து உலகத்தில் உருவாகும் போது, தமிழர்களுக்கு நிலம் இருக்குமோ எமக்குத் தெரியாது.

கடந்தவாரம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெல்லிப்பழையில் ஆரம்பித்த போராட்டத்தில் இலங்கை அரசு தமிழர்கள் மேல் வன்முறையை அவிழ்த்து விட்டது, ஆனால் தமிழர்கள் எதற்கும் பயந்தவர்கள் அல்ல என்று ஸ்ரீதரன் கூறிய கருத்துக்கு அமைய, தமிழீழத்தில் போராடும் மக்களுக்கு பலம் கொடுப்பது போல் புலம்பெயர் தமிழர்கள் நாம் போராடுவோம்.

'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்று தமிழீழ மக்களுடன் சேர்ந்து கனடாவிலும் நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு கனேடிய தமிழ் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்-என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## தூக்குத் தண்டனை வழக்கின் இறுதி விசாரணை ஜூலை 10இல்

வேலூர், ஜூன்28

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையாளிகளின் தூக்குத்தண்டனை குறித்த இறுதி விசாரணை எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களது தூக்குத்தண்டனையை ஆயுளாக குறைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்தநிலையில், வேலூர் மத்திய சிறையில் உள்ள முருகன் உள்ளிட்ட 3 பேரையும் வக்கீல் சந்திரசேகர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

பின்னர், அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மூவரின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்க உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கின் இறுதி விசாரணை எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறுகிறது.

இந்த வழக்கின் நிலைவரம் மற்றும் வழக்கை கொண்டு செல்லும் விதம் குறித்து மூவருடன் பேசினேன். இந்த வழக்கில் எங்களுக்குச் சாதகமான முடிவு கிடைக்கும். முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனு ஜனாதிபதி மாளிகை செயலாளரிடம் உள்ளது. நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்க்காமல் மூவரின் கருணை மனுக்கள் மீது ஜனாதிபதி முடிவு எடுக்கலாம்-என்றார். (வ)

## கருக்கலைப்பு சட்டத்திருத்தத்துக்கு கத்தோலிக்க சபையினர் எதிர்ப்பு

இலங்கையில் கருக்கலைப்பு தொடர்பான சட்டத்திருத்தத்துக்கு கத்தோலிக்க சபையினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என்று அரசு தெரிவித்துள்ளது. இலங்கையில் சிறுமிகளும் பெண்களுமாக நாள் ஒன்றுக்கு 1000 என்ற எண்ணிக்கையில் வன்புணர்ச்சிக்கு உள்ளாகின்றனர். இதனால் அவர்கள் சமூகத்தினால் ஒதுக்கப்படும் நிலைக்கு உள்ளாகின்றனர்.

**இலங்கையில் சிறுமிகளும் பெண்களுமாக நாள் ஒன்றுக்கு 1000 என்ற எண்ணிக்கையில் வன்புணர்ச்சிக்கு உள்ளாகின்றனர்.**

சட்ட இறுக்கத்தினால், கருக்கலைப்பு செய்து கொள்ளாமை காரணமாக அவர்கள் பெறும் குழந்தைகளின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இலங்கையில் தாயின் உயிர் மற்றும் குழந்தையின் பிறப்புச் சிக்கல் என்ற காரணங்களின் அடிப்படையில் கருக்கலைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக மட்டும் கருக்கலைப்பை ஏற்றுக்கொள்வது என்ற சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. இதற்கே கத்தோலிக்க சமூகத்தினர் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

எனினும், இலங்கையின் சனத்தொகையில் இந்த எதிர்ப்பை காட்டும் கத்தோலிக்கர்கள் 7 வீத பங்களிப்பையே கொண்டுள்ளார்கள் என்று அரசு குறிப்பிட்டுள்ளது.

சமூக ஒழுக்கம் மற்றும் பெண்கள், சிறுமிகள் சமூகத்தினால் ஒதுக்கப்படும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த இந்தச் சட்ட மூலம் அவசியமாகிறது என்றும் இந்தச் சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் சிறுவர் அபிவிருத்தித் துறை அமைச்சின் செயலாளர் சுமித்ரா ரகுபாத தெரிவித்துள்ளார்.

## பிஜி தீவில் இலங்கையர் கைது

பிஜி தீவுகளுக்கு போலி ஆவணங்களுடன் சென்ற நிலையில் கைது செய்யப்பட்ட இலங்கையர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

செந்தன் தியாகராஜா என்ற நபர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நபர் நேற்று நாடி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் 9 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## மாலைதீவு பிரஜை கொலை தொடர்பில் வெளிநாட்டு சந்தேகநபர்களுக்கு பிணை

மாலைத்தீவு பிரஜையின் கொலை தொடர்பில் சந்தேகிக்கப்பட்டு நாடு திரும்பத் தடை விதிக்கப்பட் டிருந்த 6 மாலைதீவு பிரஜைகள் மற்றும் ஒரு மடகாஸ்கார் பெண் ஆகியோருக்கான தடையை நீதிமன்றம் நீக்கியுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலின் 18ஆவது மாடியில் இருந்து விழுந்து மாலைதீவைச் சேர்ந்த 37 வயதுடைய மொஹ மட் மித்சா உயிரிழந்தார். இதனையடுத்து 6 மாலை தீவு பிரஜைகள் மற்றும் ஒரு மடகாஸ்கார் பெண் ஆகியோர் மீது சந்தேகம் கொண்டு அவர்களது கடவுச்சீட்டைப் பறித்த கொம்பனித்தெரு பொலிஸார் அவர்களுக்கு நாட்டை விட்டுச் செல்லதடை விதித்திருந்தனர்.

குறித்த ஏழு பேரும் நேற்று முன்தினம் இரவு 1.5 மில்லியன் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டதோடு அடுத்த வழக்கு விசாரணைக்கு பிரசன்னமாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஏழு பேர் மீதான பொறுப்பை இலங்கையில் வசிக்கும் ஒருவர் ஏற்றுக் கொண் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தக் கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட இரு இலங்கை பெண்கள் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சஜீவ மெதவத்த தெரிவித்துள்ளார். (வ)

## நயினை நாகபூசணி ஆலயத்தில் ஆயுள்வேத வைத்திய முகாம்

வேலணை பிரதேச சபையும்- மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஆயுள்வேத மருத்துவ முகாம் ஒன்றை நயினாதீவில் நடத்தவுள்ளது.

நயினை நாகபூசணி அம்மனின் இறுதித் திருவிழா காலங்களான எதிர்வரும் முதலாம் 2ஆம் 3ஆம் திகதிகளில் மேற்படி விசேட இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. வேலணை பிரதேச சபைத்தலைவர் சி.சிவராசா இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

மேற்படி விடயமாக தலைவர் சி.சிவராசா மேலும் தெரிவித்ததாவது:-

இறுதி மூன்று தினங்களிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நயினை அம்பாளைத் தரிசிக்க நயினாதீவுக்கு வருவர் எனவே அத்தினங்களில் எமது மருத்துவர்களான டாக்டர் திருமதி எட்னா, டாக்டர் வி.சிவபாலன், டாக்டர் கே.நடேசராசன் ஆகியோர் முழு நேர சேவையாற்றவுள் ளனர்.

**நயினை நாகபூசணி அம்மனின் இறுதித் திருவிழா காலங்களான எதிர்வரும் முதலாம் 2ஆம் 3ஆம் திகதிகளில் மேற்படி விசேட இலவச மருத்துவ முகாம்**

வேலணை பிரதேச சபையின் செயலர் செ.ரமேஷ், உப அலுவலகப் பொறுப்பதிகாரி ந.மோகனரூபன் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வர்.

மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் ஒரு தொகுதி மருந்துகளை இலவசமாக வழங்கவுள்ளார்- என்றார். (வ-56)

## இலங்கை ஊடகவியலாளர்களைச் சந்திக்கும் மௌனிக்கப்பட்ட குரல்கள் ஆவணப்படம்

### நோர்வேயில் வெளியீடு

இலங்கை ஊடகவியலாளர்கள் பற்றிய 'மௌனிக்கப்பட்ட குரல்கள்' என்னும் ஆவணப்படம் இந்த வாரத்தின் முற்பகுதியில் 'மனித உரிமை கண்காணிப்பகத்தின் திரைப்பட விழா 2012' இல் திரையிடப்பட்டது.

நோர்வே இயக்குநர் ஒருவரால் நெறிப்படுத்தப்பட்ட இந்தப் படம் மறைந்த லசந்த விக்ரமதுங்கவின் மனைவி சொனாலி சமரசிங்க மற்றும் தப்பியோடி வெளிநாட்டில் வாழ்கின்ற பல ஊடகவியலாளர்களை மையப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படும் சுதந்திர ஊடகங்களுக்குப் பாதகமான சூழல் மற்றும் மாற்றுக் கருத்துக்களை ஒடுக்கும் இலங்கை அரசு மற்றும் விடுதலை புலிகள் ஆகியவற்றின் செயற்பாடு [illegible] இந்த ஆவணப்படம் [illegible] என்று கூறப்படுகிறது.

நாட்டைவிட்டு வெளியேறுமாறு பயமுறுத்தப்பட்ட சொனாலி சமரசிங்க அதற்கு சிறிது காலம் முன்னரே தனது கணவனைப் பறிகொடுத்திருந்தார். அவர் இப்போது தனது நீதிக்கான போராட்டத்தை நியூயோர்க்கிலிருந்து நடத்தி வருகின்றார்.

சொனாலிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளதாக திரைப்பட விழா வலையமைப்பு தெரிவித்துள்ளது.

அரசு அல்லது விடுதலைப் புலிகளினால் வேண்டுமென்று கொல்லப்பட்ட 10 பேர் அடங்கலாக, 1992 இலிருந்து சுமார் 25 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதை [illegible] கொண்டு [illegible] இலங்கையை அதிகூடிய ஆபத்து மிகுந்த நாடுகளின் பட்டியலில் சேர்த்துள்ளது.

வெளிநாட்டில் வாழும் இலங்கை ஊடகவியலாளர்களின் அனுபவத்தின் அடிப்படையில் உள்நாட்டு யுத்தத்தை இயக்குநர் பீற் அரன்ஸ்ரட் படமாக்கியுள்ளார் என கருதப்படுகிறது.

சிவில் சமூகம் மௌனம் காக்குமளவுக்கு பயமுறுத்தப்பட்டுள்ளது. ஊடகங்கள் சுய தணிக்கையை மேற்கொள்கின்றன.

இந்த நிலையில் இந்தப் படத்தில் காட்டப்படும் ஊடகவியலாளர்கள் போன்ற ஒரு சிலரே உண்மைக்கான போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

இந்த ஆவணப்படம் ஏற்கெனவே பல நாடுகளில் திரையிடப் பட்டுள்ளது.

## மக்கள் வங்கியின் 51 ஆவது நிறைவு

தென்மராட்சி,ஜூன் 28

மக்கள் வங்கியின் 51 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை வங்கி மண்டபத்தில் நடைபெறும். அன்றைய தினம் வனிதா வாசனா பரிசூதியச் சீட்டிழுப்பும், வங்கியின் ஜெயஸ்ரீ மாதாந்தச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற பின்வருவோருக்கான பரிசில்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளன.

எஸ்.குணபாலசிங்கம் உசன், எஸ்.பாலசுப்பிரமணியம்- படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், கே.நாகம்மா- மட்டுவில் தெற்கு, ஆர்.மீரா- சாவகச்சேரி, எம்.றசூல்- சாவகச்சேரி, கே.ஜெயவசந்தா - மட்டுவில் வடக்கு, வை.மல்லிகா தேவி-பாலாவி வடக்கு, என்.மனோகரன்- மீசாலை வடக்கு, வி.செந்தில்- கல்வயல் ஆகியோர் சீட்டிழுப்பில் பரிசில்களைப் பெற்றுள்ளனர். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டத்துக்கு தயார்







மாவட்ட ரீதியில் சாதித்து மாகாண மட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிய வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய வீராங்கனைகள் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய வீராங்கனைகளுடன் பயிற்சி ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

## மாகாண மகளிர் கராத்தே இந்து மகளிர் கல்லூரியில்

வலி.வடக்கு, ஜூன் 28

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாண மட்டப் போட்டிகளில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்பட்ட மகளிர் கராத்தே போட்டிகள் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உள்ளக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் 15, 17, 19 ஆகிய பிரிவுகளுக்கிடையே நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

15 வயதுப் பிரிவு

கைதடி நவீல்ட் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், கைதடி நவீல்ட் பாடசாலை, உரும்பிராய் இந்துக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு

கைதடி நவீல்ட் பாடசாலை, உரும்பிராய் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம்.(ங-86)

## கரப்பந்தில் யாழ். மாவட்டம் மீண்டும் சம்பியன்



வலி.வடக்கு, ஜூன் 28

மாகாண கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியின் அபார ஆட்டத்துக்கு முன்னால் ஆரம்பத்தில் தடுமாறிய போதும், பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட யாழ். மாவட்ட அணி பலத்த போராட்டத்தின் பின் மீண்டும் வட மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதிக் கொண்டன. போட்டியில் இரு அணிகளும் சம பலம் பொருந்திய அணிகள் என்பதை நிரூபிக்கும் வகையில் இறுதி வரை வெற்றிக்காகப் போராடின. இதனால் ஆட்டம் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது.

முதல்சுற்றில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றவண்ணம் இருந்தன. எனினும் இறுதி நேரத்தில் மன்னார் மாவட்டத்தின் கையே ஓங்கியது. இதனால் முதல்சுற்றில் மன்னார் அணி 25: 18 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் சுற்றை யாழ். மாவட்ட அணி இலகுவாக 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்ற போதிலும் மூன்றாம் சுற்றை மீண்டும் மன்னார் மாவட்ட அணி பெரும் எதிர்ப்பின் மத்தியில் 27 : 25 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

இந்த நிலையில் நான்காம் சுற்றை வெற்றி பெற்றால் சம்பியன் என்ற கனவுடன் களமிறங்கிய மன்னார் மாவட்ட அணிக்கு பெரும் சவாலாக யாழ். மாவட்ட அணி விளங்கியது. அந்தச் சுற்றில் 25: 19 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்று மன்னார் அணியின் கனவைத் தவிடு பொடியாக்கியது யாழ்.அணி.

இரு அணிகளும் தலா இரண்டு சுற்றுக்களில் வெற்றி பெற்றதால் ஐந்தாவது சுற்று இரு அணிகளுக்கும் முக்கியமானதாக அமைந்தது. இரு அணிகளும் வாழ்வா, சாவா என்ற நிலையில் விளையாடின.

இதனால் போட்டி மைதானத்தில் இருந்த ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமைந்தது . ஆனாலும் வெற்றியை தமதாக்கியே தீர வேண்டும் என்ற முனைப்புடன் இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்றன. இதனால்15 புள்ளிகளுடன் நிறைவு பெற வேண்டிய போட்டி 21 : 19 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ். மாவட்ட அணி பலத்த போராட்டத்தின் பின்னர் முன்னிலை பெற்ற பின்னரே முடிவுக்கு வந்தது.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் யாழ். மாவட்ட அணி 3: 2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ங-86)

# மாகாண மகளிர் கிரிக்கெட் முல்லை அணி சாதித்தது



வலி.வடக்கு, ஜூன் 28

வேகம் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணியின் முன்னால் மன்னார் மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணி எதிர்ப்பின்றி சரணாகதி அடைந்தமையால் முல்லைத்தீவு மாவட்ட அணி மாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாகாண மட்டத்திலான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. பெண்களுக்கான 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 6 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் முல்லைத்தீவு மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது.

சுதர்சனா ஒரு சிக்ஸர் 6 பவுண்டரிகள் அடங்கலாக 35 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 9 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மன்னார் மாவட்ட அணியைச் சேர்ந்த பைரவி ஒரு பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரேணஷா ஒரு பந்துப் பரிமாற்றம் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி தொடர்ந்து இலக்குகளை பறிகொடுத்தமையால் 3.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 22 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் பகீரதி 6 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 7 ஓட்டங்களும் பெறப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அனுசியா ஒரு பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சுதர்சனா, தூபீகா தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள். (ங-86)

## திருநெல்வேலி வை.எம்.எச்.ஏயை பந்தாடியது மன்னார் ஸ்டார் ஈகிள்

**யாழ்ப்பாண மாவட்டத்திலிருக்கும் கழகம் ஒன்று மன்னார் மாவட்டத்துக்குச் சென்று அங்குள்ள கழகத்துடன் விளையாடிய முதலாவது கிரிக்கெட் போட்டி இதுவாகும்**

மன்னார் பெரியகடை ஸ்டார் ஈகிள் அணிக்கும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியானது வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். யாழ்ப்பாண மாவட்டத்திலிருக்கும் கழகம் ஒன்று மன்னார் மாவட்டத்திலிருக்கும் கழகத்துடன் விளையாடுகின்ற முதலாவது கிரிக்கெட் போட்டி இது என்ற வகையில் ஒரு முக்கிய அம்சமாகும்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்த யாழ்ப்பாணம் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணியினருக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஸ்டார் ஈகிள் அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்களான ஞானகரன் மற்றும் பிரியகாந் ஆகிய இருவரினதும் அதிரடியான பந்து வீச்சினை சமாளிக்க முடியாத திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணியினர் ஒரு கட்டத்தில் 19 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தனர். பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்களின் [illegible] நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் 27.3 பந்துப்பரிமாற்றங்களில் தமது அனைத்து இலக்குகளையும் இழந்து 141 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். யாழ்ப்பாணம் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி சார்பாக அதிகபட்சமாக 42 ஓட்டங்களை சுதாகரன் பெற்றுக் கொடுத்தார். ஸ்டார் ஈகிள் அணி சார்பாக ஞானகரன் 4 இலக்குகளையும் அணித் தலைவர் அஜித் 2 இலக்குகளையும், றோய், பிரியகாந், மயூரன் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 142 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினர் முன் வரிசை வீரர்களின் இலக்குகளை சீரான இடைவெளியில் இழந்தாலும் 8 ஆவது இலக்குக்காக ஜோடி சேர்ந்த ஸ்டார் ஈகிள் அணியின் அதிரடி வீரர்களான பிரியகாந் மற்றும் அருண் ஆகியோரின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 96 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று 24.4 பந்துப் பரிமாற்றம் நிறைவில் ஸ்டார் ஈகிள் அணியினர் வெற்றி இலக்கினை அடைந்தனர். ஸ்டார் ஈகிள் அணி சார்பாக அதிக பட்சமாக பிரியகாந் 54 ஓட்டங்களையும் அருண் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ சார்பாக சுழற் பந்து வீச்சாளர் இராசேந்திரம் 4இலக்குகளைக்கைப்பற்றினார்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக பெரியகடை ஸ்டார் ஈகிள் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் பிரியகாந் தெரிவு செய்யப்பட்டார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அசத்தப் போகும் எஸ்.எல்.பி.எல்

இலங்கை பிறீமியர் லீக் அணிகளுக்கான ஏலத்திற்கு சிறந்த வரவேற்புக் கிடைத்துள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அணிகளை குத்தகை அடிப்படையில் வாங்குவதற்கான ஏலத்தினம் நேற்றுமுன்தினம் நிறைவடைந்ததை அடுத்தே இலங்கைக் கிரிக்கெட் சபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தத் தொடரில் 7 அணிகள் பங்குகொள்ளவுள்ள நிலையில், ஒவ்வொரு அணிக்கும் சராசரியாக 4.3 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் ஏலத்தொகையாக கோரப்பட்டுள்ளது. எனினும் வெற்றிபெற்ற ஏலத்தொகையாளர்கள் பற்றிய விவரம் இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே வெளிவரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது ஐ.பி.எல். தொடரோடு ஒப்பிடும் போது மிக மிகக் குறைவானது என்ற போதிலும், ஸ்ரீலங்கா பிறீமியர் லீக்கைப் பொறுத்தவரை சிறந்த வரவேற்பாகக் கருதப்படுகிறது. முதலாவது ஐ.பி.எல். தொடரில் 8 அணிகள் மொத்தமாக 723 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்பட்டிருந்தன. அண்மையில் நிறைவுபெற்ற பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரோடு ஒப்பிடும் போது இது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

பங்களாதேஷ் பிறீமியர் லீக்கில் ஒவ்வொரு அணியும் ஏறத்தாழ 1 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கே விற்கப்பட்டிருந்தன. பங்களாதேஷ் பிறீமியர் லீக், இந்தியன் பிறீமியர் லீக் ஆகியவற்றோடு ஒப்பிடும் போது இலங்கை பிறீமியர் லீக்கில் அணிகள் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. அணிகள் குத்தகைக்கு மாத்திரமே விடப்படுகின்றன. குத்தகைக் காலம் முடிவடைந்த பின்னர் குத்தகைகளை புதுப்பிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. (5)

# யு.டி.ஆர்.எஸ். திட்டத்தை குழப்பியடித்தது இந்தியா

மலேஷியாவின் கோலாலம்பூரில் இடம்பெற்றுவரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் இரண்டாம் நாளில் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்திற்கான (யு.டி.ஆர்.எஸ்) கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றிருந்த போதிலும், அது வாக்கெடுப்பிற்கு விடப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

அண்மையில் லண்டனில் ஒன்று கூடிய சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழுவின் பரிந்துரையை ஏற்று சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றதிகாரிகளின் குழு, நேற்று முன்தினம் சர்வதேச தொடர்கள் அனைத்திலும் நடுவர் மீள்பரிசீலனைத் திட்டம் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற பிரேரணையை சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அமைப்பிடம் சமர்ப்பித்திருந்தது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தலைவர் சரத் பவார் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் நடுவர் பரிசீலனைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்த போதிலும், நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை அனைத்துப் தொடர்களுக்கும் பயன்படுத்துவதா இல்லையா என்பது குறித்துக் கருத்துக்களை அறிவதற்கான வாக்களிப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

வாக்களிப்பு நடத்தப்படாமலேயே குறித்த பிரேரணை கைவிடப்பட்டுள்ளது.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தைப் பயன்படுத்துவதற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நிலையிலேயே இந்தப் பிரேரணை கைவிடப்பட்டுள்ளது.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை சர்வதேச தொடர்கள் அனைத்திலும் பயன்படுத்த வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபையின் நிறைவேற்றதிகாரிகளின் குழு ஏகோபித்த முடிவைப் பெற்றுக் கொண்ட போதிலும், குறித்த முடிவு வெளியிடப்பட்ட உடனேயே நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்திற்குத் தாங்கள் தொடர்ந்தும் எதிர்ப்பாக உள்ளதாக இந்தியக் கிரிக்கெட் சபை தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# சுயநலத்தை கைவிட வேண்டும் இந்தியா

சுயநலத்தைக் கைவிட்டு, சர்வதேச கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபடுமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் நேர்முக வர்ணனையாளருமான ரொனி கிறெய்க் வேண்டுகோள் விடுத்துள்ளார். லண்டனின் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற கொலின் கௌட்றி ஞாபகார்த்த உரையின் போதே ரொனி கிறெய்க் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

உலகக் கிரிக்கெட்டின் தலைவராக பொறுப்புடன் செயலாற்றுமாறு அவர் இந்த உரையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கோரிக்கை விடுத்தார். டெஸ்ட் கிரிக்கெட் தொடர்களின் நீண்ட கால எதிர்காலம், பலம் குறைந்த டெஸ்ட் விளையாடும் நாடுகளின் எதிர்காலம் ஆகியன பாதுகாக்கப்படுவதற்கான வழிமுறைகளில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஈடுபட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பணம் மற்றும் 'ரி-20' தொடர்கள் பற்றிய கவனத்தையே கொண்டிருப்பதாகத் தெரிவித்த அவர், இந்தியக் கிரிக்கெட் சபை ஐ.பி.எல். தொடர்களையும் சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர்களையும் சர்வதேச ஆட்டங்களை விட முக்கியமானவையாகக் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.


பிரச்சினைகளை மேலும் இறுக்குவதாக கிரிக்கெட்டின் பகுதிகளை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தனியாருக்கு விற்றுள்ளதாகத் தெரிவித்த ரொனி கிறெய்க், அதன் நிர்வாகிகளும் முரண்பாடான விருப்புக்களைக் கொண்டு செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் என்.ஸ்ரீனிவாசன், ஐ.பி.எல் தொடரின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமை நிறுவனமாக சீமெந்து நிறுவனத்தின் பணிப்பாளராகச் செயற்படுவதையே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தக் குழப்பங்களிலிருந்து விடுவிப்பதற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் மாத்திரமே முடியும் எனத் தெரிவித்த ரொனி கிறெய்க், கிரிக்கெட்டை இலாபமான ஒரு துறையாக மாற்றியமைக்காகவும், ஓய்வுபெற்ற வீரர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காகவும் இந்தியக் கிரிக்கெட் சபையை பாராட்டியும் கருத்துக்களை வெளியிட்டார்.

கிரிக்கெட் விதிகளைக் கட்டுப்படுத்தும், மாற்றியமைக்கும் பணிகளில் ஈடுபடும் எம்.சி.சி. அமைப்பின் வருடாந்த உரையான இந்த கொலின் கௌட்றி உரையில் கடந்தாண்டு இலங்கையின் குமார் சங்ககார வழங்கிய உரை மிகப்பிரபலம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. இலங்கையின் அரசியல், வரலாறுகள், இலங்கைக் கிரிக்கெட் சம்[illegible] தாங்கி வந்த அந்த உரை - குமார் சங்ககாரவிற்கு கடந்தாண்டி[illegible] பெற்றுக் கொடுக்க முக்கிய காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# வாரிசும் ஆட்டத்துக்கு தயார்




சச்சின் வழியில் அசத்த காத்திருக்கிறார் அவரது மகன் அர்ஜுன். மும்பை கிரிக்கெட் (எம்.சி.ஏ.) சங்கத்தின் 14 வயதுக்குட்பட்டோருக்கான உத்தேச அணியில் இடம் பெற்றுள்ளார்.

இந்திய அணியின் சாதனை வீரர் சச்சின். இவரது மகன் அர்ஜுனும் கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வமாக உள்ளார். இடது கை துடுப்பாட்ட வீரரான இவர், வேகப்பந்துவீச்சிலும் வல்லவர். மும்பையில் உள்ள திருபாய் அம்பானி பள்ளியில் படிக்கும் இவர், சமீபத்தில் உள்ளூர் கழக அணிக்காக பங்கேற்று சதம் (124 ஓட்டங்கள்) விளாசினார்.

இந்த நிலையில், அடுத்த மாதம் எம்.சி.ஏ. சார்பில் 14 வயதுக் குட்பட்டோருக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம் நடக்க உள்ளது. இதற்கான 32 பேர் கொண்ட உத்தேச அணியில் அர்ஜுனும் இடம் பெற்றுள்ளார். இது குறித்து எம்.சி.ஏ., இணைச் செயலர் மற்றும் தேர்வுக்குழு தலைவர் ஷெட்டி கூறுகையில், கோடை கால கிரிக்கெட் தொடரில் அர்ஜுன் சிறப்பாக செயல்பட்டார். ஐந்து ஆட்டங்களில் 250 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்தார். இதன் அடிப்படையில் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜூலை 3 ஆம் திகதி பயிற்சி தொடங்கும், என்றார். (5)

# பெட்ரா, செரீனா முன்னேற்றம்

விம்பிள்டன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றுக்கு, நடப்புச் சம்பியன் செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் உள்ளிட்ட முன்னணி வீராங்கனைகள் முன்னேறினர்.

லண்டன் நகரில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடர் நடக்கின்றது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், செக்குடியரசின் கிவிட்டோவா, உஸ்பெகிஸ்தானின் அமன்முரடோவாவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய கிவிட்டோவா 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.




மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், செக்குடியரசின் பார்போரா ஸ்டிரைகோவாவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய செரினா 6-2, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் சுவனரேவா, ஜேர்மனியின் மோனா பார்தலைச் சந்தித்தார். இதில் சுவனரேவா 2-6, 7-6, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில், இத்தாலியின் பிரான்சிஸ்கா ஷியவோனே, இங்கிலாந்தின் லாரா ராப்சனை சந்தித்தார். இதில் ஷியவோனே 2-6, 6-4, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

பெண்கள் பிரிவில் நடந்த மற்ற முதல் சுற்றுப் போட்டிகளில், ரஷ்யாவின் அனஸ்டாசியா பவுலிசென்கோவா, நெதர்லாந்தின் கிகி பெர்டன்ஸ், கனடாவின் அலெக்சாண்டிரா வோஸ்னியாக், கஜகஸ்தானின் யாரோஸ்லாவா ஷிவ்தோவா, சீனாவின் ஜீ ஜெங் ஆகியோர் வெற்றி பெற்றனர்.



**பிஷ் வெற்றி**

ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அமெரிக்காவின் மார்டி பிஷ், ஸ்பெயினின் ருபென்ராமிரஸ்ஹிடால்கோவைச் சந்தித்தார். இதில் மார்டி பிஷ் 7-6, 7-5, 7-6 என்ற செற் கணக்கில் போராடி வெற்றி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ஜப்பானின் கெய் நிஷிகோரி, கஜகஸ்தானின் மிக்கைல் குகுஷ்கினை எதிர்கொண்டார். இதில் நிஷிகோரி 7-5, 6-3, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

**சானியா ஜோடி வெற்றி**

பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மட்டக் - சாண்ட்ஸ் ஜோடி, ரஷ்யாவின் அலா குட்ரியவ்சேவா, அமெரிக்காவின் சுலோனி ஸ்டீபன்ஸ் ஜோடியைச் சந்தித்தது. இதில் அபாரமாக ஆடிய சானியா ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை– இந்தியா மோதல் மாற்றம்



மாற்றப்பட்டதன்படி அட்டவணை:
ஜூலை 21, 24, 28, 31, ஓகஸ்ட் 4 முதல் ஐந்து ஒரு நாள் ஆட்டங்கள் ஓகஸ்ட் 7 'ரி-20' ஆட்டம்

எதிர்வரும் ஜூலை பிற்பகுதியில் இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டத் திகதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஆட்டத் திகதிகளின் போது மழை பெய்யக்கூடிய வானிலை காணப்படுவதன் காரணமாக ஒவ்வொரு ஆட்டத்துக்கும் மேலதிக ஒரு நாளை ஒதுக்குவதற்கு இலங்கைக் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதன் காரணமாகவே போட்டி அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜூலை 22 ஆம் திகதி ஆரம்பிக்கவிருந்த இந்தச் சுற்றுத் தொடர், எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

(5)





# தோல்வியால் பதவி விலகல்

ஐரோப்பிய கிண்ண உதைபந்துத் தொடரில் ரஷ்ய அணி தோல்வியடைந்ததால் அந்த நாட்டு உதைபந்து சங்கத் தலைவர் செர்ஜி புரெசென்கோவ் பதவி விலகியுள்ளதாக கிரெம்ளின் மாளிகை அறிவித்துள்ளது.

ஐரோப்பிய உதைபந்துத் தொடரில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றிருந்த ரஷ்ய அணி, முதல்சுற்று கடைசி லீக் ஆட்டத்தில் கிரீஸ் அணியிடம் சமநிலை அடைந்தால் கூட அடுத்த சுற்றுக்கு ரஷ்யா முன்னேறியிருக்க முடியும். ஆனால் 1-0 என்ற கோல் கணக்கில் தோற்று அதிர்ச்சி அளிக்கும் விதத்தில் தொடரை விட்டு ரஷ்யா வெளியேறியது. இந்தத் தோல்வி அந்த நாட்டு ரசிகர்களுக்கு கடும் அதிர்ச்சியை அளித்தது. தோல்விக்குப் பொறுப்பேற்று ரஷ்ய உதைபந்து சங்கத்தலைவர் செர்ஜி புரசென்கோவ் தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.



நேற்று முன்தினம் மாஸ்கோவில் கிரெம்ளின் மாளிகைக்குச் சென்ற புரசென்கோவ் ரஷ்ய அதிபர் புடினை சந்தித்து தோல்வி குறித்து விளக்கம் அளித்தார். பின்னர் ரஷ்ய அணியின் வருங்காலம் குறித்து இருவரும் விவாதித்தனர். இந்த விவாதத்தின் போது, தற்போதைக்கு ரஷ்ய உதைபந்து சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து புரசென்கோவ் விலகுவது நல்லது என்று புடின் கருதியதாக சொல்லப்படுகிறது. அதிபரின் அறிவுரையை ஏற்று அவர் ரஷ்ய உதைபந்து சங்கத் தலைவர் பதவியை விட்டு விலகுவதாக கிரெம்ளின் மாளிகை அறிவித்துள்ளது.

(5)

# ஒலிவர் ஜிராட் ஆர்சனல் அணிக்காக ஒப்பந்தம்

பிரான்ஸ் மற்றும் மவுன்ட் பில்லர் வீரர் ஒலிவர் ஜிரார்டை ஆர்சனல் அணி ஒப்பந்தம் செய்துள்ளது.

பிரான்ஸ் 'ஸ்டிரைக்கர்' ஒலிவர் ஜிரார்டு பிரெஞ்சு லீக் முதல்தர அணியான மவுன்ட்பில்லர் அணிக்காக விளையாடி வந்தார். கடந்த 2011-12 பருவகாலத்தில் மவுன்ட்பில்லர் லீக்-1 இல் கிண்ணத்தைக் கைப்பற்ற ஜிரார்டு முக்கிய காரணமாக இருந்தார். கடந்த பருவகாலத்தில் மட்டும் லீக் 1 இல் 36 ஆட்டங்களில் விளையாடி 21 கோல்களை அவர் அடித்திருந்தார்.

இந்த நிலையில் 25 வயது ஒலிவர் ஜிரார்டை, ஆர்சனல் நீண்ட காலத்திற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும் எவ்வளவு தொகைக்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்று இன்னமும் அறிவிக்கப்படவில்லை இது குறித்து ஒலிவர் ஜிரார்டு கூறுகையில், ஆர்சனல் இங்கிலீஸ் பிரீமியர் லீக்கின் மிகச்சிறந்த அணி. இந்த அணிக்காக விளையாட வாய்ப்பு கிடத்திருப்பது பெருமைக்குரிய விடயம். சிறு வயது முதலே ஆர்சனல் அணிக்காக விளையாட வேண்டும் என்பது எனது கனவு, என்றார். எதிர்வரும் ஜூலை 1 ஆம் திகதி ஒலிவர்ஜிரார்டு, ஆர்சனலில் இணைய உள்ளார்.

(5)


மேடையில் இருந்து திரைக்கு
யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக...



நடிப்பு மற்றும் குறும்படம்
தயாரிப்பு பயிற்சி

6 மாத காலம்
சனி,
ஞாயிறு
வகுப்புகள்



நாடகம் மற்றும் குறுந்திரைப்படத்துறையில்
பட்டறிவும் தேர்ச்சியும் உள்ளவர்களால் நடத்தப்படும்

(பயிற்சி முடிவில், ஒவ்வொருவரும் தயாரிக்கும் குறுந் திரைப்படங்கள், ஒழுங்குபடுத்தப்படும் திரைப்பட விழா ஒன்றில் திரையிடப்படும்.)

ACTIVE THEATER MOVEMENT
(in front of palaly teacher's training college)
'Arulagam', Adiyapatham Road, Thirunelveli, Jaffna
0213216222, 0773112692,
activetheatre@gmail.com

## தேவை

★ சிற்றூழியர்கள்
★ காவலாளிகள்
★ பூந்தோட்ட பராமரிப்பாளர்கள்

காலை 7- பி.ப.6 வரை நேரில் வரவும்
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.
(சி/1040) (15-14-6)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய 35 வயதிற்குட்பட்ட பெண் உடன் தேவை. தொடர்பு:- 0776692672
(19799) (15-14-06)

**வேலைக்கு ஆள்கள் தேவை**

பிரபல புத்தகசாலைக்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
(யாழ். மாநகரசபை எல்லைக்குள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு: 0212222573

**விற்பனை பிரதிநிதி தேவை**

யாழ். பிரதேசத்தில் விற்பனைத் துறையில் முன் அனுபவமுள்ள விற்பனை பிரதிநிதி தேவை. தகுதியுடையோர் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்
அஷ்வினி மல்ரி பிளாசா,
74, பலாலி வீதி, கோண்டாவில்,
யாழ்ப்பாணம் (19825) (15-14-06)

**CLTP Unit இல்**

- Java/ SQL Server/ JSP/ Servelet.
- VB.Net/ SQL Server
- PHP/ MySQL/ HTML/ JavaScript
- Web Designing
- C#/ SQL Server (Windows Application)
- ADBMS

புதிய பிரிவுகள் ஆரம்பிக்கின்றன.
204,Brown Road,Jaffna. 0212221807,0772517223

## தேவை

யாழ்.நகரிலுள்ள முன்னணி நிறுவனமொன்றின் உயர் அதிகாரிக்கு தனிப்பட்ட செயலாளர் தேவை. ஆங்கில அறிவுடன் சிங்களம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். ஆண்/ பெண் சுயவிவரக் கோவையுடன் தேசிய அடையாள அட்டையின் போட்டோப் பிரதியுடன் விண்ணப்பிக்கவும்
வயதெல்லை-60 இற்குள்
விளம்பர இல 4369
மே.பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (19819) (15-14-06)

## தேவை - Graphic Designer

*திறமையும் அனுபவமும் உள்ளதா?*
சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
*Graphic Arts,*
No. 12, Sivagurunathar Lane,
Off Kasthuriyar Road, Jaffna.
(சி/1039) (15-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.